# மூன்றாவது மனிதன்





இதழ் 10

ஜனவரி - மார்ச்

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் புலமை மரபுக்கு கிடைத்த சொத்து
# பேராசிரியர் கா. சிவத்தம்பி



2000ம் ஆண்டிற்கான திரு. வி.க. விருதினை தமிழக அரசு நமது பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் இலக்கியத்திற்கும் ஈழத்து இலக்கியத்திற்கும் அதிக பங்களிப்பினை வழங்கி – சமகால ஆய்வாளனாக, புலமையாளனாக, நல் மனிதனாக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஆய்வுத் துறைக்காக, தமிழ்ப் பணிக்காக நமது பேராசிரியர் தமிழக அரசால் கௌரவிக்கப்பட்டது நம்மை பெருமை கொள்ளச் செய்கிறது. இக் கௌரவத்தால் நமது மண், நமது இலக்கியம், நமது புலமைப் பாரம்பரியம் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று நம்மிடையே வாழும் முக்கிய அறிஞராக, ஆய்வாளராக, திறனாய்வாளராக உள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பி – தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது இடையுறாத பணியின் ஊடாக சதா இயங்கிக் கொண்டிருப்பவர்.

அவரின் உழைப்பும் தேடலும் தமிழ்ப் புலமை மரபுக்கு தொடர்ந்தும் கிடைப்பதற்கு மூன்றாவது மனிதன் சிற்றிதழ், பதிப்பகம் சார்பில் வாழ்த்துகிறோம்.

– எம். பௌசர்.

**ஒரு வருடத்திற்கு ஓரிரு தினத்திலாவது ஈழத்துப் படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்களாகிய நாம் ஒரே இடத்தில் சந்திக்க முடியுமல்லவா?**

இப்படியான சந்திப்பு ஒன்றிற்கான ஏற்பாட்டினை நாம் மேற்கொண்டுள்ளோம். இச் சந்திப்பினை சாத்தியப்படுத்துவதற்கு உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் தேவை! உங்களுடன் இதுபற்றி விரைவில் தொடர்பு கொள்வோம்.

மூன்றாவது மனிதன் சார்பாக,
ஏற்பாட்டாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*வாழ்க்கை* *ஓவியம் : றஷ்மி*

– சுந்தர ராமசாமி – மதுசூதனன் – றமீஸா – கே.எஸ்.சிவகுமாரன் – யமுனா ராஜேந்திரன் – திசேரா – எம்.கே.எம்.ஷகீப் – சி.சிவசேகரம் – கா.சிவத்தம்பி – த.தயாபரன் – அஸ்வகோஷ் – தேவ அபிரா – எஸ்போஸ் – சித்தாந்தன் – றஷ்மி – பெண்ணியா – பாத்திமா ஜஹான் – கருணை ரவி – கல்லூரான் – உமாஜிப்ரான் – கைசரவணன் – அறபாத் – பொன் கணேஸ் – பன்னாமத்துக் கவிராயர் – மு.பொன்னம்பலம் – எஸ்.கே. விக்னேஸ்வரன் – சி.அ. யோதிலிங்கம் – கொ.றொ. கொன்ஸ்ரன்ரைன் (அட்டை ஓவியம்) – கடிதங்கள் –


மூன்றாவது மனிதன்

(தனிச்சுற்றுக்காக மட்டும்)
(காலாண்டிதழ்)
இதழ் — 10

ஜனவரி — மார்ச். 2001

ஆசிரியர்-எம்.பௌசர்

தருகை - 60/=

ஆண்டுச் சந்தா (இலங்கை)
ரூபா 260.00 (தபாற்செலவு உட்பட)

தளக்கோலம் (Layout) -ஏ.எம்.றஷ்மி
கணினி வடிவமைப்பு - எம்.எஸ்.எம். றிகாஸ்
கணினி எழுத்துக் கோர்வை - சர்மினி லட்சுமணன்



தொடர்புகளுக்கு:
Editor,
37/14, Vauxhall Lane, Colombo - 02, Sri Lanka.
T.P.: 01-302759
E-mail : 3man@sltnet.lk



காசுக்கட்டளை அனுப்புவோர்: M.Fowzer, Slave Island Post Office எனக் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை கலைந்து தேடி

கைகளை ஓங்குவது போலிருக்கும்.
பயமுறுத்தும் நோக்கம் இல்லை.
முன்னும் பின்னுமாய் எத்தனை நினைவுகள்!

துயரமும் வேதனையும் நிரம்பிய தடங்களில்
பயணம் போன ஏராளம் கதைகளில்
சிரிக்க முயன்று தோற்ற கணங்களில்
பிடுங்கப்பட்ட வாழ்வு சிரித்தது.
ஆற்றப்படாத சிதையாய் ஆன்மா!
எந்த உண்மை இணைத்தது.
எந்தப் பேருண்மை பிரித்தது.
சொல்பயின்று பொருள் பயின்று
இரக்கமற்ற கதையளந்து
பாதி தோல்வியும் பாதி வெற்றியுமாய்
திரும்பிய அவை நிமிர்வதற்கிடையில்
தலைமுறைகள் மண்ணில் புரண்டன.

சிதைக்கப்பட்ட தளத்திற் கிளம்பில்
சொற்களுக்கு மதிப்பில்லை!
இருளாய்ப்படரும் மூப்பும் பிணியும்!

ஞானந்தேடிப் போன தொன்று.
திரவியந்தேடிப் போன தொன்று.
பின்னும் போனவை போக
பிணியும் நீண்டநாட் பயணமும் வாங்கிப்
புறப்பட்டுப் போனதெங்கே!

நிலவழிந்து பனி தொடங்கும் அதிகாலை!
மெல்லென இயற்றப்பட்ட
முதற்காற்றின் தழுவல்!
கணஞ் சிலிர்த்தது மேனி!
பயின்ற தளங்கள் தளர்ந்து கிடந்தன.

தயை கூர்ந்து
என் ஆன்மா நாணமுறு
சபித்து விடுங்கள்
இன்று
விடை கோரும் கடிதங்களை வரைவேன்.

# நதிகள்

அதிகாலையில்
அமைதியை கிழித்து இயற்றப்படும்
முதற்காற்றைப் போல் உன் நினைவுகள்!

என் ஆத்மா பாடலிசைக்கும் நேரம்
நீயில்லையென உணர்ந்த போது
நான் வேதனையுற்றேன்.

நீர் ஊற்றுக்களை
உள்ளுணரும் பழங்கால மனிதன் போல்
நீண்ட காலம் அலைந்தேன்.
வனாந்தரங்களின் மணற்படுகையின் கீழ்
நதிகள் பாய்வதை நான் கண்டு கொண்டேன்.



**அஸ்வகோஷ் - இரண்டு கவிதைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதனுக்கும் கருத்துக்குமான உறவு வலிமையானது. உணர்ச்சித் தளங்களில் வேர்விட்டு நிற்பது. அதனால்தான் – கருத்துகள் சார்ந்த முறிவு மனிதனை மிக மோசமாகப் பாதிக்கிறது"

## - சுந்தர ராமசாமி -

நீங்கள் எழுத்தாளனாய் வாழ்வைத் தொடங்கி, இத்தனை காலம் எழுத்து வாழ்வில் பயணம் செய்து நிறைய அனுபவங்களைப் பெற்ற பின்பு இன்று உங்கள் எழுத்து வாழ்வை எப்படிப் பார்க்கிறீர்கள்?

நான் எழுதத் தொடங்கிய பின் ஐம்பது வருடங்கள் ஓடிவிட்டன. கனவுபோல் நழுவி விட்டிருக்கிறது காலம். எப்போதும் என் எழுத்து வாழ்க்கை சீராகவோ ஒழுங்காகவோ இருந்தது என்று சொல்ல முடியாது. நிறைய மேடு பள்ளங்கள். தத்தளிப்புகள். அவதூறுகளை மௌனத்தைக் கடைப்பிடித்து எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். அவமானம். இவையெல்லாம் இருந்திருக்கின்றன. சூழல் கழுத்தை நெரித்த போது ஒருசில வருடங்கள் எழுதாமலும் இருந்திருக்கிறேன். எழுத்தை விட்டு விடுவோமா என்றும் யோசித்திருக்கிறேன். பிழைப்புக்கான வேலை நிர்ப்பந்தங்கள் எழுத்துக்கான நேரத்தை ஒழித்துக் கட்டிவிட்ட காலமும் உண்டு. எழுத்தைக் குறைந்த பட்ச வாசகர்களிடம் கூடக் கொண்டு போக முடியாத திணறல் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. என் எழுத்துகள் பலவும் ஐநூறு அல்லது ஆயிரம் பிரதிகள் அச்சேற்றப்படும் சிற்றிதழ்களில்தான் வெளிவந்தன.

இப்போது நிலைமையில் சில மாற்றங்கள். முழு நேரமும் எழுத்து அல்லது வாசிப்புத்தான். வேறு பொறுப்புகள் இல்லை. மன ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் முன்னைவிடவும் எவ்வளவோ மேல். வயது ஆக ஆக ஆரோக்கியம் கூடிக்கொண்டே போகிறது. ஆகச் சிறிய வயதில்தான் ஆக மோசமான நோயாளியாக இருந்தேன்.

எதிர்மறையான விமர்சனங்களையும் அவற்றின் சூட்சுமம் பார்த்துத் தரம் பிரிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன். எழுத்தாளர்களின் தலைநகரமான சென்னையிலிருந்து வெகு தொலைவில் ஒரு வித்தியாசமான பின்னணியில் வாழ்ந்து வருவதால் இலக்கிய அரசியலின் சூட்சுமங்களை வெகுவாகப் பிந்தித்தான் புரிந்துகொண்டேன். ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் வைத்துப் பார்க்க இப்போது கற்றுக்கொண்டு விட்டேன். மிகுந்த நம்பிக்கையுடன், நிறையச் செய்ய வேண்டும் என்ற ஆசையுடன் இருக்கிறேன். ஆசைகள் நிறைவேற சூழலின் ஒத்துழைப்பும் வேண்டும்.

நீங்கள் எழுத ஆரம்பித்த காலத்தில் இருந்த தமிழ்ச் சூழலுக்கும், பின்வந்த காலங்களில் தமிழ்ச் சூழல் எதிர்கொண்ட சவால்களை முகம் கொடுத்து முன் சென்றிருக்கிறது என்று நம்புகிறீர்களா?

மாற்றங்கள் சிறுகச் சிறுக நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. பெரிய பாய்ச்சல் என்று சொல்ல முடியாது. தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கில் கூட நீங்கள் கவனித்திருக்கலாம். யுவன் சந்திரசேகர் என்ற கவிஞர் கவிதை பற்றிய அவரது 'விசேஷத் தத்துவத்தைப்' பேசும்போது கூட இருநூறு, முன்னூறு பேர் அதைக் கேட்கிறார்கள். என் சிறுவயதில் ம.பொ.சி., ஜீவா, அண்ணா போன்றவர்கள் இலக்கியத்தை அரசியலுடன் கலந்து பேசும்போதுதான் இவ்வளவு கூட்டத்தைப் பார்த்திருக்கிறேன். ஆழமான, கடினமான இலக்கியக் கட்டுரைகளின் ஜெராக்ஸ் பிரதிகளைப் பெறத்தான் ஒரே கூட்டம், எதற்கெடுத்தாலும் புரியவில்லை என்ற பேச்சு குறைந்து கடினமான விஷயங்களையும் அதிக உழைப்பைச் செலுத்திப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் தலைதூக்கி இருக்கிறது.

நவீனத்துவத்திற்குப் பிந்திய இலக்கியப் போக்குகளைப் பற்றிய பேச்சு – அமைப்பியல், பின்னமைப்பியல், பின்நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம் போன்றவை – இந்திய மொழிகளிலேயே தமிழில் அதிகமாக இருக்கலாம். அல்லது அதிகமாக இருக்கும் மொழிகளில் தமிழும் ஒன்றாக இருக்கலாம்.



சுந்தர ராமசாமி - தமிழின் மிகக்குறிப்பிடத்தக்க ஆளுமை - தமிழ்ச் சிறுகதை, நாவல், உரைநடை இலக்கியத்தில் அதிக கவனம் பெற்றவர். "ஜே.ஜே. சில குறிப்புகள்" நாவலின் மூலம் தமிழ் நாவல் உலகில் பெரும் சிந்தனை அதிர்வை உண்டுபண்ணியவர். "புளியமரத்தின் கதை", "குழந்தைகள் பெண்கள் ஆண்கள்" என்பன இவரது ஏனைய இரண்டு நாவல்களுமாகும். "காற்றில் கலந்த பேரோசை", விரியும் ஆழமும்தேடி" என்பன இவரது வெளிவந்துள்ள கட்டுரைத் தொகுப்புகளாகும். "பசுவய்யா" என்கிற பெயரில் கவிதைகளும் எழுதியுள்ளார். "காலச்சுவடு" சிற்றிதழ் நிறுவனரும் தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவருடைய அனைத்து சிறுகதைகளையும் உள்ளடக்கிய மிகப்பெரும் சிறுகதைத் தொகுப்பான "காகங்கள்" சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது.

சந்திப்பு - எம். பௌசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'பிச்சமூர்த்தியின் கலை — மரபும் மனித நேயமும்'. படைப்பாளியின் ஆளுமை பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க ஆய்வு ஒன்றைத் தந்தவர் நீங்கள். இப்போது புதுமைப்பித்தனின் சிறுகதைகளை காலச்சுவடு தொகுப்பாக மிகவும் கனதியாக வெளிக்கொண்டு வந்துள்ளீர்கள். தமிழ்ச் சூழலில் இவ்விரு ஆளுமைகளின் தேர்வுக்கான காரணம் என்ன?**

புதுமைப்பித்தனின் படைப்புகளைச் சிறப்பாகப் பதிப்பித்திருப்பவர் ஆ.இரா. வெங்கடாசலபதி. நான் அதற்கு முன்னுரை மட்டுமே எழுதியிருக்கிறேன்.

புதுமைப்பித்தன் சிறுவயதிலேயே என்னை ஆட்கொண்டவர். இதைப் பற்றிப் பல பேட்டிகளிலும் கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கிறேன். அவரது கதையான மகாமசானத்தைப் படித்தபோது அது தந்த எதார்த்த உணர்வு மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் என்னைப் பாதித்தது. மிகுந்த கிளர்ச்சி அடைந்தேன். எதார்த்தத்திற்கும் மொழிக்குமான உறவில் கூடிவந்த அழகியல் தந்த கிளர்ச்சி அது. ரொமான்டிசிஸத்துக்கு எதிரான ஒரு மனோபாவம் சிறுவயதிலிருந்து தொடர்ந்து எனக்கு இருந்து வருகிறது.

தமிழ்ச் சூழலின் வகைமாதிரிகளைப் புதுமைப்பித்தன்போல் பதிவு செய்தவர் எவரும் இல்லை. இந்த வகைமாதிரிகளின் வீச்சும் விரிவும் எனக்கு மிக முக்கியமானவை. மேலலேயிருந்து கீழே இருப்பவர்கள் வரையிலும் மேன்மைகளிலிருந்து தாழ்வுகள் வரையிலும் இலக்கியப் படைப்புக்கு உகந்த விஷயம் என்பதை அவர்தான் நிரூபித்தார். பகுதிகள் என்றில்லாமல் மொத்த வாழ்க்கையையும் முக்கியத்துவப் படுத்தினார். அவர் படைப்புகளில், 'வாழ்க்கையை நேரடியாகப் பார்' என்ற செய்தி இருக்கிறது. இந்தச் செய்தியும் எனக்கு முக்கியமானது. தமிழ்ச் சமூகத்தின் தாழ்வும் கனவும் கற்பனையும் சார்ந்த பார்வை. நீண்ட கவிதை மரபின் பின் விளைவு இது. சமயம், புராணம் ஆகியவையும் இவற்றில் கலந்து கிடக்கின்றன. தமிழர்களின் ரொமான்டிக் மனோபாவத்தைத்தான் சகல வணிகச் சக்திகளும் — இதழ்கள், திரைப்படங்கள், அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள், தொலைக்காட்சி — சுரண்டிக்கொண்டிருக்கின்றன. மொழி உருவாக்கம் ரொமான்டிசிஸம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. புதுமைப்பித்தனின் பார்வை இன்றையத் தேவை என்று நான் நம்புகிறேன்.



ஈழத்து இலக்கியம் பற்றிச் சொல்வதென்றால் கவிதைப் படைப்புகளிலும் விமர்சனச் சிந்தனைகளிலும் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையைத்தான் முன்னிலைப்படுத்த வேண்டியிருக்கிறது. சமீப காலங்களில் ஈழத் தமிழர்களுக்கு நிகழ்ந்த வாழ்க்கை நெருக்கடிகள் மிகப் பெரிய நாவலுக்கான களத்தை விரிப்பவை. அவ்வகையான முயற்சிகள் தோன்றாமல் இருப்பது புரிந்து கொள்ள முடியாத கேள்வியாகவே இருக்கிறது.

எழுத்தாளர்கள் தங்கள் அறச் சாரங்களை இழந்துகொண்டிருக்கிறார்கள். குறுக்கு வழியில் வெற்றி என்பதுதான் இன்றைய ஸ்லோகம். புகழ் ஒளியில் சதா இருந்துகொண்டிருக்க வேண்டும். பரிசுகள் வந்து சேருபவை அல்ல: வாங்கப்படுபவை. அரசியல் சமரசங்களின் மூலம்தான் எழுத்தாளன் நிகழ்கால வெற்றிகளைப் பெற முடியும். இவ்வகையான சிந்தனைகள் தலைவிரித்தாடுகின்றன. இவற்றிற்கு நேர் எதிரான மன நிலையில் வாழ்ந்தவர் ந.பிச்சமூர்த்தி. அவரிடமிருந்த 'கல்ச்சர்' ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு இன்று அவசரத் தேவையாக இருக்கிறது. தாழ்ந்து போவது அல்ல: தன்மானத்தை விட்டுக் கொடுக்காத பிடிவாதம்தான் எழுத்தாளனுக்குத் தேவை. போராட்டம்தான் அவன் வழியே தவிர சமரசம் அல்ல. கனமான புத்தகங்களைத் தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தவர் பிச்சமூர்த்தி. ஆனால் அவர் தன் வாசிப்பை விளம்பரப்படுத்திக் கொள்ளவேயில்லை. தான் எழுதியுள்ள படைப்புகளை முன்னிலைப்படுத்த தானே உழைப்பது எழுத்தாளனுக்கு அவமானம் என்று அவர் நம்பினார். நாளிதழ்களில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது உடன் பணிபுரிபவர்களுக்குக்கூட அவர் ஒரு கவிஞர் என்பது தெரியாது.

இன்றையச் சூழலைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது பிச்சமூர்த்தியைப் போன்ற ஒரு கலைஞர் வெகு சமீபத்தில் தமிழகத்தில் வாழ்ந்திருந்தார் என்பதை நம்பவே கஷ்டமாக இருக்கிறது. அவருடன் உறவு கொண்டிருந்தவர்கள் எல்லோரும் மிகவும் சாதாரணமானவர்கள். பண்டாரங்கள். பைராகிகள், கைரேகை பார்ப்பவர்கள், ஜோசியர்கள், அரைகுறை வைத்தியர்கள், பிச்சையெடுப்பதற்காகத் துறவறம் பூண்டவர்கள், கோயில், குளம், மண்டபங்களில் உட்கார்ந்து தங்கள் வாழ்நாளைக் கழித்தவர்கள், சிறு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள்.

மரபுக் கவிதைக்கும் புதுக்கவிதைக்குமான பாலத்தை நிர்மாணித்தவர் அவர்தான். அலட்டிக்கொள்ளாமல் அதை வெகுவாகச் செய்தார். இன்று எனக்கு அவர் கவிதைகளில் பெரிய ஈடுபாடு இல்லை. ஆனால் குறிப்பிட்ட காலத்தில் அவர் ஆற்றிய பங்கு முக்கியமானது. சிறுகதை ஆசிரியர்களில் இன்றும் அவருக்கு மிக முக்கியமான இடம் உண்டு.

**உங்கள் படைப்பு வாழ்வில் நீங்கள் கவிதை, சிறுகதை, நாவல், உரைநடை, மொழிபெயர்ப்பு போன்றவைகளில் காலூன்றி நின்றிருக்கிறீர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவற்றில் உங்கள் சிந்தனையை மிகத் தெளிவாக வெளிப்படுத்த ஏற்ற உலகமாக எதை அதிகமாகக் கருதுகிறீர்கள்?**

முதலில் சிறுகதைகளை எழுதத் தொடங்கினேன். அப்போது வேறு இலக்கிய உருவம் எதுவும் சாத்தியம் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. அப்பா என்னை உதவாக்கரை என்று நினைத்தார். அதை நியாயமான மதிப்பீடு என்றுதான் சொல்வேன். இலக்கியத்தில் ஒன்றைச் சாதித்து, வெளி உலகத்தில் என்னை ஏற்றுக்கொள்ளும்படி செய்து, அப்பாவைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்துத்தான் சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன். இடதுசாரி இயக்கத் தொடர்பும் அவர்களுடைய தத்துவங்களில் நான் கொண்டிருந்த நம்பிக்கையும் படைப்புக்கு ஒரு சமூக நியாயத்தை உருவாக்கித் தந்திருந்தன.

அதன் பின் 'ஒரு புளியமரத்தின் கதை' நாவலை எழுதினேன். க.நா.சு.வின் தூண்டுதலால்தான் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதத் தொடங்கினேன். இலக்கிய உருவங்கள் சார்ந்த நம்பிக்கைகள் எனக்கு முக்கியமானவை. ஒரு உருவத்தை மற்றொரு உருவத்துடன் பொறுப்பின்றிக் குழப்பியடிப்பதில் விருப்பமில்லை. ஒவ்வொரு உருவத்திற்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அழுத்தம் இருக்கிறது. ஒரு முன்னுரிமை இருக்கிறது. ஆனால் எந்த உருவத்தில் அதிக நம்பிக்கை என்று கேட்டால் என் குறிக்கோள் சார்ந்து எல்லா உருவங்களிலும் என்றுதான் சொல்வேன். தெரிந்தோ தெரியாமலோ நோக்கம் அல்லது விஷயம்தான் உருவத்தைத் தேர்ந்தெடுக்கிறது. இருப்பினும் வாழ்வின் புதிர்களை ஆராய நாவல் தரும் வசதியைப் பிற உருவங்கள் தராததால் நாவல்மீது தனியான மரியாதை வைத்திருக்கிறேன்.

**தமிழில் நீண்டகாலமாக எதார்த்தவாதப் பண்பு இருந்து வந்திருக்கிறது. இப்போது எதார்த்தவாதப் பண்பு தொடர்பான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தமிழில் ஒரு எழுத்தாளன் தான் நினைத்ததை முற்று முழுதாக எழுதவுமில்லை, சொல்லவு மில்லை என்கிறார்கள். இந்த எதார்த்தவாதம் என்பது ஒரு தேர்வுக்கு உட்பட்ட அல்லது சமூக மனோபாவத்தை ஏற்று சுத்திகரிக்கப்பட்ட இலக்கிய முயற்சிதானா?**



படைப்பில் புறத்தைப் பற்றிய பேச்சு எல்லாம் அகத்தை ஊடுருவத்தான். தோற்றம் சாரத்துக்கு இட்டு செல்ல வேண்டும். எதார்த்தவாதம் என்பது ஒரு களத்தின் பொது பெயரே தவிர ஒரு படைப்பின் குணத்தை தீர்மானிக்கக் கூடியது அல்ல. ஒரு எதார்த்தத் தளத்தைச் சேர்ந்த ஒரு எழுத்து நம்மை ஆட்கொள்ளும் போது அதே தளத்தைச் சேர்ந்த மற்றொன்று மிகுந்த சலிப்பைத் தருகிறது. ஊடுருவல்தான் முக்கியம். எதார்த்தத்தளம் சார்ந்த ஊடுருவல் தமிழ் வாழ்வின் ஸ்திதிக்கு இன்று பொருந்தி வருகிறது. அதன்மீதான என் விருப்பம் தமிழ் வாழ்வைக் கடுமையாகப் பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோள் சார்ந்தது.

தமிழில் எதார்த்தவாதிகள் எவரும் அதையே பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கவும் இல்லை. 'ஆறில் ஒரு பங்கு', 'சின்னச் சங்கரன்' போன்ற கதைகளை எழுதிய பாரதிதான் 'ஞானரத'த்தையும் எழுதியிருக்கிறான். 'பொன்னகரம்', 'கவந்தனும் காமனும்' போன்ற கதைகளை எழுதிய புதுமைப்பித்தன் தான் 'ஞானக்குகை', 'பிரம்ம ராக்ஷஸ்' போன்றவற்றையும் படைத்திருக்கிறான். கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி போன்றவர்களும் எதார்த்த வாதத்தைத் தாண்டிப் பல கதைகளை எழுதியிருக்கிறார்கள். மௌனி எதார்த்தவாதத்துக்குள் நுழையவே இல்லை. எதார்த்தம் தாண்டிய படைப்பு நம்பிக்கைகளைப் புதிய கண்டுபிடிப்புகள் போல் இப்போது சிலர் பேசுவது உண்மை அல்ல.

என் 'பல்லக்குத் தூக்கிகள்' தொகுப்புகூட எதார்த்த வாதக் கதைகளைச் சேர்ந்தது அல்ல. இப்போதைய என் கதைத் தொகுப்பின் தலைப்பான 'காகங்கள்' கதையையும் ஒரு எதார்த்தவாதக் கதை என்று சொல்ல முடியாது. இவை யெல்லாம் மேல்நாட்டுத் தத்துவங்களைப் படித்து விட்டுப் போலி செய்தவையும் அல்ல. இந்திய மரபில் இல்லாத மாந்த்ரீக எதார்த்தம் வேறு எந்தத் தேசத்திலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எதார்த்தவாதத்தின் பாதிப்பைப் பெற்ற ஒரு மூளையால்தான் அமைப்பியல்வாதம், பின்னமைப்பியல்வாதம், பின்நவீனத்துவம் போன்ற தத்துவங்களைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். எதார்த்தவாதம் வழியாகத்தான் நீங்கள் அவற்றைத் தாண்டிச் செல்லும் தத்துவங்களுக்கும் போக வேண்டும். நம் வாழ்வின் ஸ்திதியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாத, மிகச் சிக்கலான தத்துவங்களைப் பேசுவதன் மூலம் பேசுபவர்களுக்கு உபயோகப்படும் அதிகார மையங்களை உருவாக்கலாம். தமிழ் வாழ்க்கையில் எந்தப் பாதிப்பையும் நிகழ்த்த முடியாது. தமிழ்ச் சூழலில் அரசியல் சார்ந்த இன்டெலச்சுவல் வர்க்கத்தின் அதிகபட்ச எல்லை பாரதிதாசன். புதுமைப் பித்தன் இன்றும் அவர்களுக்கு ஒரு புதிர். இவை யெல்லாம் தமிழ் எதார்த்த தங்கள். புதிய சிந்தனைகளின் அறிமுகங்களை நான் வரவேற்கிறேன். அந்தச் சிந்தனைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவற்றின் பாதிப்பையும் பெற வேண்டும். அந்தச் சிந்தனைகளுக்கு முற்பட்டவையெல்லாம் காலாவதியாகிவிட்டன என்ற பாவனை உண்மையில்லை. 'ஆசிரியர் இறந்துவிட்டார்'

என்று கூறுகிறவர்கள் ஆசிரியருக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் விமர்சனங்களைத்தான் இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். படைப்பாளி அதீத முக்கியத்துவம் பெற்று வருகிறான் என்று கூடச் சொல்லலாம். எல்லாப் பிரதியும் ஒன்று என்று சொன்னவர்கள் பாரதியைப் பற்றியும் புதுமைப்பித்தனைப் பற்றியும் இன்றையப் படைப்பாளிகளில் பொருட்படுத்தத் தகுந்தவர்களைப் பற்றியுமே பேசுகிறார்கள்.

**தமிழ் நாவல் வெளிப்பாட்டு முறையில் உங்கள் 'ஜே.ஜே: சில குறிப்புகள்' ஒரு முக்கியமான திருப்பம். இது இயல்பாக நடந்ததா அல்லது முற்கற்பிதத்துடனான எழுத்துச் செயற்பாடா?**

பெருமளவு இயல்பாக நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அதை எழுதி முடித்த நிலையில் தமிழ் நாவல் மரபில் அது வித்தியாசமானது என்று உணர்வு மட்டும்தான் எனக்கு இருந்தது. நண்பர்களும் முன் பின் தெரியாத வாசகர்களும் சாதகமான அபிப்பிராயங்களைக் கூறத் தொடங்கிய போது நான் எதிர்பாராத காரியம் நடந்திருப்பதாக உணர்ந்தேன். விமர்சகர்கள் அதைக் கடுமையாகக் கண்டிக்க ஆரம்பித்தார்கள். வாசகர்களின் வரவேற்பு வழக்கத்திற்கு

> **எழுத்தாளர்கள் தங்கள் அறச் சாரங்களை இழந்துகொண்டிருக்கிறார்கள். குறுக்கு வழியில் வெற்றி என்பதுதான் இன்றைய ஸ்லோகம். புகழ் ஒளியில் சதா இருந்துகொண்டிருக்க வேண்டும். பரிசுகள் வந்து சேருபவை அல்ல; வாங்கப்படுபவை. அரசியல் சமரசங்களின் மூலம்தான் எழுத்தாளன் நிகழ்கால வெற்றிகளைப் பெற முடியும். இவ்வகையான சிந்தனைகள் தலைவிரித்தாடுகின்றன. இவற்றிற்கு நேர் எதிரான மன நிலையில் வாழ்ந்தவர் ந.பிச்சமூர்த்தி.**

மாறாக இருந்தது. அபிப்பிராயங்களை விமர்சனம் சிறிய அளவில்கூடப் பிரதிபலிக்கவில்லை என்பது என் அனுபவம்.

**மொழியையோ, சிந்தனையையோ தமிழ் நாவலில் இப்படி யாரும் வெளிப்படுத்தவில்லை. நாம் இதனைத் தமிழில் செய்வோம் என்றாவது நினைக்கவில்லையா அல்லது தமிழ் நாவல் வெளிப்பாட்டு முறையில் இது ஒரு புதுக் காலடி என்றாவது எண்ணவில்லையா?**

பிறர் செய்து வைத்திருக்கும் காரியங்களையோ நான் செய்து முடித்துவிட்ட காரியங்களையோ திரும்பச் செய்யக் கூடாது என்பதில் எப்போதும் உறுதியாக இருந்திருக்கிறேன். படைப்பு என்பது புதிது. இதற்கு முன் இல்லாதது. கோடிக்கணக்கான குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனால் இப்போது பிறந்திருக்கும் குழந்தை இதற்கு முன் பிறந்ததே இல்லை. இயற்கையிலேயே படைப்பு இப்படி. நிகழ்த்தியதை மீண்டும் நிகழ்த்திக் காட்டுவது பழக்கம் அல்லது சகஜம்.

'ஒரு புளியமரத்தின் கதை' வெளிவந்த போது குடும்பங்களுக்கு வெளியே உருவாக்கப்பட்ட நாவல் என்று எதுவும் இருக்கவில்லை. மனிதனுக்கும் கருத்துகளுக்குமான உறவு வலுமையானது. உணர்ச்சித் தளங்களில் வேர் விட்டு நிற்பது. அதனால்தான் கருத்துகள் சார்ந்த முறிவு மனிதனை மிக மோசமாகப் பாதிக்கிறது. 'ஜே.ஜே: சில குறிப்புகள்' மனிதனுக்கும் கருத்துகளுக்குமான உறவைப் பற்றிச் சொல்கிறது. 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவல் குடும்பத்துக்கும் மனிதனுக்குமான உறவைச் சொல்கிறது என்று வைத்துக்கொள்ளலாம். குடும்பம் ஒரு நிறைவான அமைப்பு தானா? அதன் தோற்றத்திற்கும் உள்ளார்ந்த செயல்பாடுகளுக்கும் இசைவு உண்டா? குறையுணர்ச்சியுடன் தான் மனிதன் குடும்பத்துக்குள் தத்தளித்துக் கொண்டிருக்கிறானா? இதுபோன்ற பல கேள்விகள் இருக்கின்றன. உள்ளூர இருந்த ஆவேசம்தான் புதிய படைப்புகளைப் பார்க்கத் தூண்டிக்கொண்டே போயிருக்கிறது. பெரிய திட்டங்கள் என்று இல்லை. புதுமைக்காகப் புதுமை என்பதும் இல்லை. சிறிய அளவிலான யோசனைகள்தான்.

**படைப்புத் தொடர்பான தீவிர ஆவேசம் தெரிகிறதே உங்களிடம்...**

அந்த ஆவேசம் எப்போதும் இருந்து இப்போதும் இருப்பதுதான். ஒரு மாற்றத்தை நிகழ்த்த வேண்டும் என்ற ஆசையிலிருந்து பிரிக்க முடியாத ஆவேசம் அது. உலக இலக்கியப் படத்தில் சிறிய நாடுகள், சிறிய மொழிகள் கூட அவற்றுக்குரிய இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. தமிழ் மரபும் செழுமையும் கொண்ட மொழி. இங்கும் பெரிய காரியங்கள் நடக்க வேண்டும். எழுதுவது மட்டுமே படைப்பு என்று நான் நினைக்கவில்லை. படைப்புக்கு வெளியே சக மனிதனிடம் நாம் வெளிப்படுத்தும் சிந்தனைகள், வாசிப்பில் நாம் கொண்டிருக்கும் ஆர்வம், சுயப்பரிசோதனை, சொல்லையும் செயலையும் இயன்ற அளவு இணைப்பதற்கான முயற்சி, ஜீவராசிகள் அனைத்தின்மீதும் கொள்ளும் பரிவு எல்லாமே படைப்பு மனத்திலிருந்து தோன்றுபவைதான்.

**உங்கள் எழுத்தை வாசிக்கும்போது முரண்பாடுகள்மீதான உணர்வுகளையே காண முடிகிறது. தனிமனிதர்கள்மீதான முரண்பாடு, தத்துவங்கள்மீதான முரண்பாடு. உங்களுக்குத் தனி மனிதன், சமூகம், சமூக நிறுவனங்கள், தத்துவங்கள் எதுவுமே திருப்தியைத் தரவில்லையா?**

சமூக வாழ்க்கையில் எனக்குத் திருப்தி இல்லை. தத்துவங்கள் சார்ந்தும் சமூக ஒழுக்கங்கள் சார்ந்தும் மனிதன் போடுகிற வேஷம் மிகப் பெரிய சீரழிவை உருவாக்குகிறது. உயர்வானவையும் மனித ஸ்பரிசம் படும்போது கீழிறக்கம் கொள்கின்றன. பதவியைப் பிடிக்கத் தத்துவங்களைப் பயன்படுத்தும்போது உபயோக மதிப்பு உள்ளார்ந்த சாரத்தை அரித்து விடுகிறது. பார்வையற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கு வெளிநாட்டிலிருந்து வரும் உணவை ஆசிரியர்கள் திட்டமிட்டுத் திருடுகிறார்கள். மனிதன் மேலானவன் என்பதை ஒரு ஸ்லோகமாக்க நான் விரும்பவில்லை. மனிதநேயம் படைப்பாளி நம்பித் தீர வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அல்ல. படைப்பாளியிடம் அனுபவம் சார்ந்த பார்வைதான் வலிமையாக இருக்க வேண்டும். சகல பாதிப்புகளும் அந்த அனுபவத்துக்குள் இருக்கின்றன. மனித ஸ்திதியை அது எவ்வளவு கேவலமாக இருக்கும் நிலையிலும் புரிதல் சார்ந்து மேலேடுத்துச் சென்றுவிட முடியும். பிரக்ஞைபூர்வமான வேஷதாரிகளைத் திருத்துவது மிகக் கடினம். வேஷதாரிகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகம் தமிழ்ச் சமூகம். கபடமற்ற ஜனங்களின் சரிவு அல்ல பிரச்சினை. திட்டமிட்டு ஏமாற்றும் சக்திகளின் கூட்டு ஒப்பந்தம்தான் பெரிய பிரச்சினை.

**நீங்கள் உணர்ச்சிபூர்வமாக இருந்தாலும் உங்கள் மொழி ஆளுகையில் அறிவின் மொழியினூடாக உங்கள் சிந்தனை வெளிப்படுவது எப்படி சாத்தியமாகிறது?**

தமிழ்ச் சூழலில் உணர்ச்சியின் பீறிடல்களைச் சிறுவயதிலிருந்தே கவனித்துக் கொண்டிருக்கிறேன். புகழும் பணமும் பதவியும் தேடித் தர ஏற்ற விற்பனைப் பண்டமாகவே உணர்ச்சியின் பீறிடல் தமிழ்ச் சமூகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசியல் மேடைக் கத்தல்கள், தமிழ்த் திரைப்படங்களில் கண்ணீரின் பிரவாகம், வணிக எழுத்தாளர்களின் நெகிழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் எதிராக நான் என் உணர்ச்சியைச் செம்மை செய்துகொள்ள விரும்பினேன். வாசகர்களைச் சிந்திக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களிடம் சுயமான விமர்சனம் உருவாகும். இந்த விழிப்புநிலையிலிருந்துதான் ஜனநாயகத்தை வலிமைப்படுத்தும் செயல்பாடுகள் தோன்றுகின்றன. அறிவு சார்ந்த மொழி உருவாகும் போது இன்னும் ஆரோக்கியமான விவாதங்களை நடத்த முடியும். இப்படியெல்லாம் யோசிக்கிறேன்.

**மதங்களில், தத்துவங்களில் நம்பிக்கை இழந்துவிட்டோம் என்பது உங்கள் குரலாக உள்ளது. மனிதர்கள் பற்றிப் பிடிப்பதற்கு ஏதாவது ஒரு ஆதாரம் தேவையில்லையா? உங்கள் அனுபவம் சார்ந்து இதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

மனிதர்களின் சமய நம்பிக்கைகளுக்கு எதிராக நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அவன் விரும்பும் சமயத்தில் அல்லது தத்துவத்தில் அல்லது சிந்தனைகளில் நம்பிக்கை கொள்ளட்டும். எவற்றினூடாகவும் மனித வாழ்க்கை சார்ந்த விமர்சனமும் கனவும் ஒருவனுக்கு இருக்குமென்றால் அவனுடன் விவாதம் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் எந்தத் துறையைச் சேர்ந்த போலிகளுடனும் நான் விவாதத்தில் ஈடுபட முடியாது. அது என்னையே அழித்துக் கொள்வதாகும். முற்போக்கு, பிற்போக்கு சார்ந்த பழைய இலக்கணங்கள் எல்லாம் சுக்கு நூறாகத் தெறித்துவிட்டன. சங்கராச்சாரி ஜாதி புத்தி கொண்ட பிற்போக்குவாதி என்பது என் எண்ணம். ஜெயலலிதா பக்தி கொண்ட வீரமணி எந்த விதத்தில் முற்போக்குவாதி? பொதுவுடைமைவாதிகள் – இவர்களில் பலர் முக்கியமான தமிழ் எழுத்தாளர்கள். கால் நூற்றாண்டேனும் சகல மனித ஒடுக்கல்களையும் அறிந்த நிலையில் சோவியத் சர்வதிகாரத்துக்குத் துணை போனவர்கள். தங்கள் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிய விளக்கம் எதுவும் அளிக்காமலே அவ்வாழ்க்கை புதைந்துபோய்விட்ட திருப்தியில் இப்போது ஜனநாயகம் பற்றியும் சமூக முன்னேற்றம் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தனிமனிதன் எந்த அளவுக்குச் சமூக மனிதனாகவும் இருக்கிறான் என்பது எனக்கு முக்கியம். எந்த அளவுக்கு வெளிப்படையாகவும் பகிர்ந்து கொள்கிறவனாகவும் இருக்கிறான்? சமூகப் பிரக்ஞையுடன் செயல்படுகிறானா அல்லது ஏமாற்றுவதற்காகச் செயல்படுகிறானா? படைப்பாளியின் எழுத்து எந்த விதமான வாழக்கையைச் சென்றடைய அவன் கனவு காண்கிறான் என்பதைக் காட்டுகிறது. மனித சாரத்தைப் பேண முற்படுகிறவர்களுடன் நான் மானசீக உறவு வைத்துக்கொண்டிருக்கிறேன். என் ஊரையும் உலகத்தையும் தழுவிய உறவு இது.

**நீங்கள் முதல் எழுதத் தொடங்கிய நாவல் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்.' 38,40களில் அக்கதை நடக்கிறது. ஆனால் இடையில் உங்களுடைய இரு நாவல்கள் வெளிவந்தன. மூன்றாவது நாவலாகத்தான் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' வெளிவந்தது. தமிழ்ச் சூழலில் ஏன் இந் நாவல் அதிகக் கவனம் பெறாது போய்விட்டது. இதுவே உங்கள் முதல் வெளிவந்த நாவலாக இருந்தால் நீங்கள் தமிழில் அதிகக் கவனத்துக்குரிய படைப்பாளியாக ஏற்கப்பட்டிருப்பீர்களா?**

நான் 1978, 79 காலங்களில்தான் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவலை எழுதத் தொடங்கினேன். (இப்போது வெளிவந்திருப்பது அதிலிருந்து வெகுவாக விலகிவந்த ஒரு எழுத்துருவம்.) ஆகவே இது என் முதல் நாவல் அல்ல. முதல் நாவலாக வந்திருந்தால் அதிகக் கவனம் பெற்றிருக்கும், மூன்றாவது நாவலாக வந்ததால்தான் கவனம் பெறாது போய்விட்டது என்பது உண்மை என்றால் அது கவனம் பெறாமல் போனது நல்லதுதான். ஏனென்றால் அதன் உயிர்ப்பு சார்ந்து அது வாழ வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புத்தான் எனக்கு இருக்கிறதே தவிர அதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை சார்ந்து அது வாழ வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை.

என் மூன்று நாவல்களில் மிக முக்கியமான நாவலாக நான் கருதுவது 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' தான். அதுதான் வாழ்க்கையை அதன் முழுமையான தளத்திற்கு விரித்துப் பார்க்க முயல்கிறது. அது காட்சியளிக்கும் வகையிலேயே எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டால் அது எனக்கு ஒரு இழப்புத்தான். அந்த நாவலில் வரிகளுக்குப் பின்னால் இருக்கும் வரிகள் மிக முக்கியமானவை என்று நம்புகிறேன்.

எம்.கோவிந்தன், சி.ஜே.தாமஸ், தகழி, பஷீர் போன்றவர்களை, எங்கள் பகுதி தமிழகத்துடன் இணைந்த பின்புதான் எனக்குப் பெரியார்மீது கவனம் வந்தது. அவருடைய உண்மை உணர்ச்சியை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த உண்மைகளை அவர் முன்வைக்கும் முறைகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதல் ஈரமோ, அழகியலோ, அரவணைப்போ இல்லை.

**பெரியாரை நீங்கள் நிராகரிப்பது மொழியின் அரசியல் காரணமாக மட்டும்தானா?**

**பின் நவீனத்துவக் கோட்பாடும் தமிழ்ச் சூழலும் இன்றுவரையிலும் பொருந்தாமல்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். படைப்புகள் வழியாக அதன் பாதிப்பு குறிப்பிடும் படி நிகழ்ந்ததாகவும் தெரியவில்லை.**

அவற்றைத் தொகுத்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு தொகுத்துப் பார்க்க சிரத்தையான, ஆழமான வாசிப்புத் தேவை. அதை ஊடுருவி வாசித்த பின்னும் ஏற்கவில்லையென்றால் அதை நான் மதிக்கிறேன். இதற்கு மேல் செய்ய எதுவும் இல்லை. மோஸ்தர் சார்ந்த புறக் கோலங்கள் இல்லை என்ற காரணத்திற்காக அது உதாசீனப்படுத்தப்பட்டால் வாசகனுக்கு அது ஒரு இழப்பு என்றே சொல்வேன்.

**உங்கள் எழுத்துகளின் பின்னால் ஒரு தொனி இருக்கிறது. இப்போது இருப்பவன் புரிந்து கொள்ளாவிட்டாலும் எதிர்காலத்தில் என்னைப் புரிந்துகொள்ளும் ஒரு வாசகன் வருவான். அவனுக்காகவே நான் எழுதுகிறேன் என்கிறீர்கள். அப்படியான வாசகன் வந்துவிட்டனா?**

திட்டவட்டமாக அப்படி சொல்ல முடியாது. வாழும் காலத்தில் அங்கீகாரம் பெற முடியாத எழுத்தாளன் தன் உயிர்ப்பைத் தக்கவைத்துக்கொள்ள எவ்வளவோ வாக்கியங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அதில் ஒன்றுதான் 'இன்று இல்லையென்றாலும் நாளை ஒளி வரும்' என்பது. சமூக ஸ்திதியையும் எழுத்தாளனின் ஆதங்கத்தையும்தான் இவ்வரிகள் வெளிப்படுத்துகின்றன. பலருக்கு ஒளி வராமல் போயிருக்கிறது. புல் முளைத்து மண்டியிருக்கிறது. எதிர்மறையான சூழலில் நம்பிக்கை கொண்டு செயல்பட பல மந்திரங்கள் தேவையாக இருக்கின்றன. போன நூற்றாண்டு முழுக்கப் பல படைப்பாளிகள் வெவ்வேறு வகைகளில் இந்த மந்திரங்களை உருவாக்கியிருக்கிறார்கள். சிலருக்குக் காலம் துணை நின்றும் இருக்கிறது.

**உங்கள் 'காற்றில் கலந்த பேரோசை'யில் ஜீவாவைப் பற்றி எழுதியுள்ளீர்கள். பெரியார் உங்களைப் பாதிக்கவில்லையா? இத்தேர்வுக்கு உங்கள் அரசியலும் காரணமாக இருக்குமா?**

ஜீவா எங்கள் ஊரைச் சேர்ந்தவர். பத்து வயது வாக்கில் நான் அவரை பார்த்தாயிற்று. பின்பு அவரது மறைவு வரையிலும் அந்தத் தொடர்பு நீடித்தது. எங்கள் ஊருக்குப் பெரியார் வந்துபோகக் கூடியவர் என்றாலும் என் குடும்பப் பின்னணியில் அவர் பெயர் அடிபடவே இல்லை. சிறுவயதில் நான் மலையாள எழுத்தாளர்களைத்தான் அதிகம் படித்தேன்.

பெரியாரை நான் நிராகரிக்கவில்லை. அவருடைய கருத்துகளில் பெரும்பான்மையானவை நான் ஏற்றுக்கொள்ளக்கூடியவைதான். சொல்முறை பற்றிச் சொன்னேன். மொழிக்கும் கருத்துக்குமான உறவு எனக்கு மிக முக்கியம். அவரது இயக்கத்தில் அவர்தான் சொல்லோடு செயலை இணைத்திருந்தவர். பின்னால் வந்தவர்கள் எவரையுமே அப்படி சொல்ல முடியாது. அரசியல் தளத்தில் ஆகப் பெரிய அநாகரீகங்களை உருவாக்கியவர்கள் அவர்கள். அந்த இயக்கத்தின் இன்றையச் சரிவு கொடுமையானது.

**நீங்கள் மார்க்ஸிய சித்தாந்தத்தில் ஈடுபாடு உள்ளவராக இருந்திருக்கிறீர்கள். பின்னால் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. இவ் இடைவெளி மார்க்ஸியத்தின் போதாமை காரணமாக ஏற்பட்டதா அல்லது மார்க்ஸிய நிறுவனங்களின் பலவீனங்களின் அடிப்படையில் ஏற்பட்டதா?**

மார்க்ஸியம் ஒரு தத்துவம்தான். சமய நெறி அல்ல. தத்துவங்கள் காலத்தின் போக்குக்கு ஏற்ப மறுபரிசீலனை செய்ய இடம் தருபவை. அந்த வாசலை இங்கு சாத்திவிட்டார்கள். குறுகிய நோக்கங்களுக்காக தத்துவங்கள் பயன்படுத்தப்படும்போது அவை இறுகி அதன் சாராம்சத்தை இழந்து அடையாளங்களாக மாறிவிடுகின்றன. அடையாளங்கள் சார்ந்து நம்பிக்கை மதிப்பிடப்படுகிறது. இந் விஷயங்களைத்தான் நான் 'ஜே ஜே: சில குறிப்புக'ளில் சொல்ல முயல்கிறேன். தத்துவத்துடன் நான் நேரடியாக மோதவில்லை. மிகப் பெரிய நாகரீகத்தை உருவாக்க முற்படுகிறவர்கள் கருத்துச் சுதந்திரம், ஜனநாயகப் பண்பு ஆகியவற்றில் கூட நம்பிக்கையற்ற அதிகாரிகளாக மாறுவதுதான் என் பிரச்சினை. எல்லா அரசியல் கட்சிகளிலும், சமய அமைப்புகளிலும் இந்த நிலை இருக்கிறது.

**சுந்தர ராமசாமி என்கிற படைப்பாளியை, ஆளுமையை உருவாக்குவதில் மலையாளச் சூழலுக்கு எந்தவிதமான பங்களிப்பு உள்ளது?**

பெரிய அளவில் பங்களிப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது. இடதுசாரிச் சிந்தனைகளில் கவனம் கொள்ள என்னைத் தூண்டியவை மலையாள எழுத்துகள் தான். மார்க்ஸிய பார்வை கொண்ட சிறுகதைகளை நான் ஆரம்பகாலத்தில் எழுதத் தூண்டுதல் பெற்றதும் மலையாளப் படைப்பிலக்கியத்தின் பாதிப்பாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்து தமிழ்ச் சூழலில் மேற்கு நாடுகளுக்கான தமிழர் புலம் பெயர்வு அதிகமாக நடந்திருக்கிறது. அங்கு போய் தமிழில் எழுதுகிறார்கள். தமிழில் புலம்பெயர் இலக்கியம் ஏற்பட்டுள்ளது. இதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

என்னை மிகவும் பாதித்த விஷயம் இது. இருபத்தைந்து வருடங்களாகவே எனக்கு ஈழத்து எழுத்தாளர்கள் பலர் நெருக்கமான நண்பர்களாக இருக்கிறார்கள். அங்கு நிகழ்ந்த எல்லாப் பிரச்சினைகளையும் இவர்களைப் பற்றிய என் ஞாபகங்கள் வழியாகத்தான் பார்க்கிறேன். புலம் பெயர்ந்த தமிழர்களையும் அவர்கள் வசிக்கும் இடங்களையும் ஓரளவுக்குப் பார்க்க முடிந்தது. கசப்பான பல உண்மைகள் இருக்கின்றன. அவர்களுடைய வாழ்க்கை அங்கு நீடிக்கும் என்றால் அவர்கள் குடும்பங்களிலிருந்து தமிழ் வெளியே போய்ச் சூழலில் இருக்கும் மொழி உள்ளே வந்து விடும். குழந்தைகளால் தமிழைக் காப்பாற்ற முடியாது. இது வரலாற்றின் கட்டாயம். இந்தத் தலைமுறையிலும் ஏதேனும் தமிழ் எழுத்துகள் வந்தால்தான் உண்டு. படைப்பு உருவாவதற்கு மொழியறிவு மட்டும் போதாது. மொழி சார்ந்த வாழ்க்கையும் வேண்டும்.

**பின் நவீனத்துவக் கோட்பாட்டைத் தமிழ்ச் சூழலுடன் எப்படி பொருத்திப் பார்க்கிறீர்கள்?**

பின் நவீனத்துவக் கோட்பாடும் தமிழ்ச் சூழலும் இன்றுவரையிலும் பொருந்தாமல்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். படைப்புகள் வழியாக அதன் பாதிப்பு குறிப்பிடும் படி நிகழ்ந்ததாகவும் தெரியவில்லை. சகல முனைகளிலும் சுதந்திரத்தின் எல்லைகளை விரிக்க வேண்டும் என்றாலும் கூட நடைமுறையில் பாலியல் விவரணைகளில் மட்டும் தான் விரிக்கப்படுகிறது. இது அதிர்ச்சி மதிப்புக்குத் தரும் முக்கியத்துவம் தவிர வேறு அல்ல. பின் நவீனத்துவக் கோட்பாட்டைத் தமிழ்ச் சூழலுடன் இணைத்துக் காட்டும் படைப்புச் சிந்தனை தோன்றும் என்றால் அந்தச் சிந்தனை இன்னும் அதிகக் கௌரவத்தைப் பெறும். படைப்பிலக்கியத்தையும் பாதிக்கும்.



**தமிழ் சிற்றிதழ் வரவில் காலச்சுவடு மிக முக்கியமானது. அச்சிற்றிதழ் வருகைக்கான குறிக்கோள்கள் எட்டப்பட்டு விட்டனவா? இப்போது எங்கே நிற்கிறது?**

இப்போது காலச்சுவடை உருவாக்குவதில் எனக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. கண்ணனும் மனுஷ்ய புத்திரனும் அவர்களது நண்பர்களின் உதவியுடன் செய்து வரும் காரியம். நான் நடத்தி வந்த காலச்சுவடின் எல்லைகள் இப்போது பெரிய அளவுக்கு விரிந்திருக்கின்றன. குறிக்கோளைச் சென்றடைந்துவிட்டோம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தமிழ் வாசகர்களிடையே மிகப் பெரிய விழிப்புநிலையையும் சுதந்திர உணர்வையும் உருவாக்க வேண்டும். வாழ்க்கையை மதிப்பிடவும் மறுபரிசீலனை செய்யவும் புதியவற்றை ஏற்கவும் பழையவற்றைக் கழிக்கவும் அவர்களால் சாத்தியப்பட வேண்டும்.

**தமிழ் இனி 2000 சந்திப்பில் எதனைச் சாதிக்க வேண்டுமென விரும்பினீர்கள்?**

தமிழ் இனியை உருவாக்கியவர்களின் நோக்கம் எல்லோரும் கூடி கடந்து வந்த பாதையைப் பற்றியும் இனி நடக்க வேண்டிய பாதையைப் பற்றியும் ஆழமாகச் சிந்திப்பது என்பதுதான். அதன் நோக்கம் ஓரளவு நிறைவேறிற்று என்று நினைக்கிறேன். இதன் மூலம் பல நல்ல விளைவுகள் கூடி வரவேண்டும்.

**அண்மைக்காலமாக ஈழத்துடன் உங்களுக்கான தொடர்பு அதிகரித்திருக்கிறது. இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பாக உங்கள் மனநிலை என்ன?**

ஈழத்து இலக்கியம் பற்றிச் சொல்வதென்றால் கவிதை படைப்புகளிலும் விமர்சனச் சிந்தனைகளிலும் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையைத்தான் முன்னிலைப்படுத்த வேண்டியிருக்கிறது. சமீப காலங்களில் ஈழத் தமிழர்களுக்கு நிகழ்ந்த வாழ்க்கை நெருக்கடிகள் மிக பெரிய நாவலுக்கான களத்தை விரிப்பவை. அவ்வகையான முயற்சிகள் தோன்றாமல் இருப்பது புரிந்து கொள்ள முடியாத கேள்வியாகவே இருக்கிறது. தங்களைப் பற்றித் தாங்களே உருவாக்கிக்கொள்ளும் மிகையான அபிப்பிராயங் களையும் பிறர் உருவாக்கும் மிகையான அபிப்பிராயங்களையும் மறுபரிசீலனை செய்ய அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

**எதிர்காலத்தில் படைப்புகளைத் தரும் உத்தேசங்களில் உங்களை ஈடுபடுத்தி யிருக்கிறீர்களா?**

நிச்சயமாக, ஒருசிலவேனும் கூடி வரும் என்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளின் அழுகையொலி



மரணம் தூங்கும் சுவர்களில்
இன்னும் விழித்துக்கொண்டிருக்கிறது
காலப்பேய் நிழல்.

அந்தரத்தில் உதிர்ந்துபோகும் சிறகுகள் பற்றிய துயரத்தை
இடிபாடுகளுக்கு மேலாய் பாடிப்போகின்றன பறவைகள்:
நாட்செல்ல நாட்செல்ல
மரங்களில் எழுதப்பட்ட அவற்றின் வாழ்வு
சாம்பல் பூத்து சாம்பல் பூத்து நிழலழிந்து போகிறது:

பறவைகள் கலைந்து போகின்றன கூடுகளை விட்டு.

பிணமெரிந்த புகையாய் நிலமெங்கும் படர்கிறது
காலத்தின் பேய்நிழல்.
நந்தவனங்களுக்கு மேலாய் பறந்துபோகின்றன வெளவால்கள்:
கனிகளைப் புசித்துப் புசித்து
சாபத்தின் விதைகளை பறவைகளின் சிறகுகளில் வீசிச்செல்கின்றன.

வெறுமையும் சாவின் அமைதியும் மிகப்பழைய கூடுகளில் உறைகிறது
அதே துயரம்
அதே வலிகள்.

பறவைகள் வாழ்ந்த கொடிகளின்
வனப்பும் வாசமும்
நள்ளிராக்கருமையில் வழிதவறிப்போயிற்று

இருள் தந்த மகிழ்ச்சியின் வெறியில்
ஆடைகளை அவிழ்த்தெறிந்து நிர்வாணிகளாயின வெளவால்கள்:

அழியுண்ட கனவுகளின் அழுகைச் சகதிக்குள் போய்விழுகிறது
சிறகிழந்த பறவைகளின் வாழ்வு.

எஸ்போஸ்

# சிதைந்த புன்னகைக் காலம் பேய்க்கான நிலைக்களம்

எனது
புன்னகைகளை
தொலைத்து விட்டேன்
முறிந்து விழுந்த மரங்களுக்கு நடுவில்
இடித்து விழுத்தப்பட்ட சுவர்களுக்கு இடையிலும்

என்
புன்னகைக் காலங்கள்
பசுமை நிறைந்தவை
புறாக்களின் சிறகசைப்பிலும்
வண்ணாத்துப் பூச்சிகளின் ரசிப்பிலும்
தெம்மாங்கு பாடியவை
என் புன்னகைக் காலத்து சுவாரஸ்யங்களை
விழுங்கிவிட்டு வல்லூறு
முறிந்த மரத்துக் கிளையொன்றில் தூங்குகிறது.
என் புன்னகைக்கால கனவுகள்
என்னில் நுரைக்க நுரைக்க
ஆயிரம் ரத்தப் புடையன்களின் விசப்பற்கள்
என்னில் முளைக்கின்றன.

கருணை ரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகம் : இணையம் தகவல் தொழில்நுட்பம் தகவல் பொருளாதாரம்

தெ. மதுசூதனன்

“ ஊடகங்களின் பன்முகத்தாக்கம் பற்றிய கரிசனையானது தகவல் தொழில்நுட்ப வியாபகத்தோடு அதிகரித்தது. இந்நிலையில் ஊடகவியல் பற்றிய சமூகவியல் ஆய்வுகளும் அதிகரித்துள்ளன. ஆனால் இவை பற்றிய அக்கறைகள் தமிழில் வெகுவாகக் குறைவு என்றே குறிப்பிடலாம். ”



இன்றைய உலகம் தகவல் யுகம். தொடர் பாடல் ஒளியின் வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று தகவல்களை ஆள்பவர் உலகத்தை ஆள்பவரா கின்றார்.

வரலாற்றில் அதிமுக்கியத்துவம் உடையதாக தகவல்புரட்சி ரத்தம் சிந்தாத புரட்சியாக புத்திசாதுரியம் மிக்கவர்களும் கடும் உழைப்பாளிகளுமான பல மனிதர்களின் பல்லாண்டு கால உழைப்பில் கனிந்து கொண்டிருக்கிறது.

தகவல் தொழிநுட்பங்களில் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் தகவல் புரட்சிக்கு வித்திட்டிருக் கின்றன. முக்கியமாக இரு தொழில்நுட்பங்கள் இதில் பங்கெடுக்கின்றன. ஒன்று, தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கான நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம். மற்றையது, பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் தகவல்களை ஒழுங்காக்கம் ( Process) செய்வதற்குரிய நவீன கணினி முறைமைகள்.

பொதுவாக தகவல்களின் அசைவியக்கம் கடுமையாக அதிகரித்திருக்கின்ற உலகில் ஒரு சமூகத்தின் பலமான வளர்ச்சி என்பது தகவல்களையும் அறிவையும் அதிகளவிலும் அதிக வேகத்திலும் பரவச் செய்வதில் தங்கியுள்ளது. இத்தகைய வளர்ச்சியை நூதன நோக்கத்தோடு எதிர்காலவியல் அறிஞர்கள் கணிக்கின்றனர். அதாவது 21ம் நூற்றாண்டு தகவல் மைய நூற்றாண்டாகவும், அறிவு மைய நூற்றாண்டாகவும் அமைந்திருக்கும் என்கின்றனர்.

இதனால் உலகில் பல்வேறு சனநாயக முற்போக்கு சக்திகள் ஊடகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முனைகின்றனர். பொதுவில் ஊடகங்கள் நிலவும் சமூக அமைப்பின் அதிகாரத்துக்கும் ஆதிக்க சித்தாந்தத்துக்கும் அடிபணிவதோடு, அவற்றுக்கு துணையாகவும் ஊடகங்கள் தொழிற்படுகின்றன. அவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன.

இதனை நோம் சொம்ஸ்கி தொடர்பூடக பயங்கரவாதம் (Media Terrorism) என்கிறார். மேலும் இந்தப் போக்கை ஆராய்கின்ற வேறு சில சமூகவியலாளர்கள் இதனை – இப்போக்கை தொடர்பூடக மாபியா(Media Mafia) என்றும் ஊடக வன்முறை (Media Violation) என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே நமக்கு ஊடகங்கள் பற்றிய எச்சரிக்கையும் அவற்றின் அரசியல் பற்றியும் தெளிவு இருக்க வேண்டும். ஊடகங்களின் பன்முகத்தாக்கம் பற்றிய கரிசனையானது தகவல் தொழில்நுட்ப வியாபகத்தோடு அதிகரித்தது. இந்நிலையில் ஊடகவியல் பற்றிய சமூகவியல் ஆய்வுகளும் அதிகரித்துள்ளன. ஆனால் இவை பற்றிய அக்கறைகள் தமிழில் வெகுவாகக் குறைவு என்றே குறிப்பிடலாம்.

செய்தித் தொழில்நுட்பத்திலும் நுன்இலத்திரனியலிலும் ஏற்பட்டுள்ள இன்றைய வெடிப்பு (பெருக்கம்) சமூகச் செயற்பாட்டை மிக நெருக்கமாகவே பாதித்து வருகிறது. தொழிற்புரட்சியால் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டிலும் அதிகமாக நுண் இலத்திரனியலானது சமூகப் பிணைப்பை அதாவது செய்தித் தொடர்பை பாதித்துள்ளது. இதனால செய்தித் தொடர்பியலில் புதுவேகமும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

1980களில் இயங்கத் தொடங்கிய இணையம் உண்மையில் 1990களின் பிற்பகுதியில் தான் எழுச்சி பெற்றது. 1981இல் 200 பேர் மட்டுமே இணையத்துடன் இணைப்புப் பெற்றிருந்தனர். 1986இல் திருப்புமுனை ஏற்பட்டது. அப்போது இணையத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை ஐந்து மடங்கு பெருகியது. 1999 மத்தியில் 5.6 கோடி கணினிகள் இணையத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. இது அதற்கு முந்திய 12 மாதங்களில் இருந்த எண்ணிக்கையை விட 2 கோடி அதிகம். உலகிலுள்ள இணையத் தொடர்புடைய கணினிகளில் 95% பணக்கார நாடுகளிலேயே உள்ளன.

இன்று மூன்று அமெரிக்கர்களில் ஒருவர் நாள்தோறும் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்க சமுதாயத்திற்கு உள்ளேயுங் கூட கணினியும் மின் அஞ்சலும் படித்தவர்களுக்கும் (முக்கியமாக வெள்ளையர், ஆரியர்) படிப்பறிவு குறைந்தவர்களுக்கும் (முக்கியமாக கறுப்பு அமெரிக்கர்கள்) இடைவெளியை அதிகமாக்கியுள்ளது. இந்த இடைவெளி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் – வாய்ப்புக்கள் வசதிகள், கல்வி, வேலைதேடல், அனைத்திலும் காணப்படுகிறது.



தற்போது அமெரிக்கா கணினி அறிவு பெற்றோர் கணினி அறிவு பெறாதோர் என இரு பிரிவுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. இந்த நிலைமை உலகளவில் கூட பிரதிபலிக்கிறது. நாம் தொழில் நுட்பப் புரட்சியின் நடுவிலே இருக்கிறோம் என்பது உண்மைதான். அதேநேரம் இப்போக்கு ஏழை பணக்கார நாடுகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கும் என்று தோன்றவில்லை. மாறாக அதிகரிக்கவே செய்கிறது. இந்த உண்மையை நாம் மறந்து விடக் கூடாது.

தொழில்நுட்பப் புரட்சியும் செய்தித் தொடர்புப் புரட்சியும் இன்னும் பலகோடிக்கணக்கான மக்களின் கைக்கு எட்டவில்லை. எதிர்வரும் நூற்றாண்டில் உலகளாவிய கல்வியிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் வேறெந்த தனி ஊடகத்தைக் காட்டிலும் இணையம் அதிகச் செல்வாக்கைச் செலுத்தும். இவ்வாறு யுனெஸ்கோவின் ஆய்வு குறிப்பிடுகிறது.

உலக மக்களில் 2.4% பேர் மட்டுமே அதாவது நாற்பதில் ஒருவர் மட்டுமே இணையத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். தென்கிழக்கு ஆசியாவில் 200 பேரில் ஒருவர் மட்டுமே இணையத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அரபு நாடுகளில் 500 பேரில் ஒருவரும் ஆபிரிக்காவில் 1000 பேரில் ஒருவரும் இணையத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக எந்த நாடுகளிலும் மின்விசையும் தொலைபேசியும், உள்கட்டமைப்பு வசதிகளும் பற்றாக்குறை இருக்கும் வரை இந்த நிலை மாறாது. கணினிகள் வாங்கவோ, தேவையான விலையுயர்ந்த மென்பொருள்களை வாங்கவோ அவர்களுக்கும் வாய்ப்பும் வசதியும் கிடையாது.

அறிவு உண்மையில் வலிமைக்கு ஈடாகுமானால் வளர்முக உலகம், இணையம் வருவதற்கு முன்னர் 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று வலிமை குறைந்ததாக இருக்கவேண்டும்.

3

இன்றைய தகவல் புரட்சி இணையத்தின் வெற்றியைக் குறிக்கிறது. இதன் மூலம் புதிய பொருளாதாரம் வந்துவிட்டது என்ற அறைகூவலும் உண்டு. ஆகவே இணையத்தின் வருகை பரவல் பயன்பாடு சமூகத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருகிறது என்ற எதிர்பார்ப்பு சில மட்டங்களில் உண்டு.

தகவல் தொடர்பு தொழில் நுட்ப வளர்ச்சியின் திட்டவட்டமான வெளிப்பாடு இணையம் என்று கூறலாம். எதிர்பாரா வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியின் அடையாளம் என்றும் கூறலாம். ஏனைய ஊடகங்களின் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது இணையத்தின் வளர்ச்சி குறுகியது தான்.

வானொலி 5 கோடி பயனிட்டாளர்களை ஈட்டுவதற்கு 40 ஆண்டுகள் பிடித்தன. ஆனால் இணையம் 4 ஆண்டுகளில் அதை எட்டியது. இதற்குக் காரணம், பொருளாதாரத்தில் பங்கேற்போருக்கு எப்போதும் தேவைப் படுவனவற்றை இணையம் மூலம் எளிதாக வழங்க முடிகிறது. வழங்கல் பகிர்வு வழிமுறைகளின் வீச்சு பரந்து விரிந்தது.

இதுவரை 'இயலாது' எனக் கருதப்பட்ட அனைத்தையும் 'இயலும்' எனச் சாதிப்பதே இணையத்தின் அசாதாரண வளர்ச்சிக்குக் காரணம். திண்மையான பொருள்களை இணையம் மூலம் விற்பனை செய்யலாம். ஆகவே பொருளாதார நடவடிக்கைகளில் இணையம் வேறொரு புதிய உலகை நோக்கி எடுத்துச் செல்கிறது.

வர்த்தகச் செயற்பாடுகளில் "மின்வணிகம்" எனும் புரியதொரு வகையிலான வர்த்தக வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இந்த நூதன வாய்ப்பைப் பொருளாதார வளர்ச்சிக்கான சாதனமாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதில் கூடிய கவனம் கொள்ளும் போக்கு எழுந்துள்ளது.

மின் வணிகத்தின் பயன்களைப் பெறும் சக்தி – சமூகத்தில் மக்களின் பொருளாதார நிலை, கல்விநிலை, நுகர்வோர் பழக்கவழக்கங்கள், கணிப்பொறி அறிவு, தொலைத்தொடர்புச் சாதனங்கள், தகவல் தொழில் நுட்பக் கொள்கைகள் போன்ற பின்னணிகளைச் சார்ந்திருக்கும். மேலை நாடுகளைக் காட்டிலும் இந்தியா போன்ற நாடுகளில் மக்களிடையே பொருளாதார மற்றும் கல்வி ஏற்றத்தாழ்வுகள் அதிகம் உள்ள நிலையில் ஒரு சாராருக்கு மட்டுமே இது பயன்படக் கூடிய சாத்தியங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவில் மின்வணிகம் வெற்றிகரமாச் செயல் படுமா என்ற ஐயம் சென்ற ஆண்டு வரை வளர்ந்த நாடுகளில் விவாதத்தில் இருந்ததாகவே தெரிகிறது. ஆனால் தற்போது அந்தக் கட்டத்தைக் கடந்து மின்வணிகத் தளங்கள் மிக வேகமாகவே செயல்பட்டு இணையத்தின் மூலம் விற்பனைகள் பல கோடி டாலர் அளவை எட்டி வருகின்றன. அமெரிக்காவில் 1998இல் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன் இரண்டு மாதங்களில் 500 கோடி டாலர் மின்வணிகம் நடந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. 2002ம் ஆண்டுக்குள் உலகின் மின் வணிகம் 25000 கோடி டாலர் அளவை மிஞ்சிவிடும் எனக் கூறப்படுகிறது.

இந்தியாவில் 1998 – 99 இல் மொத்த மின் வணிகத் தொகை ரூ 138கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சில நடைமுறைக் குறைபாடுகளை சரி செய்தால் 2002இல் ரூ10,000 கோடியை எட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 90 விழுக்காடு வணிகம் உற்பத்தி – வர்த்தக நிறுவனங்களுக்கிடையே நடைபெறுகிறது. 10 விழுக்காடு நுகர்வோர்க்கு நேரிடையாகக் கிடைக்கிறது.

தற்போது இந்தியாவில் போட்டி போட்டு மின்வணிக 'இணையத்' தளங்கள் பல வேகமாச் செயற்படத் தொடங்கியுள்ளன.

4

1997இல் உலகின் மிகப் பெரிய 20 பணக்காரர்களில் 3பேர் அமெரிக்கர்கள். இவர்கள் முற்றிலும் கணினி மென்பொருள் மூலம் பணம் சேர்த்தவர்கள். அவர்களின் மொத்தச் செல்வம் வேறு முக்கியத் துறைகளில் – நிலம் – கட்டிடவணிகம் – உணவு – ஈடுபட்டுள்ள மூன்று பிரிட்டிஸ் பணக்காரர்களின் செல்வத்தை விட 10 மடங்கு அதிகம்.

உலகின் மிகப் பெரிய பணக்காரர்களின் (கணினி மென்பொருள் தொழிலதிபர்) சொத்து, கணினி மென்பொருளில் ஈடுபடாத இரண்டாவது பெரும் பணக்காரரின் சொத்து மதிப்பை விட இரு மடங்கு அதிகம்.

தகவல் தொழில் நுட்பத்தில் தொடர்புள்ள நிறுவனங்கள் பங்குச்சந்தையில் ஈட்டும் லாபம் அதிகம். (மைக்ரோசாப்ட், இன்டெல்கம்பாக், டெல், விஸ்கோ) இந்த நிறுவனங்கள் பங்குச் சந்தையில் திரட்டிய மூலதனம் 1987இல் 1200 கோடி அமெரிக்க டாலர்கள். இதுவே 1997இல் 60,000 கோடி அமெரிக்க டாலர்கள். அதாவது 50 மடங்கு உயர்வு. ஆண்டுக்கு 45 விழுக்காடு பெருக்கம். இது ஒரு அபார வளர்ச்சி. ஆக அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு 1985இல் 4.9 விழுக்காடு. 1997 இல் இது 8.2 விழுக்காடாக உயர்ந்துள்ளது. தகவல் தொழிநுட்பப் பொருள்களின் விலை கடந்த 20 ஆண்டுகளில் ஆண்டுக்கு 30 விழுக்காடு குறைந்தும் கூட இந்த நிலை இருந்தது.

இதே போன்று தகவல் தொடர்புகளில் உண்மையான விலையும் கூட கடந்த 70 ஆண்டுகளாக, ஆண்டுக்கு 8 விழுக்காடு குறைந்து வந்துள்ளது. ஆனால் தகவல் வெட்டில் சேமிக்கும் திறன் 1991 முதல் ஆண்டுக்கு 60 விழுக்காடு அதிகரித்து வருகிறது.

எனவே தொழில் வளர்ச்சியடைந்த முன்னணி நாடுகளின் பொருளாதாரத்தில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு தொடர்ந்து அதிகமாக இருந்து வருகிறது. அதே நேரத்தில் வளர்ச்சி குன்றிய சில நாடுகளின் மேம்பாட்டுக்கும் இது பெருமளவு பங்காற்றி வருகிறது.

இந்தியாவில் தனிநபர் வருமானம் 1995 இல் 340 அமெரிக்க டாலர்கள் 90 கோடி மக்களில் நாள் ஒன்றுக்கு ஒரு டாலர் கூட ஈட்ட முடியாதவர்கள் தான் பெரும்பான்மையினர்.

ஆனால் இன்று உலகில் பிறநாடுகளுக்கு கணினி மென்பொருள் மையமாக திகழ்கிறது இந்தியா. 1997இல் இந்திய மென்பொருள் தொழில் உற்பத்தி 200 கோடி அமெரிக்க டாலர்கள் இத்தொழிலில் 2,60,000 பேர் பணியாற்றி வருகின்றனர். கடந்த 5 ஆண்டுகளாக இத்தொழிலின் வருவாய் ஆண்டுக்கு 50 விழுக்காடு பெருகி வருகிறது. இதில் 60 விழுக்காடு ஏற்றுமதி மூலம் கிடைக்கிறது.

எடையற்ற பொருளியல் சார்ந்த துறைகளில் தான் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு வேகமாய்ப் பெருகி வருகிறது. 1996 – 2006 காலகட்டத்தில் வேலைவாய்ப்பு உச்சந்திலிருக்கும் துறைகளாக கணினி மற்றும் இணையம் வழி தகவல் பரிமாற்ற சேவைகள் நிகழும். இது 108 விழுக்காடு வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5

மேலும் இந்த மாற்றங்களை வளர்ச்சிகளை உலகப் பொருளாதாரப் பின்புலத்தில் வைத்து புரிந்து கொள்வதன் மூலம் சில நுணுக்கமான அம்சங்களை இனங்கண்டு கொள்ள முடியும். குறிப்பாக,

**முதலாளிய அமைப்பின் மறுஉருவாக்கம் தடைப்படுவதையே நெருக்கடி எனலாம். முதலாளியத்தின் அடிப்படையான அம்சமாக மூலதனத்தின் அடிப்படையில் உழைப்பின் உபரியைச் சுரண்டுவது என்பதாகச் சொல்லலாம். இத்தகைய மூலதனத் திரட்சிக்கு ஆபத்து வரும் போது முதலாளியம் நெருக்கடியைச் சந்திக்கிறது.**

'உலகக் கிராமம்' 'தகவல் சமூகம்' போன்ற கருத்தாக்கங்கள் முன்வைக்கப்படும் சூழலில் தொடர்பூடகங்கள் தகவல் குறித்த மாற்றுப் பார்வைகளை நோக்கிய நகர்வு தேவை. உலக முதலாளிய அமைப்பு தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களால் மேன்மேலும் இறுக்கமாக ஒருங்கிணைக் கப்பட்டு அதனடிப்படையில் உற்பத்தி வினியோகம் மீதான நிர்வாகமும் கட்டுப்பாடும் முற்றிலும் புதிய வடிவங்களில் மேற்கிளம்பியுள்ளன.

6

உலகப் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்ந்து எப்போதும் நெருக்கடியை சந்தித்து வருவதனை அதனது தனித்த விசேட பண்பு எனக் கூறலாம். மூலதனத் திரட்சி, நெருக்கடி ஆகியவற்றின் விளைவாக முதலாளியத்தின் தன்மை அவ்வப்போது மாற்றம் பெறுகிறது.

தொடக்க முதலாளியம் (கிபி.1500 – 1640)

வணிக முதலாளியம் (1640 – 1750)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகபோக முதலாளியம் (1750 – 1870)
பண்ணாட்டு முதலாளியம் (1870 – 1950)
பண்ணாட்டு நிறுவன முதலாளியம் 1950 –

எனப் பல கட்டங்களாக வகுத்து நோக்க முடியும். முதலாளியத்தின் தன்மை இவ்வாறு மாறுவதற்கு ஏற்ப ஒவ்வொரு கட்டத்திலும் உலக முதலாளியத்தில் கட்டுமானச் சீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதாயிற்று.

எனவே கட்டுமானச் சீரமைப்பு என்பது உலக முதலாளிய வரலாற்றில் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிகழ்வு தான். அதன் தன்மைகளை மட்டும் அவ்வப்போதைய முதலாளியக் கட்டத்திற்கேற்ப மாறி வந்த போதிலும் நோக்கம் மாறுவதில்லை. அதாவது நெருக்கடியிலிருந்து தப்புவதே அந்த நோக்கம்.



இங்கே, முதலாளிய அமைப்பின் மறுஉருவாக்கம் தடைப்படுவதையே நெருக்கடி எனலாம். முதலாளியத்தின் அடிப்படையான அம்சமாக மூலதனத்தின் அடிப்படையில் உழைப்பின் உபரியைச் சுரண்டுவது என்பதாகச் சொல்லலாம். இத்தகைய மூலதனத் திரட்சிக்கு ஆபத்து வரும் போது முதலாளியம் நெருக்கடியைச் சந்திக்கிறது.

1980களில் உலக முதலாளியத்தில் ஒரு மிகப் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. இதன் விளைவாக உலக அளவில் ஒரு புதிய வேலைப் பிரிவினை உருவாகியது. தற்போது முதலாளிய உற்பத்தி

1. பொருள் சார்ந்த உற்பத்தி (Material Production)
2. பொருள் சாரா உற்பத்தி (Non. Material Production)

என இரு துறைகளாக பிரிகிறது.

பொருள் சார்ந்த உற்பத்தி என்பதில் எல்லா நுகர் பொருள் மற்றும் தொழில் உற்பத்தியும் அடங்கும்.

பொருள் சாரா உற்பத்தி மற்றும் வணிகத்துறை சார்ந்த உற்பத்தி (Service Sector) யில் உயர் தொழில் நுட்பம், உற்பத்தி வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அறிவுச் சொத்துரிமை, வணிக மற்றும் நிதி அகக்கட்டுமானங்கள், தகவல் தொடர்பு ஆகியவை அடங்கும்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் பொருள் சாரா உற்பத்திக்குக் கட்டுப்பட்டதாக பொருள் சார்ந்த உற்பத்தி ஆக்கப்பட்டுள்ளது. எளிதில் அதிகம் லாபம் ஈட்டக் கூடிய துறையாக பொருள் சாரா உற்பத்தி மாறியதன் அடிப்படையிலேயே இன்று ஒரு புதிய உலகவேலைப் பிரிவினை உருவாகியுள்ளது.

இந்தப் புதிய உலக வேலைப் பிரிவினையில் பொருள் சார்ந்த உற்பத்திகள் விளிம்பு நாடுகளுக்கு மாற்றீடு செய்யப்படுகின்றன. மைய நாடுகளில் பொருள் சாரா உற்பத்திக் குவிப்பு நடைபெறுகின்றது.

1900இல் மொத்த அமெரிக்க தொழிலாளர்களில் பத்து சதம் பேர் மட்டுமே தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றினர். 1980இல் இது 45 சதமாக உயர்ந்தது. மொத்த ஊதியச் செலவில் 63 சதம் தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றுபவர்களுக்குப் போகிறது.

அமெரிக்கா கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தவிர ஜப்பான் போன்றவற்றிலும் இந்நிலை பெரிய அளவில் உருவாகியுள்ளது. விளிம்புகளில் தோற்றுவிக்கப்படும் உபரி அனைத்தும் மையங்களிலுள்ள பொருள் சாரா உற்பத்தித் துறையை நோக்கிக் குவிக்கப்படுகின்றன.

எனவே இன்று விவசாயம் கட்டுமானம், பணித்துறை ஆகிய நகராத துறைகள் (Immobile Sectors) மட்டுமே மையங்களில் குவிந்துள்ளன. நகரும் துறைகளாக (Mobile Sectors) உள்ள தொழில் மற்றும் நுகர் பொருள் உற்பத்தி என்பது விளிம்பு உலகிற்குத் தள்ளப்பட்டுவிட்டது. பண்டச் சந்தையை தனது ஏகபோகமாகக் கொண்டுள்ள உலக முதலாளிய மூலதனம் இவ்வாறு பொருள் சார்ந்த உற்பத்தியைப் பொருள் சாரா உற்பத்திக்குக் கட்டுப்பட்டதாய் மாற்றுவதில் முழு வெற்றி பெற்று விட்டது.

இவ்வாறு இன்று உற்பத்தி ரீதியாக உலகம் இருவேறு குவியங்களாகப் பிரிந்து கிடக்கிறது. மையங்களிலும், விளிம்புகளிலும் உள்ள முதலாளிய சக்திகள் இதன் மூலம் பெரும் லாபத்தைக் குவிக்கின்றன.

இன்று பொருள் உற்பத்தி அதிக லாபம் தரக்கூடிய உற்பத்தியாக மாறியதன் பின்னர் தகவல் தொடர்பு கணினி இணையம் என்பன "புதிய உலக ஒழுங்கு" தொடர்பான புதிய வியூகங்களை அமைத்துச் செல்கின்றது. "புதிய பொருளாதாரம்" வந்து விட்டது போன்ற மாயையையும் ஏற்படுத்துகின்றது.

7

தகவல் பொருளாதாரத்தைப் 'புலனாய்வுப் பொருளாதாரம்' 'எடையில்லாப் பொருளாதாரம்' 'அருவப் பொருளாதாரம்' என்றும் கூறுவர். இதனையே எளிமையாக புதிய பொருளாதாரம் என்கின்றனர்.

இந்தப் பொருளாதாரத்தில் உருப்பொருள்கள், எந்திரங்கள், மூலப்பொருட்கள் என்பவற்றை விட கருத்துக்கள், உருக்காட்சிகள் தகவல் ஆகியவை தான் முக்கியமானவை. எரியாற்றல் தொழிலியல் சமுதாயத்தை வளர்த்தது போல், தகவல் செய்மானத்திலும் அனுப்பீட்டிலும் பெற்றுள்ள தேர்ச்சி தகவல் பொருளாதாரத்திற்கு வழி வகுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் பொருளாதாரம் நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டது.

1. தகவல் மற்றும் செய்தித் தொடர்புத் தொழில் நுட்பங்கள், இணையம்.

2. அணிவார்த்த சொத்து: இதில் புனைவுரிமைகள், வணிகக் குறிப்புக்கள் விளம்பரம், நிதி மற்றும் ஆலோசனைப் பணிகள் நீதிமன்றங்கள், சுகாதாரக் கவனிப்பு(மருத்துவ அறிவு) கல்வி ஆகியவையும் அடங்கும்.

3. தகவல் ஆதாரங்கள்: மின்னணுவியல் நூலகங்கள், புதிய செய்தித் தொடர்பு சாதனங்கள், ஒலிப்பேழைப் செய்தித் தொடர்பு சாதனங்கள், ஒளிப்பேழைப் பொழுதுபோக்குள், ஒலிபரப்பு ஆகியவை அடங்கும்.

4. உயிர் தொழில் நுட்பம்: மரபு நூலகங்கள், தகவல் ஆதாரங்கள், மருந்தாக்கம் ஆகியவை அடங்கும்.

இன்றைய பொருளாதாரங்களில் மிக வேகமாக வளர்ந்து வரும் துறைகள் இந்த நான்கு அம்சங்களுமாகும். இப்பட்டியலிலுள்ள அனைத்தும் கண்ணுக்குப் புலனாகாதவை எனவே இவற்றைத் தகவல் என்று கொள்ளலாம்.

8

தொழில் புரட்சியிலிருந்து தகவல் புரட்சிக்குச் செல்லும் போது உலகத் தகவல் அகக்கட்டமைப்புடன் தொடர்புடையது. இது நாடுகள், நிறுவனங்கள், தனிநபர்கள் என்னும் ரீதியில் இன்றியமையாதது.

இத்தகவல் புரட்சியினால் வளர்முக நாடுகளில் நலத்திட்டங்கள் மீதான தாக்கங்கள் குறித்து முற்றிலும் நேர்மாறான கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு நுட்பங்களைப் பயன்படுத்தி நாலுகால் பாய்ச்சலில் வளர்முக நாடுகள் வேகமான மேம்பாட்டை எட்ட முடியும் என்பது ஒரு கணிப்பு.

இல்லை, வளர்முக நாடுகளுக்கும் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கும் பொருளாதார இடைவெளியை இது மேலும் விரிவடையச் செய்யும் என்பது இன்னொரு கருத்து.

தகவல் துறையில் முக்கிய அடிப்படைகளாக பல கூறுகள் போக்குகள் பரவலாகக் காணப்படுகின்றன.

1. தகவல் தொடர்பு நுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக தொடர்புகளுக்கான அமைப்புக்கள் வலைப்பின்னல் போன்று விரிந்து பரவும். இதற்கான செலவு குறையும். தரம் மேம்படும்.

2. இத்தகைய வலைப்பின்னல் அமைப்புக்கள் உருவாகிவிட்ட சூழலில் சிறப்புத் திறனைப் பெறுவது அதிகரிக்கும். வணிகச் சுழற்சி சுருங்கும். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையிலான பரிமாற்றங்கள் விரிவடையும். இதனால் நெகிழ்வுத் தன்மையிலும் உடன் விளைவுகளிலும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

3. தொடர்ந்து வேகமாக விரிவடையும் சேவை நடவடிக்கைகள் பன்னாட்டு அளவில் அமைவதற்கு மின் வணிகம் மேலும் பங்களிக்கும்.

4. உலக மயமாக்களின் முக்கிய விளைவு - தகவல் புரட்சி. ஏனெனில் சொந்தப் பண்பாட்டு மதில் நாடுகளை உலகஅளவில் மேன்படுத்துவது மூலமே நிறுவனங்களும் நாடுகளும் தங்கள் ஆற்றலை செயல்படுத்த முடியும்.

ஆகவே தகவல் தொடர்பு வசதிகளை மக்களும் நிறுவனங்களும் பரவலாகப் பயன்படுத்தும் நிலை, கல்வியறிவு பெற்ற தொழிலாளர்கள் - நுகர்வோர் அறிவு உருவாக்கம் மற்றும் பரவலாக மேன்படுத்தும் அமைப்புக்கள், ஆகியவற்றைக் கொண்ட நாடுகள் மாத்திரமே புதிய பொருளாதாரத்தில் செழிந்தோங்க முடியும். இத்தகைய நடு நிலை உருவாக்கல் பட்ட காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

9

இந்தப் பின்னணில் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது வளர்முக நாடுகள் பாதகமான நிலையிலேயே உள்ளன.

1995 நிலவரப்படி குறைந்த வருவாய் கொண்ட நாடுகள் 100 பேருக்கு 2.6 தொலைபேசி இணைப்புகள், 1000 பேருக்கு 2 கணினிகள் கொண்டதாக இருந்தன என உலககல்வி தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் உயர் வருவாய் உள்ள நாடுகளில் 100 பேருக்கு 54.6 தெலைபேசி இணைப்புக்களும் 1000 பேருக்கு 199 கணினிகளும் இருந்தன.

இணையப் பயன்பாடும் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் தான் மிகுதி. 1997 இறுதி நிலவரப்படி உலகெங்கும் உள்ள இணைப்புப் பயனிட்டாளர்களில் இந்நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகம்.

கல்வி நிலையங்களின் தரம் வீச்சு ஆகியவற்றிலும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையே பெரும் இடைவெளி இருக்கிறது. இதனால் உலக நாடுகளிடையே மட்டுமன்றி ஒரு நாட்டுக்குள்ளேயும் வருவாய் ஏற்றத்தாழ்வுகள் வலுவடைகின்றன. பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையிலான எழுத்தறிவு இடைவெளி கூடுதலாக இருக்கும் போது பொருளாதார வளர்ச்சி குறைவாக இருக்கும்.

இதனால் பொதுக் கல்வியின் பயன் பணக்கார மேல்தட்டு வகுப்பினருக்கே பெரிதும் போய்ச்சேரும். கணினிக் கல்வியைப் பொறுத்தவரை இன்னும் இந்த இடைவெளி அதிகரிக்கும்.

போட்டிக்கு ஆதரவான ஒழுங்கமைப்பு விதிமுறைகளைச் செயல்படுத்துவதற்கான வசதிகள் வளர்முக நாடுகளுக்கு இல்லை. இதே போன்று காப்புப் பண்பாடு, அறிவுசார் சொத்துரிமையைச் செயல்படுத்துவது ஆகியனது அந்நியமான கோட்பாடுகள். ஒளிவுமறைவற்ற தன்மையை மேம்படுத்துவது, அரசுப் பணிகளுக்கு அணுக்கமான அமைப்புக்களை நம்பியிருப்பது ஆகியவற்றுக்கும் இது பொருந்தும்.

உலக அளவில் பொருளாதார வேறுபாடுகளைக் குறைப்பதற்கு பதில் அதிகரிப்பதற்கான சமூகமாற்றம் நிகழ்வதையே இக்குறியீடுகள் அனைத்தும் சுட்டுகின்றன.

உலகப் பொருளாதார ஓட்டப்பந்தயத்தில் வளர்முக நாடுகள் பின்தங்கிவிடும். ஏனெனில் வெடித்துக் கிளம்பும் தகவல் நுட்பத்தை அறிவுப் புரட்சியாக மாற்றும் திறன் அவற்றுக்குப் போதுமான அளவு இல்லை தகவல் புரட்சியை பகுப்பாய்வு செய்தால் மாறுபட்ட சித்திரமே நமக்கு கிடைக்கும். 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழியாய் நேசிப்பவர்க்கு..!



எங்கும் வியாபித்து அரசாட்சி செய்தது இருள்:
அடர்ந்து செறிந்த இருளினூடு சிள்ளூடுகளும் தவளைகளும்
தமதிருப்பைச் சொல்லித் தயங்கித் தயங்கி ஒலித்தன!

மயான அமைதிபூண்ட சூழலைத் தகர்த்தவாறு
வீதியில் தடதடத்து ஓடும் காலடிச் சத்தம் - அச்சத்தினூடு
என் கேட்டல் எல்லையினுள் வளர்ந்து தேய்கிறது.
பின் தொடரும் அதிர்ந்து செல்லும் வண்டியில்
அவர்கள் வலம் வருகிறார்கள் போலும்!
ஓடிய அந்தப் பாதங்கள் எந்தச் சந்து தேடி ஒளிந்தனவோ?
உருத்தெரியா அந்தக் காலடிகளுக்காக உள்ளம் துடித்தழுதது!

அச்சம் கலந்து பிசைந்து விழுங்கிய உணவும்
பீதியுடன் தொண்டைக் குழிக்குள் இறங்கிய நீரும்
பிசாசுகளை எண்ணிப் பயந்ததில் தீய்ந்து விட்டன!
அந்த வேளைதனில் உனை ஏன் நினைத்தேனென்று தெரியவில்லை!

அன்று மழை ஓய்ந்து அந்திப் பொழுதில்
அவர்கள் வந்து போயிருக்க வேண்டும்:
எமது கல்லூரி முற்றவெளியெங்கும் வரிசை பிசகாத
சப்பாத்துக் கால்களின் சுவடுகள் எஞ்சியிருந்தன.
இரத்தக் கறை தோய்ந்த மண்டபத்து மூலையறைச் சுவர்மீது
புதிய தடயங்களை கண்ணிரண்டும்
பயத்துடனே தேடி நடுநடுங்கின.
என் விழிகளுக்குள் வெளவால்கள் சடசடத்துப் பறந்தன!

0

ஆதிரை;
கடைசியாக நீ கல்லூரி வந்த தினம்
அதுவென்றுதான் நினைக்கிறேன்.
அன்று சிரித்திடவே இல்லை நீ
சிந்தனை வயப்பட்ட முகத்துடன்
கல்லூரி வளவெங்கும் அலைந்து திரிந்தாய்!

பின்னர் நான் பார்க்க நேர்ந்த போராளிகளின் படங்களிலெல்லாம்
உன் முகத்தைத் தேடித் தோற்றேன்
இறுகிய முகக்கோலத்தை எப்படிப் பொறுத்தினாயோ?
நெஞ்சிலும் முதுகிலும் ஏதேதோ நிரப்பிய பைகளுடன்
சுடுகலன் ஏந்திய சிலை முகத்தைக் கற்பனை செய்து
பெருமூச்செறிந்தேன்: நீ இனி வரப்போவதில்லை!

0

துப்பாக்கி வரைந்த உன் இரசாயனவியல் குறிப்பேட்டைப்
பத்திரப் படுத்தி வைத்துள்ளேன்.
பாடத்தைவிட்டு உன் கவனம் திசைமாறிய தருணங்களில்
ஓரங்களில் நீ எழுதியுள்ள வாசகங்கள்
விட்டு விடுதலையாகும் உன் சுதந்திரக் கனவைச் சொல்கின்றன!

0

உன் நகர்வுகளை மோப்பம் பிடிக்கும் அறிமுகமற்ற சப்பாத்துக் கால்கள்
சனியன்களால்; ஆட்டுவிக்கப்படும் நாளைகளிலும்
எமது வாழிடங்களில் பதிந்து செல்லலாம்:
நீ கவனமாயிருந்து இலட்சியத்தை வென்றிகொள்!

-பஹீமா ஜஹான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தவொன்றோர் இடம்

ஆங்கிலத்தில்: **Katherine Mansfield**
தமிழில்: எம்.கே.எம்.ஷகீப்

முன் கதவின் வலப் பக்கமாக பெரிய ஆணியொன்று உங்களுக்கு தெரிகிறதுதானே? எனக்குத் தான்... என்னால் அதை இன்னும் மறக்கமுடியவில்லை. இப்போதும் கூடவே அதை நான் பார்த்துக் கொண்டிருப்பதாகத்தான் படுகிறது. அதைக் கழற்றி விடலாம் தான். ஆனால் அவ்வாறு செய்வதற்குரிய மனத் துணிவோ, சகிப்புத் தன்மையோ என்னிடமில்லை. அது அங்கேயே அப்படியே இன்னுமிருக்கிறதாய் நான் நினைத்துக் கொண்டிருக்கவேணும்.என் காலம் முடிந்த பிற்பாடும் அது அங்கு தான் இருக்க வேணும். அடுத்த வீட்டு ஆட்கள் சில வேளைகளில் இப்படிக் கதைப்பதை நான் கேட்பதுண்டு "அந்த இடத்தில் ஏதோ ஒரு கூடு கொழுவியிருந்திருப்பார்கள் போல.." இதைக் கேட்கையில் எனக்கு ஆறுதலாய் இருக்கிறது. அது இன்னும் முற்றாக மறக்கப்படவில்லை என்ற உணர்வு என்னுள் எழுந்து ஆறுதல் படுத்துகிறது.



அது எவ்வளவு அழகாக, இனிமையாகப் பாடியது என்பதை உங்களால் வெறுமனே கற்பனை செய்து பார்த்துவிட முடியாது. அது இப்போதெல்லாம் எனக்கு எந்த ஈர்ப்பையும் தராத எல்லாச் சின்னக் குருவிகளினதும் பாடல்களைப் போன்றதல்ல. அப்போதெல்லாம் அடிக்கடி நான் ஜன்னலால் வீதியைப் பார்ப்பேன். வீட்டைக் கடந்து போகிறவர்களும், வருகிறவர்களும் வாசலருகே அதன் பாடலைக் கேட்பதற்காக மெதுவாக செல்வதை நான் கண்டிருக்கிறேன். சிலர் ஒரேஞ்ச் மரத்தடி தரும் நிழலின் கீழே வேலியோடு ஒன்றியவாறு நின்று அதன் பாட்டைக் கேட்டுச் செல்வதையும் நான் கண்டிருக்கிறேன். நான் நினைக்கிறேன் அதன் ஓசை நீங்கள் எங்கேயும் கேட்டிராத ஒன்றைக் கேட்பது போன்ற ஒரு உணர்வைத் தருகிறதென்று. ஆனால் ஒரு முறை அதை நீங்கள் கேட்டுவிட்டால் அந்த உணர்வு உங்களுக்கு வேறெங்கேயும் வராது. அது எல்லோருக்குமாகவும் ஆரம்பத்திலிருந்து முடிவுரைக்குமாக பாடலைப் பாடியது போல் தான் எனக்குப் பட்டது.

உதாரணத்திற்கொன்று உங்களுக்குச் சொல்கிறேன். பகல்பொழுதுகளில் வீட்டைத் துப்பரவாக்கி முடித்துவிட்டு உடுப்பையும் மாற்றி விட்டு கையில் தையல் ஊசியுடன் ஏதாவது தைக்கலாம் என்று விறாந்தைக்கு வருவேன். வந்து குந்தி விட்டால் அது தன் கூட்டின் ஒவ்வொரு கம்பியையும் ஒற்றைக் காலால் தாண்டிக் கொண்டு கெந்திக் கெந்தி வரும். பிறகு என் கவனத்தைத் திருப்புவதற்காக இறக்கைகளை அடிக்கும். அதன் பிறகு சில பாடகர்கள் மேடைகளில் பாடும் போது தண்ணீரோ சோடாவோ ஏதாவது மிடர் மிடராய் அருந்துவார்களே அதைப் போன்று இதுவும் தனக்கு வைத்திருக்கிற தண்ணீரைக் குனிந்து ஓரிரு சொட்டுக்கள் அருந்தும். அதன் பின்னர் பாடத் தொடங்கி விடும். அதன் இனிமையான, அழகான பாடல் என்தையல் ஊசியை எங்கேயாவது கீழே வைத்துவிட்டு அதன் பாட்டுக்கே காதுகொடுக்க வைத்துவிடும். உண்மையிலேயே எனக்கு அந்த நிலையை சரியாக விவரித்துச் சொல்ல முடியாதிருக்கிறது. அப்படிச் சொல்ல முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்குமென நினைக்கிறேன். ஒவ்வொரு நாள் மதியமும் இதுதான் வழமையான ஒரு விடயமாக இருந்தது. அதன் ஒவ்வொரு வார்த்தையையும் நான் திறம்பட உணர்ந்துவிட்டேன் என்றுதான் எண்ணுகிறேன்.

நான் அதை மிகவும் நேசித்தேன். அது எப்படிப்பட்ட நேசிப்பு தெரியுமா?

எனக்குச் சொல்லத் தெரியவில்லை. சிலவேளைகளில் இந்த உலகத்தில் ஒருவன் ஏதோ ஒன்றில் காதல் கொள்வதும் நேசம் காட்டுவதும் அந்தளவுக்குப் பெரிதான விடயமில்லைதான். ஆனாலும் பாருங்கள் ஒவ்வொருவரும் எதையாவது காதலித்துத் தான் ஆக வேண்டியிருக்கிறது. உண்மைதான். எனக்கென்று ஒரு சிறிய வீடும். அழகான ஒரு தோட்டமும் எப்போதைக்குமாக இருக்கிறதுதான். பூக்களும் அதன் பணியை ஒழுங்காகச் செய்து கொண்டுமிருக்கின்றதுதான். ஆனால் அவையெல்லாம் எந்த அனுதாபத்தையும் எந்த சலசலப்பையும் என்னில் ஏற்படுத்தவில்லையே. நான் முதலில் அந்திக்கருக்கலில் ஒளிர்கிற நட்சத்திரத்தைத் தான் நேசித்தேன். (என்ன இது முட்டாளதனமாக இருக்கிறது என்கிறீர்களா?) மலையில் சூரியன் மறைந்த பிற்பாடு கொல்லைப் புறத்திற்குப் போய் இருட்டிய மரங்களுக்கிடையே தெரியத் தொடங்கும் அந்த நட்சத்திரத்திற்காக நான் காத்துக் கொண்டிருப்பது என் வழமையாக இருந்தது. தெரியத் தொடங்கியதும் “அதோ நீ அங்கிருக்கிறாய் அன்பே” என்று ரகசியமாய்ச் சொல்லுவேன். அதன் ஆரம்ப வெளிச்சக் கணங்களில் அது எனக்காக மட்டுமே தெரிவது போன்ற ஓர் உணர்வு ஏற்படும். ஏதோ ஒன்றுக்கு விரும்புவது போல் இருக்கிற ஆனால் அதை விரும்பிக் கொண்டிருக்காத அல்லது எதற்காகவோ கவலைப்படுவது போல் தெரிகிற என்னை அது புரிந்து கொள்ளவதாகப் பட்டது. நான் எவ்வளவு நன்றியுடையவளாக இருக்கக் கடமைப்பட்டவள் தெரியுமா!?

என்று தான் நினைத்தேன். அதன் பிறகு அதை நான் வெளியே ஓர் ஆணியில் கொழுவிவிட்டேன். அந்த நேரம் வீட்டில் தங்கியிருக்கும் மூன்று இளைஞர்களும் காலைச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வீடு எங்கள் இருவருக்கானதாகவும் இருக்கும் போது மட்டுமே அதை நான் உள்ளே கொண்டு வருவேன்.

அதனைக் குளிப்பாட்டி முடிப்பதென்பது சின்னப் பொழுது போக்கு மாதிரிதான். அது முடிந்தவுடன் மேசையின் ஓர் ஓரத்தில் பேப்பரொன்றைப் பரத்தி விரித்துவிட்டு அதன் மேல் கூட்டை வைப்பேன். அது இறக்கைகளை மடமடவென்று அடிக்கத் தொடங்கும். அதற்குத் தெரியாது தானே என்னவெல்லாம் வரப் போகிறதென்று! “நீ எப்பவுமே ஒரு குட்டி நடிகன்” என்று செல்லமாய் அதற்கு ஏசுவேன். கூட்டின் தட்டத்தை கழுவித்துடைத்து நல்ல துப்பரவான மண்ணைப் பரப்பி அதன் மேல் தண்ணீர் டின்களையும், சில விதைகளையும் தூவிப் பரப்பிவிடுவேன். கூடவே சில பச்சைக் காய்கறிகளையும், அரைவாசி மிளகாயையும் வைத்துவிடுவேன். அதற்கு வைத்திருக்கிற அனைத்தும் அதற்குப் பிடித்துப் போயிருக்குமென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அதற்காக எனக்கு அது வாழ்த்துச் சொல்லும்!

இயற்கையிலேயே அது மிக அழகாக, துப்பரவாக இருக்குமென்று உங்களுக்குத் தெரியுந் தானே? ஆனாலும் அதை குளிப்பாட்டுவது



> சிலவேளைகளில் இந்த உலகத்தில் ஒருவன் ஏதோ ஒன்றில் காதல் கொள்வதும் நேசம் காட்டுவதும் அந்தளவுக்குப் பெரிதான விடயமில்லைதான். ஆனாலும் பாருங்கள் ஒவ்வொருவரும் எதையாவது காதலித்துத் தான் ஆக வேண்டியிருக்கிறது

ஆனால் என் வாழ்க்கையில் அது வந்ததன் பின்னர் நான் அந்த மாலை நட்சத்திரத்தை மறந்து விட்டேன். இப்போது அது எனக்கு தேவையான ஒன்றல்ல. பறவைகளை விற்க வந்த அந்தச் சைனாக் காரன் அதை ஒரு சின்னக் கூடொன்றுக்குள் அடைத்து வைத்திருந்தான். இறக்கைகளை படபடத்தடித்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பதற்குப் பதில் அது மெலிதான பார்வையையும், மிகச்சத்தமற்ற முனகலையும் தந்து கொண்டிருந்தது. அந்தக் கணமே நான் அந்த மாலை நட்சத்திரத்தைப் பார்த்துச் சொன்னதைப்போல் “இதோ நீ இங்கிருக்கிறாய் என் அன்பே” என்று சொல்லத் தொடங்கிவிட்டேன். அப்போதிருந்தே அது என்னதுதான்.

எனக்கு சிலவேளைகளில், ஏன் இப்போதும் கூடத்தான் நானும் அதுவும் ஒவ்வொருவர் வாழ்வையும் எவ்வாறு பகிர்ந்து கொண்டோம் என்பதை நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாயிருக்கிறது. முதல் நாள் காலையிலேயே அதன் கூட்டிலிருந்து நான் துணியை விலக்கிய போது ஏதோ சொல்லி என்னை வாழ்த்துக் கூறியது போல் தான் இருந்தது. அது “மிஸ்ஸஸ் மிஸ்ஸஸ்” என்று சொல்லியிருக்குமோ

எதற்கென்றால் அது அந்த விஷயத்தில் சந்தோஷிக்கிறதென்பதையும், தூய்மையாக இருப்பதில் அதற்கு விருப்பமிருக்கிறது என்பதையும் உங்களால் உணர்ந்து கொள்ள முடியுமே..... அதற்காகத்தான். வேறொன்றுக்குமில்லை! குளிப்பாட்டும் போது முதலில் அது ஒரு பக்க இறகை அடித்துக் காட்டும். பிறகு தலையை ஆட்டிக் காட்டும். இதைச் செய்யும் போதெல்லாம் தண்ணீர்ச் சொட்டுக்கள் சமையலறை முழுவதும் தெளித்துவிடப்பட்டது போலிருக்கும். ஆனால் அந்தச் சந்தப்பத்திலும் கூட அதற்கு வெளியே சென்று விட வேண்டும் என்ற எண்ணம் வந்து விடுவதில்லை.

“இது போதும். இப்போது நீ நம்பிக்கைக்குரியவனாய், நன்றி காட்டுபவனாய் இருக்கிறாய் இதுபோதும்” என்று அடிக்கடி நான் அதனிடம் சொல்வேன். பிறகு அது ஒற்றைக் காலில் கெந்திக் கொண்டு சென்றவாறே தன் ஈரத்தை துவட்டிக் கொள்ளவாரம்பிக்கும். அதன் பிறகு ஓர் உலுப்பல்...... ஒரு சிலிர்ப்பு... தொண்டைப் பகுதியை அசைத்துச் சரி செய்துவிட்டு பாடத் தொடங்கி விடும். இவற்றையெல்லாம் அது செய்யத் தொடங்குகையில் நானும் கத்திகளையெல்லாம் கழுவிக் கொண்டிருப்பேன். அவற்றைக் கழுவித்

துடைத்து பலகையில் தீட்டிக் கொண்டிருக்கையில் அந்தக் கத்திகளும் சேர்ந்து பாடுவது போன்றுதான் எனக்குப் படும்.

துணை, ஒரு உறவு. அதுவும் எனக்கிருந்ததைப் போன்ற ஒரு முழுத்துணை எவ்வளவு இனிமையானது. அற்புதமானது என்பது தெரியுமா!? அதை நீங்கள் எப்போதாவது ஒற்றையாய் தனிமையாய் வாழ்ந்தால் உணர்வீர்கள். அப்படி வாழ்த்திருக்கிறீர்களா? ஆனால் உண்மையில், அங்கு என் வீட்டில் மூன்று இளைஞர்கள் தங்கியிருந்தார்கள் தான். ஆனால் அவர்கள் சாப்பாட்டுக்கு மட்டும் வாருவார்கள். இரவுச் சாப்பாட்டு வேளைகளில் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் அங்கேயிருந்து அன்றைய பேப்பரைப் பார்த்துவிட்டுச் செல்வார்கள். அவர்களெல்லாம் என் நாட்களைச் சந்தோஷப்படுத்துகிற இந்தச் சின்ன விஷயங்களிலெல்லாம் ஆர்வமாய் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாதுதானே! அதுமாதிரி அவர்களை ஆர்வப்படுத்தவும் முடியாது. வேண்டாம். வேண்டாம். ஏன் அவர்கள் அப்படியிருக்க வேண்டும் என எதிர்பார்க்க வேணும்.

அவர்களுக்கு உண்மையிலேயே நான் ஒன்றுமே இல்லைதான். ஒரு நாள் அவர்கள் மாடிப்படிகளிலிருந்து என்னைப் பற்றிக் கதைப்பதை அவர்களுக்குத் தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் என்னை "அவளொரு வயற்காட்டு பொம்மை" என்றார்கள். எனக்கு கவலையில்லை. அவர்கள் எப்படி வேண்டுமென்றாலும் என்னைச் சொல்லட்டும். அது எனக்கு ஒன்றும் செய்யப் போவதில்லை. ஆனால் அன்று அந்த மாலை நான் மட்டும் தனியே இருக்கவில்லை என்பதும் மட்டும் உண்மை. இதற்காக என்னுள் எழுந்த நன்றியுணர்வு எவ்வளவு அபரிமிதமானது தெரியுமா? எனக்கு அது இப்போதும் ஞாபகத்திலிருக்கிறது. அவர்கள் அப்படிக் கதைத்துவிட்டுப் போனதன் பிறகு அதனிடம் நான் கேட்டேன் "உனக்கு அவர்கள் எதை மிஸ்ஸஸ், மிஸ்ஸஸ் என்று கூப்பிடுகிறார்கள் தெரியுமா?" என்று. அது தன் தலையை ஒரு பக்கம் திருப்பி தன் சின்ன கூரிய ஒளிமிகுந்த கண்களால் என்னைப் பார்த்தது. அதன் பார்வையும், பாவனையும் எனக்கு அடக்க முடியாத சிரிப்பைத் தான் தந்தது. அது நினைத்திருக்கும் நான் அதை சிரிப்பூட்டுவதற்காக அப்படிச் செய்கிறேன் என்று.



நீங்கள் பறவைகள் வளர்த்திருக்கிறீர்களா? அப்படியில்லாவிட்டால் நான் சொல்கிற இதெல்லாம் ஏதோ மிகைப்படுத்தல்களும், கற்பனைகளும் நிறைந்ததாகத் தான் உங்களுக்குப் படும். பறவைகள் நன்றியற்றது. சின்னது, பூனை, நாய் மாதிரியாக வளர்க்கத்தகுந்ததல்ல என்ற எண்ணம் மக்களிடத்தில் இருக்கிறது. என் வீட்டுக்கு உடுப்புக் கழுவ வருகிற பெண்ணும். நான் வேறு பிராணிகள் வளர்க்காததையிட்டு ஆச்சரியப்பட்டு அடிக்கடி இப்படிச் சொல்வாள். "மிஸ். இந்தச் சின்னப் பறவைகளாலெல்லாம் ஒன்றுமேயில்லை மிஸ்". பொய். அது சுத்தப் பொய்!

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஒரு நாள் இரவு தூக்கத்தில் பயங்கரமான கனவு – கனவுகள் குரூரமான தாகத்தான் பெரும்பாலும் இருக்கின்றன – கண்விழித்து விட்டேன். அப்படி விழித்துக் கொண்டதன் பின்னும் அந்தக் கனவு தந்த பயத்திலிருந்து என்னால் விடுபட முடியாது போயிற்று. "கவுனை"ப் போட்டுக் கொண்டு கொஞ்சம் தண்ணீர் குடிப்பதற்காக சமையறைக்குப் போனான். அது மழைக்காலம். வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. எனக்குத் தூக்கக் கலக்கமாக வேறு இருந்தது. திரை போடப்படாத சமையலறை ஜன்னலூடே இருட்டு உளவு பார்த்துக் கொண்டிருப்பது போல் உணர்வேற்பட்டது எனக்கு.

திடீரென்று என்னில் யாருமற்ற தனிமையுணர்வு தோன்றி மனதை அலைக்கழித்தது. "நான் ஒரு பயங்கரக் கனவு கண்டேன்" என்றோ, அல்லது "அந்த ஜன்னல் திரையைப் போட்டு விடு" என்றோ சொல்வதற்கு யாருமற்ற தனிமையை உணர்ந்தேன். சில கணங்களுக்கு கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டிருந்தேன். சற்று நேரத்திற்கப்பால் "ஸ்வீட் ஸ்வீட்" என்ற மெல்லிய குரல் கேட்டது. அது.. அதன் கூடு மேசையில் இருந்தது. கூட்டுக்கு மேலால் போட்டிருந்த போர்வை சற்று நழுவி விலகிக் கிடந்தது. மெலிதான வெளிச்சத்துள் அதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. "ஸ்வீட் ஸ்வீட்" என என் அன்பான அது மீண்டும் சொன்னது. "நான் இங்கிருக்கிறேன். நான் இங்கிருக்கிறேன் கவலைப்படாதே" என்று அது சொல்லியிருக்கும். உண்மையிலேயே அது. அழுகை முட்டியிருந்த என்னை மிகவும் ஆசுவாசப்படுத்தியது.

இப்போது அது இல்லை. போயே போய் விட்டது. இதற்குப் பிறகு எந்தப் பறவையையுமோ, பிராணியையுமோ நான் வளர்க்க மாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் எப்படித்தான் என்னால் வளர்க்க முடியும்? அது கண்கள் சொருகிய நிலையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டிருந்ததை. இறக்கைகள் அசைவற்று விரிந்து கிடந்ததை என் அன்பிற்குரியவனின் பாடலை இனிமேல் நான் கேட்க முடியாது என்ற உணர்வு என்னில் பரவிக் கொண்டிருந்ததை என்னுள்ளும் ஏதோ செத்துக் கொண்டிருந்ததை நான் உணர்ந்து கொண்டிருந்ததை நினைக்கையில் எப்படி என்னால் இன்றொன்றை வளர்க்க முடியும்!? அதன் கூட்டைப் போல என் இதயமும் வெறுமைப் பட்டது போலாயிற்று. நான் அதிலிருந்து மீண்டு விட வேண்டும். உண்மைதான். நான் அப்படித் தான் செய்ய வேண்டும். ஒருவனால் எந்த நேரத்திலும் எதிலிருந்தும் மீண்டு விடக் கூடிய தன்மை இருக்கத்தான் செய்கிறது! சிலர் சொல்கிறார்கள் என்னிடம் எதையுமே சந்தோஷமாகக் கட்டுப்படுத்தி விடக் கூடிய ஒரு ஒழுங்கு, தன்மை இருப்பதாக..... இருக்கலாம். அவர்கள் சொல்வது சரியாக இருக்கலாம். என்னிடம் அது இருக்கிறது தான். அது என்னிடமிருப்பதற்காக எனக்குள்யிருக்கிற என் இறைவனுக்கு என் நன்றிகள்.

எப்படியிருந்தாலும்........ அசாதாரண விடயங்களில் மனதைப் பறிகொடுத்தநிலையில் இல்லாமல், ஞாபகங்களுக்கு மட்டுமே வழிவிட்டுக் கொண்டிருக்கிற இந்த நிலையிலும் கூட வாழ்க்கையில் எங்கோ ஏதோ ஒரு கவலை இருந்து அரித்துக் கொண்டிருப்பது போலவும் இருப்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். ஆனால் நான் உணர்க்கிற அந்தக் கவலை எல்லோருக்கும் தெரிந்தது போன்ற ஒரு நோயாலோ, வறுமையாலோ அல்லது ஒரு மரணத்தாலோ ஏற்படுகிற துயரம். கவலை போன்றதல்ல. இது வித்தியாசமானது. அது இங்கே..... இங்கே...... ஆழத்தில்... ஒரு அங்கமாய்...... ஒருவனின் உயிர் மூச்சைப் போலவுள்ளது. நான் எவ்வளவு தான் கடுமையாக வேலை செய்தாலும், களைப்படைந்தாலும் எனக்காக அது அங்கே காத்துக் கொண்டிருப்பதை நான் உணர்கிறேன். நான் நினைக்கவில்லை எல்லோருக்கும் இப்படியொரு உணர்வு இருக்குமென்று..... ஏன் சிலருக்கு அது பற்றியெல்லாம் ஒன்றுமே தெரிந்திருக்காது. அதன் சின்ன, இனிதான பாடல்களுக்கிடையே மேவும் இந்த எனது துயரம் உங்களுக்கு ஏதோ அதீதமான ஒன்றைப்போல் இருக்கிறதல்லவா.....!? ஆஹ்... என்னது சத்தம்? நான் கேட்டதா?

O

குறிப்பு:
இக்கதையின் ஆங்கிலத் தலைப்பு "Love somthing one must" என்பதாகும்.

---

# இன்னொரு மாலைப் பொழுதினாய்



மாலைத் தேனீர்
ஆறிக்கிடந்தது.
என்னுடன் நீ
பறிமாறிக்கொள்ளும்
ஓராயிரம் கனவுகளும்
விழிகளுள் நொருங்கிச்சிதறின.

தேனீர்க்குவளையின் விளிம்பினிடை
நமது எல்லைகள் விரியும்,
சுதந்திர நினைவின் எதிரொலி நம் விழிகளில் கசியும்.
காலம் முகிழாக்கனவுகளும,
வெகுளித்தனங்களுமற்ற ஓர் உள்ளுலகில்
நாம் வாசமிருந்தோம்.

நம் சிநேகிதம்
இப்படித்தான் நித்யம் பெற்றது.

நேற்று முன்னிரவு
என் விரல் தழுவிய
உன் விரல்களின் மென்னுரசல்
இன்னுமென் உள்ளங்கையில் சுடுகிறது.

ஊர் செம்மண் தரையில் கைகோர்த்து
நடக்கையில - நீ
ஒரு கவிதை போலச்சிரித்து வந்தாய் என்னுடன்.

காலங்கள் நெடுகவும்
இப்படி சிரித்துத்திரிவாய்
என்ற என் கணிப்பீட்டின் மீது
அவர்கள் துப்பாக்கி கொண்டு
அழித்து விட்டுச்சென்றனர்.
என் பிரிய நண்பனே
குறைந்த பட்சம்
நீ எதற்காக கொல்லப்பட்டாய் என்றேனும் அறிவாயா?

ஒட்டமாவடி அறபாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமுனா ராஜேந்திரன்

# நினைவுகள் மரணிக்கும் போது

# When Memory dies

## சிவானந்தனின் நூற்றாண்டு காலம் குறித்த தியானம்

*மனிதகுலம் நிரந்தரத்தில் வாழ்கிறது. ஆகவேதான் நமக்கு நினைவுகள் மரபுகள் மதிப்பீடுகள் தரிசனம் எல்லாமும் இருக்கின்றது.*

*சிவானந்தனுடன் உரையாடல் : எங்கே போராட்டமோ அங்கே என் இதயம் கிழக்கும் மேற்கும் தொகுப்பு: 1997*

*நினைவுகள் மரணிக்கும் போது மூன்றாம் பாகத்தின் முகப்பு வரிகள் மனிதர்கள் மரணிக்கிறார்கள். பிறழ்ந்த நினைவுகள் கட்டமைக்கப்படுமானால்? அது கொலையாகும்*

சிவானந்தனின் இந்நாவலை முற்றமுழுதான அரசியல் நோக்கில் வாசிப்பதென்பது ஒருவர் இந்நாவலில் வாழும் மனிதர்களுக்குச் செய்கிற துரோகமாகும். கோடிக்கணக்கான மனிதர்களின் இடையில் வாழ நாம் தலைப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் ஒரு கடந்த கால நினைவுப் பிரபஞ்சத்தைக் கொண்டு திரிகிறோம். இதில் எவரிடம் தான் சொல்ல ஒரு கதையில்லை? எவர்தாம் இங்கு முக்கியமற்ற மனிதர்? இவர்கள் அனைவரிடமும் காதலும் வாழ்வும் மரணமும் மோகித்தலும் வெறுப்பும் சார்ந்ததொரு வாழ்வு இருக்கிறது. இவ்வகையில் இந்நாவல் இலங்கைத் தீவு முழுக்கவுமான மனிதர்கள் பற்றியது. இந்தத் தீவு மனிதர்களின் கடந்தகால வரலாறு இவர்களிடமிருந்து பல்வேறு அன்னியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. வரலாற்றை மறுவாசிப்பு செய்யப் புறப்பட்ட இவர்கள்- பல வரலாறுகள் பல்கலாச்சார நினைவுகள் பரவிய ஒரு கலாச்சார வெளியை-மதம் மொழி இனம் சார்ந்த பொய்யான நினைவுகளாகக் கட்டமைக்க முற்பட்டார்கள். நேசமும் பாசமுமாய் இருந்த நினைவுகள் மரணித்தன. அகழ்வாய்விலும் மானுடவியலிலும் கல்விச் சாலைகளிலும் விஷம் விதைக்கப் பட்டது. அடர்ந்த வனங்களும் அருவிகளும் அழகும் நிறைந்த இந்த நாடு பிணக்காடாக ஆகியது. இந்நாவல் இந்த மனிதர்கள் குறித்த கதை.மூன்று தலைமுறை மனிதர்கள் குறித்த நூற்றாண்டு காலம் குறித்த தியானத்தின் விளைவு.

நாவல் அதனது அரசியல் அறவியல் செய்திக்காக மட்டுமல்ல அதனது அடிப்படை மனிதனது கலாச்சார நாகரிக உறவுகள் தொடர்பான சித்தரிப்புக்காகவும் முக்கியமான நாவலாகும். பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மனிதனுக்காக அவனது மொழியில் அவனது வாழ்வின் அர்த்தங்களும் அனர்த்தங்களும் அழகும் இந்நாவலில சொல்லப் பட்டிருக்கிறது. தால்ஸ்த்தோயின் முழுவாழ்வுதழுவிய நாவல் கட்டமைப்பின் வழியும் தரிசன நோக்கிலும் இந்நாவல் விரிகிறது. போரும் வாழ்வும் சாவும் பிரிவும் உறவும் காமமும் அன்பும் என முழு மானுட வாழ்வு தழுவியதான இலங்கைத் தீவு மனிதர்களின் மூன்று தலைமுறையினரின் நூற்றாண்டு காலத் தியானமாக இந்நாவல் விரிகிறது. இந்நாவலில் வரலாற்றுத் தவிர்ப்புகள் இல்லை. பின்நவீனத்துவ மந்திர உச்சாடனங்கள் இல்லை பிசாசுகளும் மொழித் திரிபுகளும் நடமாடுவதில்லை. வாழ்வின் செய்தி போலவே நாவல் நேரடியாகப் பேசுகிறது. இந்நாவல் மிகச் சாதாரணமான மனிதர்கள் பற்றிய மிக எளிமையான யதார்த்தமான ஆழமான அர்த்தங்களை உள்வாங்கிய நாவல். கதையின் போக்கில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் வந்து போகிறார்கள். நொடிப்பொழுதே வந்து போகிற எல்லா மனிதர்களுக்கும் இந்நாவலில் அடையாளமும் முகமும் தரப்பட்டிருக்கிறது. சிங்கள இடதுசார்பான டாக்டர் லாலைக் கொல்ல வருகிற மகளை இழந்த சிங்கள மனிதனுக்கு முகம் தரப்பட்டிருக்கிறது. பஸ் கட்டண உயர்வினால் தன்னால் கட்டணம் கொடுத்து அடுத்த இடத்தில் சென்று வெங்காயம் விற்கமுடியாது என்று சொல்கிற வயோதிகத் தாய்க்கும் முகம் தரப்பட்டிருக்கிறது. மனிதர்கள் மீது அடிப்படையான அன்பும் வரலாற்றின் மீதான தீராத தேடலும் கொண்ட மனிதருக்கே இந்தத் தரிசனம் சாத்தியம்.

நாவல் குறித்த அவதானங்கள் பல்வேறு பரிமாணம் கொண்டவை. சமகால உலகின் உள்நாட்டு யுத்தங்கள் இனமொழி மத அடிப்படையிலான யுத்தச் சாவுகளின் பின்னணியில் நாவல் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் வியட்நாமின்-பாசிச காலத்தின்-பாஸ்க் பிரதேசத்தின்-யுகோஸ்லாவியாவின்-இந்தோனேஷியாவின் நாவல்களுடன் இந்நாவல் ஒப்பு நோக்கப்படுகிறது. அதிகரித்துவரும் பின் காலனித்துவ ஆசிய இலக்கியம் எனும் விமர்சனப்பின்னணியிலும் இந்நாவல் பார்க்கப்படுகிறது. ருஸ்டியின் "மிட் நைட் சில்ட்ரன்" கோஹெட்ஸியின் "டிஸ்கிரேஸ்" போன்றவற்றுடன் ஒப்பு நோக்கி பேசப்படுகிறது. 1958க்குப் பின்னான தமிழர் சிங்களவர் வாழ்வில் பரஸ்பர அன்பு கொண்ட மனிதர்கள் வாழ்ந்ததற்கான சாத்தியமின்மை பற்றிய வடக்கு சார்ந்த தமிழ்ப்பார்வையும் வைக்கப்படுகிறது. நாவலின் விவர்ணக் கட்டமைப்பு பற்றிய பிரச்சனைக்கும் பிரச்சினையில் ஆசிரியரின் நேரடி அனுபவம் சார்ந்த அறிவுக்கும் இடையில் உறவுபடுத்தப்பட்டு நாவலின் பலவீனமான கண்ணிகள் ஆய்வு செய்யப்படுகிறது.

நாவலில் நான் அனுபவம் கொண்ட ஒரு மிகமுக்கியமான பிரச்சினை எமது கிழக்கத்திய மனிதர்களின் வாழ்வையும் அதில் பொதிந்திருக்கும் இயல்பான அன்பையும் உறவுகளில் உறைந்திருக்கும் அழகையும், நிலவும் ஐரோப்பியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரப் பரவலின் பின்னணியில் மிகவும் உள்ளார்ந்த பிரமிப்புடன் வாஞ்சையுடன் எமது மனிதர்களுக்குள் மீளப்பார்த்துச் செல்கிறது எனும் பிரச்சினைதான்.. மேற்கத்தியர்களிடம் வரலாறும் அதனது படிப்பினைகளும் இருக்கிறது ஆயின் வாழ்வில் அழகு இல்லை. எமக்கு வரலாறும் அதன் படிப்பினைகளும் இல்லை- வரலாறு திருடப்பட்டது-திசை மாற்றப்பட்டது- இப்போது மறுவாசிப்புக்குட்படுத்தப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்படுகிறது. ஆனால் எமது வாழ்வில் அன்பும் அது தரும் அழகும் விரவிக்கிடந்தது. இன்று வரலாற்றைத் தேடும் போக்கில் எமது அன்பும் அழகும் நிறைந்த நினைவுகளைத் தொலைத்துவிட்டு நிற்கிறோம். இது எமது ஆதாரமான பண்பாட்டின் மரணம் என்பதை நாவல் வலியுறுத்திச் சொல்கிறது.

நாவல் மூன்று பகுதிகளால் ஆனது. 1.மறக்கப்பட்ட காலை 2. எனது வேர்கள் ஆயின் மழை இல்லை 3. பிறழ்ந்த நினைவுகள். மறக்கப்பட்ட காலை பகுதி சண்டிலிப்பாயிலிருந்து கொழும்பு நோக்கி வரும் வடக்கு இலங்கை விவசாயி பாண்டியனின் மகனான ஆங்கிலக் கல்விகற்ற சகாதேவனின் கதை. எனது வேர்கள் ஆயின் மழை இல்லை பகுதி மத்திய இலங்கையில் சிங்கள மக்களுடன் வாழநேர்ந்த ராஜன் என்கிற ராஜநாதனின் கதை. பிறழ்ந்த நினைவுகள் பகுதி சிங்களத் தாய்க்கும் தமிழ் வளர்ப்புத் தந்தைக்கும் இடையில் வாழ்க்கையை அன்பைக் கற்க நேர்ந்த விஜயின் கதை.

முதல் பகுதிக் கதையில் வட இலங்கையின் சண்டிலிப்பாய் கிராமத்தைச் சேர்ந்த நன்றாகப் படிக்கக்கூடிய பையனான சகாதேவன அவனது ஆசிரியரின் ஏற்பாட்டின் பேரில் கொழும்பில் சென்று ஆங்கிலக் கல்வி கற்கிறான். தனது பத்தொன்பதாவது வயதில் தபால் திணைக்களத்தில் வேலைக்குச் சேர்கிறான். பெண் கொடுத்து பெண் எடுக்கும் ஏற்பாட்டின்படி ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்து கொள்கிறான். அவனது நண்பன் திஸ்ஸாவுடனான நட்பில் தொழிற்சங்கவாதி எஸ்டபிள்யு உடனும் அவனது வயோதிக மனைவியான பிரேமாவுடனும் அவர்கள் வீட்டில் தங்குகிறான். அதன் போக்கில் தேசியவாத சமரசவாத இடதுசாரிகளைக் கண்டு கொள்கிறான். கடப்பாடுடைய இலட்சியவாதிகளையும் காண்கிறான். திஸ்ஸாவின் காதலியான முஸ்லீம் பெண் ஸோனாவின் சகோதரன் சுல்தான் போலி தொழிற்சங்க வாதியானவனின் துரோகத்தினால் கொல்லப்படுகிறான்.

இரண்டாம் பகுதிக் கதை சகாதேவனின் மகன் ராஜனுடையது. தனது தந்தையைப் போலவே ஆங்கிலக் கல்வி பெறும் ராஜன் கல்லூரி வாழ்க்கையில் சிங்கள நண்பன் லாலையும் அவனது சகோதரி லலியையும் சந்திக்கிறான்.லலியின் மீது காதல் கொள்கிறான். லலியின் முன்னை நாள் காதலன் சிங்கள நடவடிக்கையாளன் ஸேனா ஹர்த்தாலின் போது நடந்த கலவரத்தில் சுட்டுக் கொல்லப்பட- ஸேனா மூலம் கர்ப்பிணியான லலியை அவள் மீது காதல் கொண்ட ராஜன் மணந்து கொள்கிறான். லலிக்குப் பிறக்கும் குழந்தை விஜய்க்குத் தகப்பனாகிறான். 1958 இனக் கலவரத்தில் தமிழ்ப் பெண்ணெனக் கருதி சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகி லலி மரணமடைந்த பின்னால் ராஜன் தனது மகனை ஸேனாவின் தாய் தந்தையர்களிடம் வளரவிட்டு -தனது நண்பனும் விஜயனின் மாமாவுமான லாலின் பொறுப்பில் விட்டுவிட்டு இங்கிலாந்து சென்று விடுகிறான். இது நாவலின் இரண்டாம் பாகம்.

மூன்றாம் பாகம் விஜயின் கதை. கல்லூரியில் படிக்கும் காலத்தில் பத்மா எனும் சிங்களப் பெண்ணுடன் காதல் கொள்ளும் விஜய் தொடர்ந்து ஜேவிபி இயக்க நடவடிக்கையில் ஈடுபடுகிறான். மலையகத் தமிழர்களையும் இலங்கைத் தமிழர்களையும் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பகுதியாகக் காணும் அவ்வியக்கத்தின் ஐந்தாவது கருதுகோள் "பிப்த் தீஸிஸில்" பொதிந்திருக்கும் இனவாதத்தை நினைவு கூர்கிறான். பத்மா இலங்கை அரசாங்கத்தின் நரவேட்டையில் மரணமடைகிறாள். ஜே.வி.பி.இயக்கம் அழித் தொழிக்கப்படுகிறது. இடையில் மலையகத் தமிழப் பெண்ணான மீனாவைக் கண்டு காதல்வயப்படுகிறான். மலையகத் தமிழர்களின் மீதான தாக்குதலில் பெண்கள் பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மலையகத்திலிருந்து சென்றுவிடும் மீனாவை அவனால் காணமுடியாது போக கல்வி கற்பிக்க அமர்கிறான். அங்கு சிங்களப் பெண் மானலை யதேச்சையாகச் சந்தித்து மணந்து கொள்கிறான். இனவாதம் ஆசிரியையான மானலை முழுக்கவும் பீடித்திருக்கிறது. எண்பத்து மூன்று கலவரத்தைத் தொடர்ந்து அவர்களுக் கிடையில் நடந்தே தீர வேண்டிய பிரிவு நடந்தேறுகிறது. கொலையிலிருந்து தப்பும் மீனாவுடன் யாழ்ப்பாணம் செல்லும் விஜய் தனது உறவினனும் இயக்கத் தலைவருமான ரவியின் மூலம் சுட்டுக் கொல்லப்படுகிறான்.இது மூன்றாம் பகுதி.

ஒரு வகையில் அதி உயர் அரசியல் பிரக்ஞை நோக்கியதாகவும் இந்நாவல் அமைகிறது. வடக்கிலங்கையின் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த சகாதேவன் நகர வாழ்க்கைக்கும் அதனின்று பெருநகர் வாழ்க்கைக்கும் நகர்வதை முதல் பகுதி சொல்லும் போது காலனியப் பிரக்ஞையை உடைத்துக் கொள்ளும் சிங்கள சுதேசி உணர்வின் வளர்ச்சியையும் இணைந்தபடி சொல்லிச் செல்கிறது. அரசியல் ரீதியில் தாராளவாதக் கண்ணோட்டம் கொண்ட மரபாளரான சகாதேவனின் மகன் ராஜநாதன் பெருநகர்க் கலாச்சார அரசியல் வாழ்வினூடேயும் காலனிய எதிர்ப்பு சர்வதேசிய மூலதனச் சார்பு வளர்ச்சியினூடேயும் இடதுசாரி அரசியல் சார்புநிலை பெறுவதனை இரண்டாம் பகுதி சித்தரிக்கிறது. கடந்த நூறாண்டு கால வளர்ச்சியாக எழுந்திருந்த காலனிய எதிர்ப்பு சிங்களதேசிய உணர்வு நிறத்தையும் மொழியையும் இனத்தையும் அடிப்படை கொண்ட அரசியலாகி மேல்மத்தியதரவர்க்க சிங்கள இடதுசாரிகளையும் அதி தீவிர இளைஞர்களையும் தனக்குள் இழுத்துக் கொள்வதை மூன்றாம் பகுதியில் விஜயினுடைய வாழ்க்கை சொல்கிறது.

விஜய் நம் காலத்தின் விமர்சனபூர்வமான அதி உயர் பிரக்ஞை பெற்ற சோசலிஸ்ட்டாக இருக்கிறான். நிஜத்தில் லங்கா சம சமாஜக் கட்சியில் வெறுப்புறும் லால்- அவனது சகோதரியும் ராஜனின் மனைவியுமான லலி -ராஜன் - லலியின் மகனும் சிங்கள தமிழ் மனிதனுமான- சேனா எனும் நடவடிக்கையாளனுக்கும் லலிக்கும் யதேச்சையான காதலில் பிறந்தவன்- சேனா 1980 ஹர்த்தால் வன்முறையில் கொல்லப்பட லலியின் மீதான தீராத காதலினால் அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்கும் ராஜனின் மகனாக வளர்ந்தவன்- இவர்களது அரசியல் ஆன்மீக வாழ்வாகத்தான் நாவல் விரிகிறது. விஜயின் பாத்திரம் தான் நாவலின் உயிர்நாடியான கருத்தியல் பிரதிமையாக நமது இறுதி நினைவுகளில் உறைகிறது. விஜய் ஒரே சமயத்தில் சிங்களவனாகவும் இருக்கிறான். தமிழனாகவும் இருக்கிறான். அதே வேளை இரண்டு பேருமே இனவிஷம் ஏறிய நிலையில் மறுக்கப்படவும் சந்தேகிக்கப்படவும் ஆன உயர் அன்பு நிறைந்த உயிர் ஜீவியாக இருக்கிறான். கடந்த கால நினைவுகளின் அற்புதமான இலட்சிய வடிவமாகத்தான் அவன் நாவலில் பரிமாணம் பெறுகிறான். அவனது வேர்கள் இலங்கைத் தீவு முழுக்கத் தழுவி அழுத்தமாக இருக்கிறது. ஆனால் இன்று அவனுக்கு வேர்கள் இல்லை.இந்தச் சோகம் தான் நாவலின் ஜீவனாக இருக்கிறது.

இரண்டு தரப்பிலும் வெறுப்பும் வேதனையும் கசப்பும் வெஞ்சினமும் வளர்ந்துவிட்ட இன்றைய சூழலில் விஜய்யின் பாத்திரம் நடைமுறை மனிதனாக ஒப்புக் கொள்ளப்படுவதில் இரண்டு பக்கமுமே சாத்தியமில்லைதான். ஆனால் மனிதன் கடந்த காலத்துடனும் நினைவுகளுடனும்தான் வாழ்கிறான். நிகழ்காலம் விஷமானது வரலாற்றின் சோகம்.இந்தக் கோடையும் வெப்பமும் மரணமும் எதிர்காலத்தில் மறக்கப்பட்டுவிடலாம். ஆனால் அப்போதும் கடந்த கால நினைவுகளும் காதலும் அன்பும் வாழும். ஏனெனில் மனிதன் காதலில் திளைக்கவும் அன்பு செய்யவும் அடுத்தவரை நேசிக்கவும் பிறந்தவன். இந்தத் தரிசனம் சிலருக்கே வாய்க்கிறது. கலைஞன் இதை கலா தரிசனம் என்கிறான். தத்துவவாதி இதைக் காலதரிசனம் என்கிறான். மார்க்ஸ் போன்ற நடைமுறை மனிதர்கள் இதை இயங்கியல் என்கிறார்கள். சில மனிதர்கள் - நிலவிய எக்காலத்தையும் மீறி இந்தத் தரிசனம் பெறுகிறார்கள். அதனால்தான் யாழ்ப்பாணத்தில் ஒரு அபத்தமான சூழலில் இயக்கத் தலைவரான கமாண்டர் ரவி -தன் காதலனும் சிங்களவனும் தமிழனும் ஆன-விஜயை சுட்டுக் கொன்ற பின்னால் மலையகத் தமிழ்ப் பெண்ணான மீனாவுக்குக் கண்ணீர்விட முடிவதில்லை. அவள் பெருமிதத்துடன் தீர்க்க தரிசனமாகச் சொல்கிறாள். "இந்த மண்ணில் இருந்த ஒரே நாகரிகமான ஜீவியையும் கொன்றுவிட்டீர்கள். இனி ஒன்று நாம் ஒரே முழுமையாக இருப்பதென்பது சாத்தியமேயில்லை"

நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் கடைசியில் என்பதுகளின் இறுதியில் முடிகிறது.

நானூற்றுப் பதினோரு பக்கங்கள்கொண்ட இந்த நாவல் இரண்டு தளங்களில் சமாந்தரமாக இயங்குகிறது.

1.இந்த நூற்றாண்டு கால சமூக வளர்ச்சி என்பது எவ்வாறாக இத்தீவில் வாழும் மக்களின் உறவுகளில் பாதிப்புச் செலுத்தியிருக்கிறது என்பதை நாவல் சொல்கிறது.சிங்கள தமிழ் முஸ்லீம் கிறித்தவ மலையக மக்களுக்கிடையிலான உறவுகள் எவ்வாறு வளர்ந்து தேய்ந்து விஷம் பாரித்துப் போனது என்பதைச் சொல்கிறது.

2.பல்வேறு காலனியங்கள் எவ்வாறாக வடக்குத் தமிழர்களை காலனிய அமைப்பின் எழுத்தர்களாகவும் தென்னிலங்கைச் சிங்களவர்களை பியூன்களாகவும் ஆக்கியது என்பதை நாவல் சொல்கிறது. பயிர் வளராத குழந்தைகள் மட்டுமே வளரும் வரண்ட வடக்கு பூமித் தமிழர்களுக்கு எவ்வாறாக கல்வி ஒரு மூலதனமாகவும் தமது சகோதரியருக்கான சீதனத்துக்கான வருவாயாகவும் வாழ்வு முறையாகவும் ஆனது என்பதை நாவல் சொல்கிறது. காலனிய எதிர்ப்புத் தேசிய வாதம் எவ்வாறாக தமிழர் எதிர்ப்புத் தேசியமாகவும் சிங்கள மொழி மத இனத் தேசியமாகவும் வளர்ச்சியுற்றது என்பதை நாவல் சொல்கிறது. காலனிய எதிர்ப்புத் தேசியம் எவ்வாறாக இனவாத சோசலிசமாக இடதுசாரி மொழியைச் சுவீகரித்தது என நாவல் சொல்கிறது. அதி உயர் வர்க்கத்தவர்களின் வர்க்கநலன் சோசலிசம் எவ்வாறாக வர்க்க சமரசமாகி இனவாதஅரசியலில் கரைந்தது என்பதை நாவல் சொல்கிறது.

சோசலிசம் இறுதி இலக்கு அல்ல அதுவே பாதையும் இலக்குமாகும். அதிகாரத்திற்குப் பின் சோசலிசம் என்பது இல்லை. அதிகார நிலைநாட்டம் பயங்கரத்தின் தொடக்கம் என்று நாவல் சொல்கிறது. இதுவரையான இலங்கைத் தீவின் இடதுசாரிவாதமும் சோசலிச சிந்தனையும் சித்தாந்தத்தி லிருந்து பிறந்ததாக இருக்க வடகிழக்குத் தமிழ் இளைஞர்களின் அரசியல் எவ்வாறாகச் சித்தாந்தம் தவிர்த்த நடைமுறையிலும் துப்பாக்கி அதிகாரத்திலும் நம்பிக்கை கொண்டு இறுகியது என்பதையும் நாவல் சொல்கிறது. சோசலிசம் என்கிற லட்சியவாதம் மரணித்துப் போனது. இயக்கத் தலைவரான யோகிக்கு சமநிலைச் சமூகம் என்பது தற்போது இரண்டாம் பட்சம். அதிகார நிறுவனங்களே தற்போது தேவை.முதலில் மக்கள் இருந்தார்கள். அவர்களின் கௌரவம் காப்பாற்றப்பட்டபோது அவர்கள் போராளிகளோடு நின்றார்கள். மக்களின் நலனில் யார் அதிகாரம் செலுத்துவது என்பதில் இயக்கமோதல்கள் நிகழ்ந்தபோது மக்கள் இரண்டாம் பட்சமாகி நிறுவனமும் அமைப்புக்களுமே முக்கியமாகின. மக்கள் அந்நியமாகினர் அவர்கள் பயம் கொள்ளவும் செய்தார்கள் என்கிறது நாவல்.

விஜய் ஈழம்தான் தீர்வு என்றும் கருதுகிறான் .சோசலிச ஈழத்தின் அமைப்புக்கள் பற்றியும் அவன் சிந்திக்கிறான். ஆனால் அதிகாரத்தின் பின் சோசலிசம் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. விடுதலையின் பாதையும் இலக்கும் சோசலிசத்தை நோக்கியதாயின் போராட்டத்தினது நிறுவன அமைப்பும் மக்களின் பாலான அணுகுமுறையும் கீழிருந்து பரிமாணம் பெறுவதாக மக்களின் பங்கெடுப்பிலிருந்து பரிமாணம் பெறுவதாகவே அமையும். இது சோவியத் பின் புரட்சி சமூகங்கள் தந்த தரிசனம். இலங்கைத் தீவில் சே குவேராவை ஆதர்ஷமாகக் கொண்ட இளைஞர்களின் எழுச்சி இனவாதமாகப் பரிமாணம் பெற்றதிலிருந்து விஜய் பெற்ற அனுபவம். அதி உயர் வர்க்க லங்கா சம சமாஜ டிராட்ஸ்கியர்கள் சந்தர்ப்பவாதிகளானதினால் சோசலிச கோஷம் இனவாதத் தேசியமாகப் பரிமாணம் பெற்றதினால் கிடைத்த தரிசனம். நினைவுகள் தந்த வரலாற்றுப் பாடம் இதுதான். இந்த நினைவுகள் மரணிக்கும் போது மனிதர்கள் மரணிப்பர். மக்கள் மரணிப்பர் என்கிறது நாவல். இந்த நினைவுகள் வரலாற்றை மறுவாசிப்புச் செய்கையில் சின்னபின்னமாகிப் பிறழ்ந்த நினைவுகளாகுமாயின் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கொலையாக, தற்கொலையாக முடியும் என்கிறது நாவல்.

நாவலில் மரபும் மாற்றமும் பல்வேறு தலைமுறை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களிடம் எவ்வாறாக இயல்பாக அணுகுமுறை மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது என்பது அழகாகப் பரிமாணம் பெறுகிறது. சகாதேவனும் அவரது மனைவியும் லலி ராஜனின் கலப்பு மணத்தை ஒப்புக் கொள்ளும் நிகழ்வு- ராஜனின் பிற சகோதரிகளும் அவனது அன்னையின் உறவினர்களும் லாபமே குறிக்கோளாகிய கொழும்புத் தமிழர்களாகும் சித்தரிப்பு. பெண்கள் பாத்திரச்சித்தரிப்பும் நெருக்கடியான காலங்களில் அவர்களது அழுத்தமான உளவியல் நிலைபாடுகளும் அதியற்புதமாக சித்தரிப்புப் பெறுகிறது.

தொழிற்சங்கவாதியான வயோதிபரின் மனைவியான பிரேமா- போராளியான திரவியின் தாயான லீலா- மரணமுற்ற ஜேவிபி போராளிப் பெண் பத்மா- சிங்கள மனித உரிமையாளர்கள் சரத் தமயந்தி-லாலின் தங்கையும் விஜயின் தாயும் ராஜனின் காதல் மனைவியுமான லலி- ராஜனின் தாயும் சகாதேவனின் மனைவியுமான பெண்மணி- விஜயின் காதலியும் மலையகக் கூலித் தொழிலாளி சஞ்சியின் மகளுமான மீனா- - நாவலில் கொஞ்ச காலமே வந்து போயினும் அழுத்தமான நினைவுகளை விட்டுச் செல்லும் முஸ்லீம் பெண் சோனு- சமரச தொழிற்சங்கவாதி முனசிங்க-நம்மைக்கலவரப்படுத்தும் சிங்களப் பெண் விஜயனின் மனைவி மானல்- பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகி பிரசவத்தின் போது மரணமுறும் மலையகத் தமிழ்ப் பெண்- அகதிகளுக்கு உதவும் கத்தோலிக்க அன்னை- பாலுறவுச் சாகசம் புரியும் மிஸ் முனசிங்கே- ஞானியேயான காளை மாட்டு வண்டியோட்டி- முழு இலங்கை மனிதர்களிடமும் அன்னியமாகி நடமாடும் மனசாட்சி மிக்க மனிதர் மாமா ஞானம்- தொழிற்சங்கவாதி எஸ் டபிள்யூ- சகாதேவனின் காதலி ராணி- என நூற்றுக் கணக்கான பாத்திரங்கள் நாவலில் நடமாடுகிறார்கள். இவர்களது குணச்சித்திரங்களெல்லாம் அற்புதமாக உருவாகியிருக்கிறது.

நாவலில் ஆண்பெண் உறவு அவர்களது உடல் இருப்பு சார்ந்த சித்தரிப்புக்களும் முக்கியமாக பேசப்படவேண்டும் என நினைக்கிறேன். லலியின் மார்பும் பிருஷ்டங்களும் தொடைகளும் உடனடியாக ராஜனுக்குக் கிளர்ச்சியூட்டுகிறது. ராணி உரல் இடிக்கும் போது மேலேறி இறங்கும் முலைகள் சகாதேவனுக்குக் கிளர்ச்சியூட்டுகிறது. கிடைத்த சந்தர்ப்பத்தில் ஒழுங்கையில் அவளது உதடுகளைக் கவ்வும் சகாதேவன் போலவே ராஜனும் மிஸ் முனசிங்காவை சமையலறையில் முத்தமிட்டுக் கட்டிப்பிடிக்கும்போது அவனுக்குக்கால்சட்டை புடைப்புக் கொள்கிறது. விஜயின் கைகள் நேரடியாகவே மானலின் மார்பைப்பிடிக்கிறது. மீனா விஜயுடன் பாலுறவு கொள்வது பற்றி அலட்டிக் கொள்வதுமில்லை சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்பது தான் நடைமுறைப் பிரச்சினையாக இருக்கிறது. கிழக்கத்திய மற்றும் தமிழ் மனத்தின் பாலுறவு வேட்கையின் மைய இடங்களாக முலைகளும் பிருஷ்டமும் தொடைகளும் இருப்பதை மிக இயல்பாக நாவலின் பாலுறவுச் சித்தரிப்புகள் தெரிவிக்கிறது

நிறைய சாவுகள் அடுத்த நாள் காலையில் சூரிய வெளிச்சத்தை எதிர் கொள்ளும் நிச்சயத்துடனும் இயல்புடனும் திடுக்கிடலுடனும் நிகழ்கிறது. தொழிற்சங்கவாதி எஸ்.டபிள்யூவும் மாமா ஞானமும் தூக்கத்திலேயே மரணமுறுகிறார்கள். சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்படும் மலையகத் தமிழ்ப் பெண்ணொருத்தி பிரவசத்தில் குழந்தையைப் பெற்றுவிட்டு இறக்கிறாள். தப்பிப் பிழைக்கும் குழந்தை வாளால் வெட்டுப் பட்டுச் சாகிறது. லலி பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகி மரணமுறுகிறாள். ராஜனின் தாயின் மரணம் நிகழும் அதே தினத்தில் சிங்களத் தனிச்சட்டம் கொண்டுவரப்படுகிறது. தமிழ் மொழியும் தனது தாயும் ஒன்றாகக் கொல்லப்பட்டதாக அரற்றுகிறான் ராஜன்.. விஜயின் கண்ணெதிரில் பத்மா மரணமடைகிறாள். சகாதேவனின் முன்னால் முஸ்லீம் சிறுவன் சுல்தான் சுட்டுக் கொல்லப்படுகிறான். சிங்கள இடதுசாரி ஸேனா ஹர்த்தால் ஊர்வலத்தில் சுட்டுக் கொல்லப்படுகிறான். சகாதேவனின் சகோதரன் போராட்டச்சூழலில் மறக்கப்பட்ட மரணமாகிப் போகிறான். நாவல் முழுக்க சாவின் வாடை நமக்கு துக்கத்தை நெஞ்சில் ஏற்றியபடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நாவலின் போக்கில் இரண்டு சம்பவங்களில் பாவிக்கப்படும் மொழிநடை சிவானந்தனின் உளவியல் சார்ந்த மொழிப்பிரயோகத்திற்குச் சான்றாகிறது.

பிரேமா எனும் வயோதிகத் தாயை இருளில் பார்க்கையில்- சில நாட்களில் அவள் மரணமடைந்துவிடுகிறாள்- அந்த அன்பு முகம் ஏற்படுத்தும் விகாரமும் அழகும் பிரமிப்புடன் விவரிக்கப்படுகிறது :

"சகாதேவன் அவளது வார்த்தைகளைப் பிடிக்க அவளை நோக்கித் திரும்பினான். அப்போதுதான் மேகத்திலிருந்து எழுந்த நிலவு வெளிச்சம் அவன் மீது விழுந்தது. குட்டையான கொழுத்த அவளது முகம் எவ்வளவு விகாரமாகத் தோன்றியது என்பதை சகாதேவன் காணத் தவறவில்லை. வடிவற்றுக் கொழுத்திருந்தது அவளது உடல். அப்போதுதான் அவன் உணர்ந்தான். அவள் புன்னகை, அதுதான் அவளது அத்தனை வித்தியாசங்களுக்கும் காரணம். அவள் புன்னகைதான் அவளது முகத்தை மாற்றுகிறது அந்தக் கணத்தில் அதனை அழகாக்குகிறது. அவளது உப்பிய முகத்தையும் ஆறுதல் தரக்கூடியதாக மாற்றுகிறது."

மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தப்பிவரும் வழியில் ஒரு லொறி டிரைவரின் உதவியைப்பெற்ற வேளை அவனால் அவள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகிறாள். உயிர்வாழ்தலுக்கும் தவிர்க்க இயலாமைக்கும் இடையிலான ரணத்தை அவள் ஏற்று நிற்கிறாள். விஜயின் மனைவி மானலின் இனவாதச் சொற்கள் இனி விஜய் அவளுடன் வாழமுடியாது எனும் நிலையை உருவாக்குகிறது. முன்னொரு பொழுது மீனா விஜய் இடையில் கனன்ற காதல் இப்போது மறுபடி கனிகிறது. இச்சூழலில் விஜயைப் பார்த்து மீனா சொல்கிறாள் : யாழ்ப்பாணத்தில் நடேசனின் வீட்டின் பின்புறம் செடிகொடிகளின் மறைவில் மீனா விஜய் இடையில் நடக்கும் மிக அந்தரங்கமான உக்கிரமான உரையாடல் அது :

"ஆகவேதான் நான் உன்னை மானலிடம் அனுப்பினேன். எனக்கு விருப்பமில்லை. அந்தக் கடவுளுக்குத் தெரியும் நான் கொஞ்சமும் அதை விரும்பவில்லை. எனக்கு நீ வேண்டும். எப்போதை விடவும் இப்போது நீ எனக்கு வேண்டும். எனக்கு எங்கே வலிக்கிறதோ அந்த இடத்தில் என்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட எனக்கு நீ வேண்டும். எங்கே எனது வலிகளெல்லாம் குவிந்திருக்கிறதோ..எனது கடந்த காலங்களின் வலிகள் அனைத்தும்.. ஒரு மலையகக்கூலிக்காரப் ஒரு பெண்ணாக ஒரு.. அந்த இடத்தில் என்னைத் தொட நீ வேண்டும். அந்த இடத்தில் என்னை முத்தமிட நீ வேண்டும்.. முன்னொருபோது நீ செய்தது போல...நீ மட்டுமே என்னைச் சுகப்படுத்தமுடியும்.."

மனித உறவுகளில் கருத்தியலும் வரலாறும் நம்பிக்கைகளும் ஆண் பெண் உறவை எவ்வாறு குலைக்க வல்லன என்பதை நாவலின் ஒரு சம்பவம் திகிலுடன் விவரிக்கிறது:

சிங்களத் தனிச்சட்டம் நிறைவேறிவிட்டது. ராஜனின் தாய் இறந்துவிட்டாள். இனக் கொலைத் தாக்குதலில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். தனது மனைவி லலியுடன் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் ராஜன் சம்பவங்களின் இறுக்கத்தினால் லலியின் மீது தீராத வெறுப்புக் கொள்கிறான். அவளது இயல்பான அன்பு கனிந்த நடவடிக்கைகள் அனைத்தையும் பாசாங்காகவும் வேஷமாகவும் கருதுகிறான். அவள் நெற்றியில் வைத்துக் கொள்ளும் குங்குமமும் உயிர் தப்பி வரும் அகதித் தமிழர்களுக்கு அவள் செய்யும் பணிகளும் அதீதமான நடவடிக்கையாக அவனுக்குத் தோன்றுகிறது. தமிழர்கள் மீது அன்பு கொண்டவளாய் காண்பிக்க அவள் போடும் வேஷமாகப் படுகிறது அவனுக்கு.. ரயிலில் வீடு திரும்பும்போது லலியின் நெற்றிக் குங்குமத்தைக் கோபத்துடன் குழப்பத்துடன் அழிக்கிறான் ராஜன். குங்குமம் அடையாளமாக அவள் கொல்லப்படக்கூடும் என்கிறதால் அழித்தானா வெறுப்பின் உச்சத்தில் அழித்தானா என்கிற சந்தேகத்தில் உழல்கிறான். தொடர்ந்து வரும் நாட்களில் லலியுடன் பேசுவதை அவள் அருகாமையை அவன் வெறுக்கிறான். தான் யாழ்ப்பாணம் போவதாகத் திட்டமிட்டிருப்பதாகச் சொல்கிறான். வெளியில் சென்றுவிட்டுவரும் அவள் தனது கணவன் யாழ்ப்பாணம் போய்விட்டதாகவும் இடையில் தகர்க்கப்பட்ட ரயிலில் அவனும் தாக்கப்பட்டிருக்கலாம் எனக்கருதி அவள் சிநேகிதியிடம் அழுது அரற்றுகிறாள். ஜுரத்திலிருந்தபடி அறையிலிருந்து வெளியேறும் தனது கணவனைக் கண்டதும் குரலெடுத்தக் கதறுகிறாள் அன்பே உருவான லலி. ராஜனின் குற்றமனம் தொடர்ந்துவரும் நாட்களில் கரையுடைந்த அன்பாகப் பிரவகிக்கிறது. அடுத்த வரும் சில நாட்களில் தமிழ்ப் பெண்ணெனக் கருதி லலி சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்துக்காளாகிக் கொல்லப்படுகிறாள்.

நாவலின் விவரண வடிவம் குறித்தும் இதனது பல்லடுக்கு அர்த்தம் குறித்தும் மனித உறவுகள் சித்தரிக்கப்பட்ட விதம் குறித்தும் நிறைய விமர்சகர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த நாவல் அன்பு குறித்ததாகும் என்கிறார் ஜான் பெர்ஜர். இந்த நாவல் இரண்டு பகுதிகள் கொண்டதாக ஆரம்பத்தில் சுவீகரிக்கப்பட்டு மூன்றாம் பாகமாக நீடிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கிறார் ரெஜி சிறிவர்த்தன.இந்த நாவலின் மூன்றாம் பகுதி 1958க்குப் பின்னான சமகாலப்பகுதி நாவலின் பலவீனமான பகுதி என்கிறார் ஏ.ஜே.கனகரத்னா (றெஜி சிறிவர்த்தன மற்றும் கனகரத்னா அபிப்பிராயங்கள் : தேர்ட் ஐ : யாழ்ப்பாண பல்கலைக் கழகம் : 1999). காரணமாக 1958க்குப் பின்னான காலகட்டம் பற்றிய வாழ்ந்து பெற்ற அனுபவம் சிவானந்தனுக்கு இல்லாமல் போனதாக இருக்கலாம் என்கிறார் அவர். இக்காரணங்களால் முதல் இரண்டு பாகங்களில் பாத்திரப்படைப்புக்கள் வரலாற்றுச் சம்பவங்கள் பெறும் ஆதாரமான உயிர்ப்பான நிலையை மூன்றாம் பாகம் பெறவில்லை என்கிறார். ரவி விஜயைச் சுட்டுக் கொல்வது போன்ற நாவலின் இறுதிச் சம்பவம் போன்றன இதனால் நாடகத் தன்மையைப் பெறுகின்றன என்கிறார் கனகரத்னா.

இந்த மூன்று பகுதிகளில் இரண்டாம் பகுதியின் அவதானிப்பிலும் விவரணத்திலும் சிவானந்தனின் வாழ்ந்து பெற்ற அனுபவங்களை நாம் நிறையப் பார்க்க முடியும். சிவானந்தன் 1958 கலவரத்தைத் தொடர்ந்து ராஜன் போலவே இங்கிலாந்தில் குடியேறிவிடுகிறார். ராஜனின் இருப்பு என்பது மூன்றாம் பாகத்தைப் பொறுத்து அவர் தனது மகன் விஜய்க்கு எழுதும் சில கடிதங்கள் மூலமே நிகழ்கிறது. முதல் பாகத்திலும் தனது தந்தை சகாதேவன் பற்றிய ராஜனின் நினைவுகளும் பல்வேறு உறவினர்கள் நண்பர்கள் மூலம் திரட்டிக் கொண்ட மீள் நினைவுகளாகவே அமைகிறது. இக்காரணத்தினாலேயே நாவலின் இரண்டாம் பாகமான ராஜனின் கதை என்பது வரலாறும் வாழ்ந்து பெற்ற அனுபவமும் புனைவும் கொண்டதாக மிகுந்த ஆதாரத் தன்மை கொண்டதாக அமைகிறது. இக்காரணத்தினாலேயே இந்நாவலின் இரண்டாம் பாகம் மிகுந்த ஆழம் வாய்ந்ததாக அமைகிறது எனக் கொள்ளலாம் என்று இலக்கிய விமர்சகர் திமோதி பிரன்னன் அவதானிக்கிறார் (போஸ்ட் இகனோகிளாஸம் : திமோதி பிரனனன் : டைம்ஸ் லிடரரி ஸப்ளிமென்ட் : 14.02.1997). மீள் நினைவுகளான முதல் பாகத்திற்கும் சமகால தேசிய யுத்தம் தொடர்பான மூன்றாம் பாகத்திற்கும் அவர் வரலாற்றையும் வரலாற்றுச் சான்றுகளையும் சம்பவங்களையும் நண்பர்களையுமே சார்ந்திருக்கிறார். சிவானந்தன் ஆசிரியராக இருந்து வெளியிடும் இனம் மற்றும் வர்க்கம் காலாண்டிதழ் இலங்கைப் பிரச்சினை பற்றிய மிகுந்த முக்கியத்துவம் கொண்ட ஒரு ஆய்வுச் சிறப்பிதழை வெளியிட்டதை இங்கு ஞாபகம் கொள்வது சிறந்தது. சண்முகதாசன், குமாரி ஜெயவர்த்தன போன்றவர்களின் மிக முக்கியமான இலங்கைப் பிரச்சினை பற்றிய ஆக்கங்கள் அதில் வெளியாகின. ஆக முதல் மூன்றாம் பாகங்களுக்கு வரலாற்றுச் சான்றுகளும் உறவினர்களதும் சக இலங்கை நண்பர்களுடையதும் வாழ்ந்துபட்ட அனுபவங்களே ஆதாரமாக அமைகின்றன. இன்னும் நாவல் மூன்றாம் பாகத்தில் கவனம் கொள்ளும் என்பதுகள் தொடக்கம் தொண்ணூறுகளின் ஆரம்பம் வரையிலுமான காலத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் இயங்க நேர்ந்த கலைஞர்களும் மனித உரிமையாளர்களும் அரசின் ஆயுதப்படைகளாலும் கொலைக்கழுகுகளாலும் இயக்கங்களாலும் பெற்ற உயிர்வாழ்தல் தொடர்பான அச்சுறுத்தல் அனுபவங்களையும் இங்கு ஞாபகம் கொள்வது நல்லது. இதன் முதல் மூன்றாம் பாகங்களில் கூட பாத்திரங்களின் உளவியல் சித்தரிப்பிலும் தீவின் இயற்கைசார் சித்திரிப்பிலும் ஒருவர் பூரணத் தன்மையைக் காணத் தவறலாமேயொழிய நாவலின் வரலாற்றுத் தொடர்ச்சியிலும் நாவல் எடுத்துக் கொள்ளும் பிரச்சினையிலும் வரலாறு சார்ந்த தர்க்கத் தொடர்ச்சியிலும் ஆழமின்மையைக் காணமுடியாது

நாவலின் கட்டமைப்பும் மொழி நடையும் விவரண முறையும் குறித்துச் சில அவதானங்கள் : நாவலின் மொழி நடை மிக மிக நிதானமானது. சிவானந்தன் சம்பவங்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரப்படுவதில்லை. உச்சபட்சமான உணர்ச்சிகரமான நடை இல்லை. நிறைய விவரணங்கள் இடம் பெறுகிறது. இயற்கை சார்ந்த தாவரங்கள் மரங்கள் தெருக்கள் ஒழுங்கைகள் புவிப்பரப்பு சார்ந்த விவரணங்கள் இடம் பெறுகிறது. கதை முழு இலங்கையின் புவிப்பரப்பையும் இனக்குழுமங்களையும் தனக்குள் எடுத்துக் கொள்கிறது. இயற்கையின் அழகும் அதன் அழிவும் மனிதனது அழகுடனும் அதனது அழிவுடனும் இணைந்து சித்தரிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் நுவரெலியா கொழும்பு அனுராதபுரம் ஹட்டன் என கலவரங்களின் தோற்றமிடமாகவும் அழிவுகளின் மையமாகவும் இருந்த நகரங்கள் கிராமங்கள் லயன்கள் குடியிருப்புகள் நாவல் முழுக்க விரவிக்கிடக்கிறது. வாழ்ந்து பெற்ற அனுபவம் என்கிற பிரச்சனை நாவலின் ஆதாரத் தன்மையையோ நாவலின் முழுமையையோ கட்டமைப்பையோ பாதிக்கவில்லை என்பதுவே நிஜம்.

நாவலின் முழுமை என்பது இரண்டு வகையில் அமைகிறது. 1. காலனியக்காலகட்டம்- சோசலிசக்கனவுகள்- இனவாதத் தேசியத்தின் வளர்ச்சி- தமிழ் இலட்சியவாதம் எவ்வாறாக சிங்கள தேசியவாதத்தின் திசைவழியிலேயே பிறழ்ந்த பிரக்ஞையாக பரிமாணம் பெறுகிறது எனும் தொடர்ந்த சிந்தனை- ஜான் பெர்ஜர் இந்நாவலை வியட்நாம் குறித்த பாவோ நின்னின் நாவல், ஜெர்மன் பாசிசம் குறித்த ஆன் மச்சேலின் நூல், ஸ்பானிய பாஸ்க் தேசியவாத அனுபவங்களைச் சொல்லும் பெர்னார்டோ அக்சாகாவின் நாவல் போன்றவற்றுடன் வைத்துப் பேசுவதை இங்கு நாம் கவனம் கொள்ள வேண்டும்.( பேக் டு த பியூச்சர் : ஜான் பெர்ஜர் : தி கார்டியன் : 13.02.1997)

நாவலின் சித்தாந்த முழுமை என்பது காலனியத்தின் தாக்கம் சோசலிசத்தின் வீழ்ச்சி தேசியத்தின் சமகால நெருக்கடி போன்ற அனைத்தும் தழுவியதாக அமைகிறது. அரசியல் மொழியில் ஜெர்மன் பாசிசம் -ரஷ்ய சோசலிசம்- கியூபப் புரட்சி- யுகாஸ்லாவியப் பிரிவினை- ருவாண்டா உள் இனக் கொலைகள் போன்ற முழு வரலாற்று அனுபவங்கள் சார்ந்ததாக அமைகிறது.

2. பாத்திரப்படைப்புக்களின் முழுமை என்பது சிங்களவரும் தமிழரும் அடையாளம் தனித்துக் கொண்டிருந்த போதும் சரி பரஸ்பரம் சிங்களவர் தமிழர் அடையாளம் மறுத்த வெறுத்த நிலையிலும் சரி அன்பு செய்தல் என்பதுவே மனிதரின் விதியாக இருக்கிறது. நிகழ்காலம் சாஸ்வதமில்லை. வரலாற்றின் அனர்த்தம் விளைவித்தது நிகழ்காலம். கடந்த காலத்தில் அதன் நினைவுகளில் அன்பும் தோழமையும் காதலும் நிலவியது. நாடுகள் பிரியலாம் எல்லைகள் வரையறுக்கப்படலாம். ஒரு நிலப்பரப்பில் மறுபடியும் எதிர்காலத்திலும் இறுகிய கட்டமைக்கப்பட்ட அடையாளங்களை விட்டு மீறிய விலகிய உறவும் அன்பும் தோன்றும் வளரும். இதுவே மனிதனுக்கு விதிக்கப்பட்டது. விஜயின் பாத்திரம் அடையும் பதில்கள் நாவலின் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட கேள்விகள்.- சகாதேவனும் திஸ்ஸாவும் - ராஜனும் லாலும் - ராஜனும் லலியும்- திஸ்ஸாவும் முஸ்லீம் பெண் ஸோனுவும்-விஜயும் மானலும்-கேட்டுக் கொண்ட கேள்விகள் அடைந்த பதில்கள்- இந்த கேள்விகளையும் பதில்களையும் தான் இறுதி வரை விஜயும் மீனாவும் நினைவுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்..இன்னும் அனர்த்தமான கொலைகளுக்கும் அதனது அபத்த நாடகத் தன்மைக்கும் வரலாறு சான்றாதாரமாக நிற்கிறது.

ஸல்மான் ருஸ்டியின் மிட் நைட் சில்ரனுக்குப் பின்னான நாவல்கள் அனைத்தும் குறித்து- வாழ்ந்து பெற்ற அனுபவம் எனும் அடிப்படையில்-இந்திய ஆதாரத் தன்மை குறித்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆயினும் அவரது இந்திய வாழ்வு குறித்த -மூர்ஸ் லாஸ்ட் சை நாவல் உள்பட-நாவல்கள் அனைத்தினதும் ஆதாரமாக- இந்து பாஸிஸம் பம்பாய் முஸ்லீம் மக்கள் கொலைகள் பால்தாக்கிரே என- வரலாற்றுச் சம்பவங்கள் இருக்கிறது. இன்னும் தகவல் தொழில்நுட்பம் மனிதர்களின் இடப் பெயர்வு போன்றவை மிக வேகமாக விரைந்து கொண்டிருக்கும் சூழலில் கால இடைவெளியும் தூரமும் குறிப்பிட்ட புவிப் பரப்பின் அரசியல் மற்றும் வாழ்வு குறித்த நாவல்களின் குணச்சித்திரங்களின் சித்தரிப்பில் தீர்மானகரமாக பாத்திரம் வகிக்கும் என்றும் தோன்றவில்லை. இன்னும் நாவலின் வடிவம் விவரணம் மற்றும் அழகியல் சார்ந்த பிரச்சினைகள் கூட அரசியல் பரிமாணம் கொண்டவைதான் என்பதிலும் சந்தேகமில்லை.

கற்பிதம் செய்யப்பட்ட தேசியங்கள். நினைவுகள் மறந்த பிறழ்ந்த கட்டமைக்கப்பட்ட வரலாறுகளாகிறது. கற்பிதம் செய்யப்பட்ட தேசியம் கருத்தியலாகிறபோது பதற்றத்துடன் தன்னைக் காத்துக் கொள்ள அது பயங்கரமாக வடிவம் கொள்கிறது. காலனியாதிக்க எதிர்ப்பும் தேசியப் பிரக்ஞையும் கலாச்சார எழுச்சியும் கருதிய சிங்கள தேசியம் இன்று இனவாத தேசியமாகி சிறுபான்மை தமிழ் இனத்துக்கெதிரான இனக் கொலையாகப் பரிமாணம் பெற்றிருக்கிறது. (ஸர்மினி பாட்ரிஸியா கேப்ரியல் : தி சேட் ஸ்டோரி ஆப் சிறி லங்கா நியூ செயின்ட்ஸ் டைம்ஸ் : 22.04.1998) சிங்கள தேசியம் சென்று இன்று உறைநிலை அடைந்திருக்கிற பாதையில்தான் தமிழ் தேசியமும் தன்னைக் கருத்தியலாகக் கட்டமைத்துக் கொண்டிருக்கிறது.. பெனடிக் ஆன்டர்ஸன் அவதானத்தின் படியும் சமகால சர்வதேசிய அனுபவங்களின் படியும் அனர்த்தங்கள் தொடர்கிறது.

நாவலை ஆப்ரோ, அமெரிக்க எழுத்தாளர் ஜேம்ஸ் பால்டுவினது நாவலுடன் சேர்த்துப் பேசுகிறார் இங்கிலாந்து இலக்கிய விமர்சகரான மெலிஸா பென் (தி இன்டிபென்டன்ட் : ஐலான்ட் இன் த ஸ்ட்ரீம் ஆப் ஹிஸ்டரி: 11.01.1997) இதே போல ஆபிரிக்க எழுத்தாளரான செம்பேன் உஸ்மானுடன் இணைத்துப் பேசுகிறார் இலக்கிய விமர்சகர் திமோதி பிரன்னன் (போஸ்ட் இகனோகிளாஸம் : திமோதி பிரனனன் : டைம்ஸ் லிடரரி ஸப்ளிமென்ட் : 14.02.1997). ஜேம்ஸ் பால்ட்வின் சிவானந்தன் போலவே தீவிரமான அரசியல் நிலைபாடுகள் கொண்டவர். இலக்கியவாதியாகவும் வென்றவர். தீவிரமான அரசியல் நிலைபாடுகள் கொண்ட படைப்பாளர்கள் ஒரு விபத்தில் சிக்கிக் கொள்ள நேர்வதுண்டு : செஸ் பலகையின் காய்களைப் போல தமது பாத்திரங்களை தமது அரசியல் நிலைபாடுகளுக்காக நகர்த்துவார்கள் என்பது தான் அந்த ஆபத்து. ஆனால் அரசியல் நிலைபாடுகளும் நம்பிக்கைகளும் மானுட உணர்ச்சி நிலைகளிலிருந்தும் அறிதலிலிருந்தும் பிரிக்கமுடியாதவை. ஒரே சமயத்தில் அரசியலின் உள்ளே இருப்பதும் மானுடர்களைச் சித்தரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அதிலிருந்து வெளியேறுவதுமான சிருஷ்டி வித்தையில் சிவானந்தனும் பால்வினும் வெற்றி பெறுகிறார்கள். செம்பேன் உஸ்மானின் திரைப்படங்களும் சரி அவரது திரைப்படங்களுக்கு ஆதாரமான அவரது நாவல்களும் சரி பின்காலனிய நாவல்கள் என்கிற நினைவுகூரல்களுக்குள் அமையாது. அவரது கதை மாந்தரும் பிரச்சினைகளும் முழுக்க ஆப்பிரிக்கத் தன்மையும் இடையறாத ஆப்பிரிக்க வரலாற்றுத் தொடர்ச்சியும் கொண்டவர்கள் (செம்பேன் உஸ்மான் : ஆபிரிக்க சினிமா: யமுனா ராஜேந்திரன் : தாமரைச் செல்வி பதிப்பகம்: இந்தியா) இதைப் போலவே சிவானந்தனின் நாவல்களை பிரிட்டிஸ் ராஜ் நாவல்கள் அல்லது பின் காலனித்தவ நாவல்கள் என்ற வகையினத்துள் அடைக்க முடியாது. ஏனெனில் சிவானந்தனின் கதை மாந்தர்களும் சரி அவரது கதையின் வரலாற்றுப் பின்புலமும்சரி முழுக்கவும் இலங்கை மக்களின் வரலாற்றுத் தொடர்ச்சியும் மானுடத் தொடர்ச்சியும் பண்பாட்டுத் தொடர்ச்சியும் கொண்டவையாகும். இவ்வகையில் சிவானந்தனின் நாவல் அரசியலும் அழகியலும் சிருஷ்டித் தன்மையும் முன்றாம் உலகப் படைப்பாளியின் பிரக்ஞையும் ஒருங்கே அமையப் பெற்ற படைப்பாகிறது

நாவலைப் படித்து முடிக்கிறபோது மனதெங்கும் விரவியிருக்கிறபடி நான்கு பாத்திரங்கள் உலவுகின்றன. இவர்கள் சமரசம் செய்து கொள்ளாத இலட்சியவாதிகள். நேசிக்க மட்டுமே தெரிந்தவர்கள். சிந்திக்கத் தெரிந்தவர்கள். அதிகாரவர்க்க சோசலிஸ்ட்டுகள் பற்றி விமர்சனத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் நடமாடும் சிங்கள மருத்துவரான லால். அன்பும் காதலும் அடுத்தவர் நலன் நாடும் மாண்பும் கொண்ட பெண்ணாகிய- ராஜனின் மனைவியும் லாலின் சகோதரியும் விஜயின் தாயுமாகிய- மரணமுற்ற லலி. லலியை தனது வாழ்வின் மையமாகவும் ஆதாரமானதாகவும் காதலாகவும் கொண்டுவாழ்ந்து அவளது மரணத்தின் பின் இங்கிலாந்து சென்றுவிடும் ராஜன். இன அடையாளம் அற்றவனாகி மானுட அடையாளம் மட்டுமே நிறைந்தவனாகி அதே மானுட அன்புக்காக தனது சமீபத்திய நண்பனான யோகாவைக் காப்பாற்றப் போய் கொலையுறும் விஜய். நான்கு பேருமே சமரசமற்ற நேசிக்கத் தெரிந்த சிந்திக்கத் தெரிந்த இலட்சியவாதிகள். இலட்சியவாதமும் அன்பும் சேரும் போதுதான் புதிய மானுடம் பிறக்கிறது. இந்த நாவலிலும் ஒன்டாஜியின் நாவலைப் போலவே ஆவிகள் வருகிறது. விஜய் அவைகளை ஒரு சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கிறான். ஒன்று அன்று உலகை ஆட்டிப் படைத்த கம்யூனிஸ பூதமாகிய ஆவி. இன்று அவனது அன்னை லலியின் ஆவி. இந்த ஆவிகள் நாவலின் ஆன்மாவாக எங்கெங்கும் அலைந்து திரிகிறது.

நாவலின் இறுதியில் ரவி விஜயைச் சுட்டுக் கொன்ற பின்னால் மீனா எதிர்ப்புக்குரல் எழுப்பும் போது அவளையும் சுட எத்தனிக்கும் ரவியின் துப்பாக்கியைத் தட்டிவிடும் யோகி "நான் பொறுப்பெடுத்துக் கொண்டுவிட்டேன்" என்கிறான். நாவல் முடிகிறது. நாவல் போதனைகள் செய்யவில்லை. எதிர்காலம் குறித்த தீர்ப்புக்கள் எதையும் முன்வைக்கவில்லை. யோகி பொறுப்பெடுத்தக் கொண்டது அவநம்பிக்கையின் குரலா அல்லது நம்பிக்கையின் அறைகூவலா என்பது பதில் காணமுடியாத கேள்வியாக நிற்கிறது. ○

## அலைகளற்ற உனது கடலும் மோதித் தெறிக்கும் எனது அலைகளும்

அலைகளற்றிருக்கும் உனது கடல்

காடும் நதியும் இல்லாத
அகன்ற வெறும் இரவில்
அலைகளால் வதைபடுகிறேன் நான்

ஆயிரம் யுகங்களையும்
தாண்டிவிரியும் நம் காதலை
பிரளயத்தின் தத்தளிப்பில்
கடாசி வீசிவிட்டிருக்கிறது காலம்.

யுகமலையின் முகடுகளில்
மோதித்தெறித்த நம் பாடலை
ஏதேதோ பறவைகளெல்லாம்
தம் மொழியாக்கியதை
எம்மையன்றி யார் அறியக்கூடும்.

நீ போய்விட்டாய்
மலைகள் எரிந்து சாம்பலாகிய
அதிசயம் கண்டு
கண்டவர்கள் மலைத்தார்கள்.
உருகியுறைந்த பனியில்
நான் விறைத்துக்கிடந்தேன்.

என் மிகப்பெரிய சுவாசவீச்சு
வானில் படர்ந்து கரைந்ததாய்
எல்லோரும் புலம்பினார்கள்.
என் அலைகள் சூனியவேரில்
பிணையுண்டு அழிந்து போனதாய்
எல்லோரும் அழுதார்கள்.

அலைகளற்று இருக்கிறதா
உனது கடல்?

இரவுப்பட்சி விழித்துப்பாடும் கணங்களில்
தகர்ந்து பொடியாயினவா உனது மவுனம்

குரல் எழுப்பி அழுதுவிடாதே
உனது குரலின் தீப்பற்றி
எரிந்து சாம்பலாகக்கூடும் பிரபஞ்சம்.

சித்தாந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறகு



நீரைக் கொதிக்க வைத்தேன்
ரொட்டியை வெட்டினேன்.
அமைதியிழந்து
எனது சிறிய வானொலியின்
பட்டனை அழுத்துகிறேன்.

"கரிபியன் நெருக்கடி........ வெளுத்து
வாங்குகிறது......... இன்னும் வெளுத்து......
வெளுத்து
படையணிகள் புறப்படத் தயாராகின்றன.
ஆம் அவ்வாறே நிகழட்டும். சபாஸ்.......
திரட்டப்பட்ட இரும்பு உலோகங்கள்
மீண்டும் சம நிலைக்கு........."
நான் கோடாரியைத் தூக்கவில்லை
துண்டு துண்டாக நொருக்கவில்லை
பீதியான குரல் என்னை அமைதிப்படுத்துகிறது:
நாங்கள் இன்னும் உயிருடன் இருக்கிறோம்.

வீடு மௌனமாக இருக்கிறது:
எனக்குத் தெரியாது:
எப்படி பொறிகள் வைப்பதென்று -
எனக்குத் தெரியாது:
இறுதி முனையும் துருப்பிடிக்கும் பொழுது
நெருப்புப் பொறியிலிருந்து
ஒரு கோடரியைத் தயாரிப்பதென்று -

**- ஹென்ஸ் மக்னூஸ் இன்ஸென்ஸ்பேர்க் -**

விழித்தெழும்பிய பொழுது
வீடு மௌனித் திருந்தது.
பறவைகள் மட்டும் ஒரு இரைச்சலுடன்.
சாளரத்தினூடு பார்க்கிறேன்.
யாருமில்லை இங்கு
தெருக்கள் கடந்து செல்லவில்லை
ஆகாயத்தில் எச்செய்தியும் இல்லை.
பூமியில் எச்செய்தியும் இல்லை.
உயிர்வாழ்வன
அமைதியாகக் கிடக்கின்றன,
அக் கோடரியின் கீழே.



தமிழில்: பொன்.கணேஸ்.



# மத்திய கிழக்கு வேலைவாய்ப்பும், கிழக்கு முஸ்லிம் பெண்களின் சமூகப்பொருளாதார நிலையும்

- றமீஸா எம் சாஹிப் -

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அப்போது ஆளுங்கட்சியாகவிருந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடித்து ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் இலங்கையில் ஆட்சியமைத்தது. இவ்வரசியல் மாற்றம் தேசிய முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் பொருளாதாக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து பல்தேசிய முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கை நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தது. இதே காலகட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. இவ்வதிகரிப்பு பெரும்பாலான மத்திய கிழக்கு நாடுகளில் தனிநபர் வருமானம் உயர்வடைய காரணமாக இருந்தது. இந்நிலமையினால் அந்நாடுகளில் இருந்த ஒவ்வொரு குடும்பத்திலும் வாழக்கைத் தர மேம்பாட்டுக்கான சூழ்நிலை தோன்றியமையால் அதற்கான வசதிகள் தேவைப்பட்டன.

மத்திய கிழக்கிலும் ஏற்பட்ட மாற்றங்களினால் மூன்றாம் உலக நாடான இலங்கையிலிருந்து பெண்கள் 80ம் ஆண்டுகளில் பணிப்பெண்களாக வேலைவாப்புப் பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். இந்நாடுகளில் பெரும்பாலானவை முஸ்லிம் நாடுகளாக இருந்தமையினால் இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்களுக்கு அங்கு கிராக்கி ஏற்பட்டது. இதனால் இலங்கையிலிருந்து பெருமளவான முஸ்லிம் பெண்கள் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். மற்றும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளிலிருந்தும் கணிசமான பணிப்பெண்கள் அங்கு வேலைதேடிச் சென்றனர்.

உற்பத்திப் பொருளாதாரத் துறையின் வீழ்ச்சி காரணமாக 80களில் கிழக்கிலங்கையினுடைய சமூகப் பொருளாதாரம் மிக மோசமான கீழ்நிலைக்குப் போய்க்கொண்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதே காலத்தின் நடுப்பகுதிகளிலிருந்து கிழக்கு மாகாணத்தில் நிலவிய தமிழ் முஸ்லிம் இனமுறுகல் நிலையும், நெருக்கடியும் கிழக்கிலங்கையின் பொருளாதாரத்தில் இன்னும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. இவ்வினமுரண்பாடுகள் 90களின் ஆரம்பத்தில் உச்ச நிலையை அடைந்தது. இக்காலகட்டத்திலிருந்து தமிழர்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம்கள் தமிழர்களையும் தத்தமது தேசிய இனத்துவ வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக எண்ணிக்கொண்டு பரஸ்பரம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கினர். இதன் காரணமாக தமிழர்களின் வாழ்நிலப் புலமாக இருந்த பகுதிக்குள் அமைந்திருந்த முஸ்லிம்களின் விவசாய நிலங்களை செய்கைபண்ணமுடியாத நிலை தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. இதனால் ஏற்கனவே உற்பத்திப் பொருளாதார முறைமைகளில் சிக்கித் திணறிக் கொண்டிருந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம் ஆகக் கீழ்மட்டப் பாய்ச்சலைச் சென்றடைந்தது. இப் பாரிய பொருளாதாரக் கீழிறக்கம் மத்தியதர வர்க்க, கீழ் மட்ட விவசாயக் கூலிகள் என்கின்ற வாழ்நிலை மட்டத்தைக் கொண்ட கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே பாரிய சமூகமாற்றத்தை ஏற்படுத்தியது. இம்மாற்றத்தில் முக்கியமானது, கட்டுண்டு கிடந்த கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் பொருளாதார நிமித்தமாக பணிப்பெண்களாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலை பெற்றுச்சென்ற நிகழ்வாகும். இன்று இத்தொழிலில் கிழக்கில் சுமார் 20,000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர். மேற்சொன்ன வாழ்க்கை மட்டத்தைச் சேர்ந்த வயதுவந்த பெண்கள் தொகையில் கால்வாசிக்கும் மேற்பட்டோர் மத்திய கிழக்கிற்கு போவதும் வருவதுமான ஒரு சுற்றுவட்டத்தில் சம்பந்தப் பட்டுள்ளனர்.

## சமூக நிலை

ஆணாதிக்கத் தன்மையையும், பொருளாதார அந்தஸ்தினையும் அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்பு பொதுவாகவே பெண்களுக்கு அடிமட்ட அல்லது ஆண்களுக்கு அடுத்த கட்ட தரத்தினையே வழங்கியுள்ளது. இந்த வகையில் சிங்கள, தமிழ் பெண்களின் நிலையைக் காட்டிலும் முஸ்லிம் பெண்களின் நிலை பொதுவாக மோசமானதாகவே காணப்படுகின்றது. அரசதுறையில் அல்லது தனியார் துறையில் வேலைபார்த்துச் சம்பாதிக்கும் பெண்களின் நிலைகூட ஆணின் சமூக அந்தஸ்தை எந்த வகையிலும் எட்ட முடியாததாகவே காணப்படுகின்றது. நமது சூழலில் நாடுவிட்டு நாடுசென்று வருடக்கணக்கில் வேலைசெய்துவிட்டு வருகின்ற பெண்கள் பற்றிய சமூகப் பார்வையில் ஆணோடு சமத்துவமின்மை பளிச்சிடுவது மட்டுமன்றி பணிப்பெண்ணாக வெளிநாடு செல்லாத பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோதும் கூட இப்பெண்கள் தரம் தாழ்ந்தவர்களாகவே கணிக்கப்படுகின்றார்கள்.

கிழக்கிலங்கையிலிருந்து பெரும்பாலும் கல்வித்தராதாரம் இல்லாத அல்லது இடைநடுவில் கல்வியைக் கைவிட்ட பெண்களே மத்திய கிழக்கிற்கு வேலைவாய்ப்புக்காகச் செல்கின்றனர். சில பெண்கள் வெளிநாடு செல்வதற்காகவே கல்வியை இடைநிறுத்துகின்றனர். பணிப்பெண்களாகச் செல்பவர்களில் திருமணமானவர்களும் உள்ளனர். இளம் பெண்களும் உள்ளனர். காலப்போக்கில் இப்பெண்களின் குடும்ப நிறுவன ஒழுங்குகள் பிசகிப்போவதுதான் மிகவும் துரதிஸ்டவசமானதாகும். திருமணம் செய்யாத பெண்கள் பெரும்பாலும் தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்வதையும், திருமணத்துக்கான பணத்தை சேர்த்துக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுதான் வெளிநாடுகளுக்கு வேலைபார்க்கச் செல்கிறார்கள். அவர்கள் திரும்பி வருகிறபோது கண்ணீரால் கட்டப்பட்ட ஒரு சிறிய வீடும், வியர்வையால் சேர்த்த கொஞ்ச பணமும் கிடைக்கிறபோதும் வெளிநாடு செல்வதற்கு முன்பிருந்த அவர்களுக்கான சமூக அந்தஸ்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை அவர்கள் கண்டு கொள்கிறார்கள். இதனால் இவர்களது திருமணம் சிக்கலானதாகவோ, தடையுள்ளதாகவோ இருப்பதோடு மட்டுமல்லாமல் திருமணத்தின் பின்பும் மணமுறிவுகளின் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது.

பெண் பிள்ளையின் உழைப்பில் சுகம் கண்ட தந்தை மீண்டும் மீண்டும் பல தடவைகள் அவளை வெளிநாடு செல்ல நிர்ப்பந்திப்பதையும் காணலாம். இதனால் அப்பிள்ளைகள் மனச்சஞ்சலமும், உளவியல் தாக்கமும் அடைகின்றனர். திருமணத்திற்குப் பின்பும் கணவனாலும் வெளிநாடுகளுக்கு விரட்டப் படுகின்ற பெண்கள் பெருகி வருகிறார்கள். இதுமட்டுமன்றி திருமணம் முடித்த தன்பிள்ளையை தகப்பன் கணவனிடமிருந்து பலாத்காரமாகப் பிரித்து மீண்டும் மத்திய கிழக்கிற்கு அனுப்பி பணம் உழைக்கும் அவலமும் சில இடங்களில் நடந்தேறுகிறது. பாசப் பிணைப்பை வெறித்தனமாக வெட்டிவிடுகிற பணம் மீதான தேவையின் அல்லது ஆசையின் காரணமாக நிகழ்வுகளும் திருமணம் முடிந்து இரண்டு, மூன்று மாதக் கைக்குழந்தைக்குத் தாயாகியிருக்கின்ற பெண்களும் பச்சிளம் குழந்தைகளிடமிருந்து பிரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

பெண் பல வருடங்கள் வெளிநாடுகளில் வேலைபார்த்து உழைத்து அனுப்புகிற பணத்தில் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு வீட்டிலே சோம்பேறித்தனமாக முடங்கிக்கிடக்கிற கணவன், வேறு ஒரு பெண்ணை இரகசியமாகவோ, பரகசியமாகவோ மணமுடிப்பது அல்லது உறவு வைத்திருப்பது சாதாரணமாகி வருகிறது. சில ஆண்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி உழைக்கும் நோக்கத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்வதும் நடக்காமலில்லை. வெளிநாடு சென்ற முதலாவது மனைவியின் உழைப்பு அனைத்தையும் உறிஞ்சி அழித்துவிட்டு அவளை நடத்தை கெட்டவள் என்ற பழிசுமத்தலோடு விவாகரத்துச் செய்துவிட்டு வேறு மணமுடிப்பவர்களும் உண்டு. மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற பெண்கள் பொதுவாகவே நடத்தை கெட்டவர்கள் என்ற ஒரு சமூகப்பார்வையும் மேலோட்டமாகவுள்ளது. இஸ்லாமிய ஷரிஆ சட்டத்தின் படி ஒரே வயிற்குப் பிள்ளைகளான இரு சகோதரிகளை ஒரே ஆண் ஒருவரை விவாகரத்துச் செய்யாமல் மற்றவரை மணமுடிக்க முடியாது. அப்படியிருந்தும் மூத்த சகோதரியை மணமுடித்து வெளிநாடு அனுப்பிய பின்னர் சிலகாலம் சென்று இளைய சகோதரியை மணமுடித்த வரலாறுகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இவ்வாறான நிகழ்வுகளினால் பெண்ணின் மனமும், உடலும் கசங்கி, நொருங்கி சிதைந்து போவதை என்னவென்பது?

வெளிநாடு சென்று வந்த பெண்களில் இங்குள்ள நிலமைகளையும் அங்குள்ள நிலமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து இங்கு வாய்ப்புகளும் வசதிகளும் இல்லையே என்று ஏங்குபவர்களும் உண்டு. அங்குள்ள தொழிற்நுட்ப வளர்ச்சியடைந்த பாவனைப் பொருட்களின் கனவுகளில் கண்களை மறைத்தவர்களாக இங்குள்ள அடுப்பங்கரைச் சாம்பலை இகழ்வதுபோல தமது குடும்பங்களையும் கணவனையும் கணக்கிலெடுக்காமல் விட்டுத் தவறிழைப்பதால் குடும்பம் சின்னாபின்னமான சந்தர்ப்பங்களும் உண்டு.



வருடக் கணக்கில் தாய் வீட்டில்லாததால் பிள்ளைவளர்ப்பு மிகவும் கடினமாகின்றது. பிள்ளைகளின் சீரான வளர்ச்சியின் ஒழுங்கமைப்பு மாறுபடுகிறது. பிள்ளைகளின் கல்வி படுமோசமாகப் பாதிப்படைகிறது. கணவனும் வேலைக்குப் போனால் பிள்ளைகளின் வாழ்வு வீதியோரச் சிறார்களின் வாழ்வு போலாகிறது.

70களில் கிடுகு வேலிகளின் துளைகளூடே உலகின் கிடையான பரிமாணத்தை அளந்து கொண்டும் வீட்டு வளவின் மேலுள்ள வானத்தை மட்டுமே கண்டு கொண்டும் இறுக்கமான கட்டுக் கோப்புக்குள் வளர்ந்திருந்த முஸ்லிம் பெண் 80களில் வானூர்திகளில் ஏறி வானத்தின் எல்லையில்லாப் பிரமாண்டத்தினூடே பயணிக்கத் தொடங்கினாள். முதலில் தந்தை என்ற ஆணுக்கும் அடுத்து மூத்த சகோதரன், பின்பு கணவன் என்ற ஆண்களினது அன்புக்கோ, அதிகாரத்துக்கோ அடிமைப்பட்டு பழக்கப்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் பல ஆயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் புதிய பழக்கவழக்கம், கலாசாரச் சூழலில் முகம் தெரியாத இன்னொரு ஆணுக்கு சேவகம் செய்வதற்கு என்று சிறகு விரித்தாளோ அன்று கிராமியச் சூழலில் இறுக்கமாகப் பற்றியிருந்த கிழங்கிலங்கை பாரம்பரியம் சரியத் தொடங்கிற்று. இந்நிகழ்வு ஒரு வகையில் பெண்ணுக்கான மட்டுப்படுத்தப்பட்ட விடுதலையாகவும் இன்னொருவகையில் சமூகக் கட்டுக்கோப்பில் சீர்குலைவாகவும் பார்க்கப்படுகிறது.

இறுக்கமான இஸ்லாமியச் சட்டத்திட்டங்களும், கலாச்சார விழுமியங்களும், சமூகக் கோட்பாடுகளும், பொருளாதார நிலவரங்களும், சிறுகச் சிறுக சிதைந்தும், தகர்ந்தும் வருவதை ஒத்துக்கொண்டேயாக வேண்டும். இந்நிலமைக்கு முஸ்லிம் பெண்களுக்கான மத்தியகிழக்கு வேலைவாய்ப்பே பெருமளவு வாய்ப்பளித்தது. வெளிநாடு சென்று வந்த பெண் ஏனைய பெண்களை விட சொந்தக் காலில் நிற்கும் உளவியல் தகுதிபெற்றவளாக மிளிருவது நல்ல மாற்றமாகும். தற்பொழுதெல்லாம் மத்திய கிழக்கு பற்றிய கற்பனைக் கெட்டாத பிரமைகள் கட்டவிழ்ந்து வருவதனால் மேற்சொன்ன இடைக்கால சமூகநிலை நேர்த்தியான பாதையில் பயணிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

## பொருளாதார நிலை

பொதுவாகவே கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களின் பொருளாதார நிலை ஆண்களைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. பெண்களைப் பொறுத்த வரை திருமணம் என்பதே ஒருவிதத் தொழில் வாய்ப்புப் போன்றுதான் கணிப்பிடப்படுகின்றது. பயிர்ச்செய்கை நிலத்தையும் கொடுத்து, மூலதனத்தையும் வழங்கி பயிர்ச்செய்கை பண்ணச் சொல்வதைப் போலவே பெண்ணையும், சீதனத்தையும் கொடுத்து வாழச்சொல்லி பெண் அனுப்பப் படுகிறாள். தாய் தந்தையரிடமிருந்து பெரிய பாரத்தை வேறொருவன் தலைமேல் சுமத்தி விட்டு ஆசுவாசமாகப் பெருமூச்சு விடுகிற தன்மையே பெண் விடயத்தில் காணப்படுகிறது. எனவே திருமணத்தின் மூலம் உண்ணவும், உடுக்கவும், வாழ்க்கைக்கான ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் பெண் திருமணம் செய்துவைக்கப்படுகிறாள். இதுவே திருமணம் தொடர்பான புரிதலாகவும் பெருமளவு கிழக்கு முஸ்லிம் சமூக அமைப்பில் உள்ளது.

இவ்வாறான ஒரு சமூக அமைப்பில் வாழ்ந்து பழக்கப்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம் பெண் கடல்கடந்து மத்தியகிழக்கு

**உற்பத்திப் பொருளாதாரத் துறையின் வீழ்ச்சி காரணமாக 80களில் கிழக்கிலங்கையினுடைய சமூகப் பொருளாதாரம் மிக மோசமான கீழ்நிலைக்குப் போய்க்கொண்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதே காலத்தின் நடுப்பகுதிகளிலிருந்து கிழக்கு மாகாணத்தில் நிலவிய தமிழ் முஸ்லிம் இனமுறுகல் நிலையும், நெருக்கடியும் கிழக்கிலங்கையின் பொருளாதாரத்தில் இன்னும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. இம்முரண்பாடுகள் 90களின் ஆரம்பத்தில் உச்ச நிலையை அடைந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்குச் சென்று தானாக உழைக்கத் தொடங்குகிறாள். தான் வருடக்கணக்காக பல அவலங்களையும், கஸ்டங்களையும் சகித்துக்கொண்டு உழைத்த பணத்தில் பெரும்பங்கு திரும்பித் தாய்நாட்டுக்கு வருகின்ற போது குடும்பத்தினரால் செலவழித்து முடித்திருப்பதையே காணுகின்றாள்.

வாழ்க்கைத் தரத்தை சிறிதளவாவது உயர்த்திக் கொள்ளும் கனவுகளோடும், கற்பனைகளோடும் பறந்து செல்லும் பெண்கள் அந்நோக்கில் முழுமையாக வெற்றி பெறுவதில்லை. கனவு போலவே தற்காலிகமாகத்தான் அவளது முயற்சி வெற்றிபெறுகிறது. வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து ஒரு சில மாதங்களிலேயே அவளது குடும்பம் பழைய நிலைக்குத் திரும்புவது தான் கண்கூடு. மீண்டும் மீண்டும் பலதடவைகள் மத்திய கிழக்கிற்குச் சென்று வந்தவர்கள் கூட ஒரு சிறிய கல்வீட்டிற்கு மட்டுமே சொந்தக் காரர்களாக உள்ளனர். ஓரளவு பணத்தினைச் சேர்த்தவர்கள் கூட, பாரம்பரியமாக கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் தொழிலில் ஈடுபட்டுப் பழக்கமில்லாத காரணத்தால் எத்தொழிலிலும் அப்பணத்தை முதலீடு செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதில்லை.

சில பெண்கள் உழைக்கும் பணம் தகப்பன்மார், சகோதரர் அல்லது கணவன்மாரால் ஊதாரித்தனமாகச் செலவு செய்யப்பட்டு விடுகிறது. மத்தியகிழக்கு நாடுகளில் உள்ள எஜமானர்கள் சரியான சம்பளம் வழங்காமல் ஏமாற்றி அனுப்புகிற நிகழ்வுகளும் அதிகரித்துள்ளன. இதனால் இவர்கள் கஸ்டத்திற்குட்பட்டு வெறுங்கையுடன் நாடு திரும்புவதும் உண்டு.

கல்வியறிவு குறைவாகக் காணப்படுவதால் வங்கி நடைமுறைகளில் அறிவின்மை காரணமாகப் பணம் இழக்கப்படுவதுண்டு. இவ்வாறானவர்கள் தங்களை மத்தியகிழக்கிற்கு அனுப்புகிற உப முகவர்களால் ஏமாற்றப்பட்டு பணத்தைப் பறிகொடுப்பதும், இம்முகவர்களுக்கு நீண்ட காலமாகப் பணம் அனுப்பிய பின் அவர் நாடு திரும்பிய பெண்ணுக்கு அவளது பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுப்பதும் உண்டு. சில பெண்கள் விமான நிலையம் வந்திறங்கியவுடன் கொழும்பிலிருந்து கிழக்குக்கு வந்து சேர்வதற்கிடையில் உழைப்பின் ஊதியம் அனைத்தையும் பிரயாணத்திலேயே இழந்து விடுவதும் உண்டு. வெளிநாடு செல்வதற்கான செலவுக்காக வீடு, வளவுகளை அடகு வைத்துச் செல்பவர்களும் கொள்ளை இலாபம் அடிக்கும் வட்டிக் காரர்களிடமிருந்து அவற்றை மீட்பதற்காக பல வருடங்கள் உழைக்க வேண்டியய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது.

இவ்வாறான நிலையினால் வெளிநாடு சென்று வந்த பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் நிம்மதியாக வாழக்கூடிய நிமிர்ந்த பொருளாதார நிலையைக் கொண்டிருக்கவில்லை. குறுகியகாலம் வெளிநாடுகளில் வசிக்கும் போது தவிர ஆயுள் முழுவதும் வழமையான வறுமையோடுதான் வாழ வேண்டியுள்ளது. ஓரளவு குடும்பத்தைப் பட்டினியின்றி வழிநடத்துவதற்கு தாய், மூத்த பெண் பிள்ளை, பின்னர் இளையவள், அதனை அடுத்து எட்டம் ஆண்டுக்கல்வியைப் பூர்த்தி செய்த கடைசி மகள் என்று ஒரு குடும்பத்தில் உள்ள அனைத்துப் பெண்களும் மத்தியகிழக்கிற்குச் சென்று அடிமைச் சேவகம் செய்யவேண்டியுள்ளமை இந்த மலட்டுப் பொருளாதாரத்தினால் ஏற்படுகின்ற பெரும் துரதிஸ்டமாகும்.

இப்பெண்களுக்கு தொழிற்பயிற்சிப் பட்டறைகளும் துறைசார்ந்த வல்லுனர்களால் தொழில் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு சுயதொழில் செய்து வெற்றிபெற வழிகாட்டப் படல் வேண்டும். இவ்வாறான பெண்கள் பலர் சேர்ந்து கூட்டுறவு முறையிலான சிறுகைத்தொழில் பேட்டைகள் அமைப்பதன்மூலம் இவர்களது பொருளாதார அழிவுகளிலிருந்து அவர்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளத் தேவையான அறிவூட்டல்கள் வெளிநாடு செல்வதற்கு முன்பே திட்டமிடப்பட்ட அடிப்படையிலும், நிறுவனமயப்படுத்தப்பட்ட அடிப்படையிலும் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

கிழக்கிலங்கையிலிருந்து வெளிநாடு சென்றுவந்த பெண்களுக்குச் சமூகத்தில் சரியான அந்தஸ்த்து இல்லையாயினும் இவர்களது தொகையின் பெருக்கமும், இடறும் குடும்பங்களுக்கு இவர்களின் பயணத்துக்கான அவசியமும் சேர்ந்து இவ்வேலை வாய்ப்பை சமூகம் முழு அளவில் அங்கீகரிக்கும் நிலை படிப்படியாக ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

கிழக்கிலங்கை மக்களின் உற்பத்திமுறைப் பொருளாதாரத்தின் தோல்வியும், இனச்சச்சரவுகளின் முடிவின்மையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான பரஸ்பர சந்தேகப் பார்வையும் தொடரும் வரை கிழக்கு முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கிற்குச் சென்று உழைத்து வரும் அவசியம் இருந்து கொண்டே இருக்கும். இது பல்கி பெருகி கிழக்கின் பொருளாதாரமே கண்ணுக்குப் புலப்படாத வகையில் இப்பெண்களின் ஊன்று கோலிலே தங்கியிருக்கும் நிலை உருவாகுமென்பதை உறுதிபடக் கூறலாம். இப்படியொரு நிலையில் கூட இப்பெண்களின் உழைப்பும், இவர்களின் கண்ணீரும் ஆணாதிக்கச் சமூகத்தினால் கணக்கிலெடுக்கப் படப் போவதேயில்லை. இப்பெண்கள் நிறுவனமயப்படக்கூடிய ஒரு சூழ்நிலை தோன்றி அவர்களுக்கான நியாயம் தனித்தனியாகவின்றி ஒரு கூட்டு சக்தியாகக் கோரப்படும் போதுதான் அவர்களுக்கான சமூக அந்தஸ்த்திற்கும், பொருளாதார அங்கீகாரத்திற்கும் வழி பிறக்கும். அதுவரை குடும்பப் பாசம் என்கிற பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டு இப்பெண்கள் வேலைவாங்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். சுரண்டப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

### அட்டைப்படக் குறிப்பு

போரும் வாழ்வும்

1. கொரிசா : கொசவோ யுத்தத்தின் போது NATO விமான குண்டுக்கு இலக்காகி நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மரணித்த இடம் கொரிசா.

பதுங்கு குழி வாழ்வு

2. போர்ச் சூழலில் போரில் ஈடுபடாத அப்பாவிப் பொதுமக்கள் மரணிப்பது போரின் கொடுமைகளில் முக்கியமானது. இந்த ஓவியங்கள் போரினால் உயிரிழந்தும் நாதியற்ற அப்பாவி மக்களை நினைவுகூறுகிறது. — கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகன அதிர்வுகளில் இறந்து போகும் நினைவுகளின் சடலங்கள்
என்னுள் குவிகின்றன
ஆத்மாவை குமட்டும் வாகனப் புகை சூழ்கிறது
சோளகத்தின் மோதலுக்கு மனமிரங்கிச் சலசலக்கும்
வடலிகளின் குரலிசையோ மறைகிறது!
வேதனை முட்டிக் கவிதையாக வெடிக்கையில்
ஒளி தர ஓர் சுட்டி இருந்தது.
பரிவுடன் ஒளிவீசி
ஆத்மாவை வருடி அணைகையில்
துயரங்களுடன் கூடிய இன்னுமொரு பகலுக்காக
நான் அஞ்சியதில்லை.
கண்ணீர் சிந்தும் சில பேர்
இரத்தம் சிந்தும் சில பேர்
வியர்வை சிந்தும் சில பேர்
என உருப்பெற்ற தேசத்தில்
எதையுமே சிந்தாது உருப்பெற்றவர்களும் இருந்தனர்.
தற்பெருமை மிக்க வாய்மொழியும்
புன்னகைகள் அடங்கிய பெட்டியும்
கொண்டு அலைகின்றனர் மனிதர்.
தேனீர் பேணிகள்...
கைலாகுகள்...
அரவணைப்புகள்...
மனித ஓலங்களின் அதிர்வெண்ணை
உள் நின்று பீறிட்டெழும் இரத்தத்தை
உணரும் வலுவுள்ள ஆத்மாக்கள் எங்கே போயின
வாழ்க்கை என் பிடரியில் அறைகையில்
என்னுள்ளோ
ஓயாது நிமிர்ந்து எழுந்து புரண்டு
கரைகளை அறையும் அலையின் சத்தம். □



## கவிதைகள் இரண்டு

தேவஅபிரா

இரவு
காற்றில் பாங்கொலி - மனித முறையீடு
ஆத்மாவை உலுப்புகிறது
ஆற்றின் கீதம்
மலைகளைத் தழுவிச் செல்கிறது.

ஓயாது சலியாது
ஆழ்ந்த பள்ளத்தாக்குகளில்
காதல் புரியும் ஆறுகளையும் பாறைகளையும்
எண்ணி வியக்கிறேன்.

மலைகளைப் படலிட்ட புல் வெளிகளில்
குளிரில் என் ஆத்மாவை வீசி விடுகிறேன்
இதயத்தில் துயரங்களின் நீர் வீழ்ச்சி.

உன் விழிகளின் ஒளிக்கு
உண்மையின் அர்த்தம் எதுவுமில்லை என்று
ஒளி இழந்த பின்னரே அறிந்தேன்.
மனித முறையீடு
மலைகளை மோதிப் பின் குளிரில் உறைந்து போகிறது
நாளை நான் போய் விடுவேன்
இந்த இரவு தடுமாற்றம் நிறைந்தது உனக்கு
இருளான இதயங்களுள் நீ
சிறு சுட்டி - நின்றெரியும் அதன் சுடராகவாவது ஆகியிருக்கலாம்
அவர்கள் மறந்தனர்
நீயும் மறந்தாய் நிராதரவாய் நான்
சமரசங்களுக்கும் ஒப்பீடுகளுக்கும் அப்பாற்பட்டதென் ஆத்மா!
முன்னறையில் இருந்து
பிரியும் என் முதுகைப்பாத்திரு!
ஆறிய தேனீரை விழுங்குவது போல
நினைவுகளை விழுங்க முடியும் என்றால்...
மலை இடுக்கில் வீசப்பட்ட என் ஆத்மா கிடந்து தவிக்கிறது
நீரலைகளை தன் துயரங்களை கழுவிச் செல்லாதோ என ஏங்குகிறது
மலைச்சரிவின்
மென் பச்சைக் கம்பளத்தில் படுத்திருந்து
முடிவில்லாத இரவில்
ஆற்றின் கீதத்தில் கரைந்து விட விரும்புகிறேன்

15.09.93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததியின் முகம்

## திரைப்படம்

அன்மையில் 'முகம' என்ற திரைப்படத்தை வீடியோ வடிவத்தில் பார்த்துத் திருப்திப்பட்டேன். இது ஒரு வித்தியாசமான படம். ஹொலிவூட் மரபைபொட்டி உருவாக்கப்படாமல், ஐரோப்பிய திரைப்பட மரபுக்கிணங்கக் கச்சிதமாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தை நெறிப்படுத்தியவர் 'அருந்ததி' என்ற இலங்கையர். இவருடைய படத்தைப் பார்த்த பொழுது, நல்ல தமிழ்ப் படங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புகள் பல வெளிநாட்டில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இப்பட நெறியாளர் 'அருந்ததி'யும் தயாரித்த நவாஜோதியும் பிரான்ஸ்நாட்டுத் தலைநகரான பரீஸில் வசிப்பவர்கள். இலங்கையரின் தயாரிப்பில் நான்கு வருடங்களுக்கு முவ்வர் உருவாகிய படம் இது.

தற்காலச் சூழலில், இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் குடிபுகுந்த அகதிநிலையிலுள்ள யாழ்ப்பாணத் தமிழர் (இளைஞர்) சிலரின் மனோபாவங்களையும், குற்றமும் குணமுங் கொண்ட இயல்பான நடைமுறைகளையும் இப்படம் சித்தரிக்கிறது எனலாம்.

பிறந்த மண்ணோடு தொப்புள் கொடி அறுந்து போக, எங்கோ வந்து விழுந்து முகந் தொலைந்தவர்கள் வாழ்க்கையே ''முகம்'' என இப்படம் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது. 'முகம்' என்ற தலைப்பிலே, ஞானராஜசேகரன் என்ற தமிழ் நாட்டு நெறியாளரும் ஒரு படத்தை நெறிப்படுத்தியுள்ளார். இப்படத்தில் நடித்த நாசர், இப்படம் பற்றி உயர்வான அப்பிராயம் கொண்டிருக்கவில்லை என்பதனை அவர் இங்கு வந்த போது அறிந்துகொண்டேன். தமிழ் நாட்டு 'முகம' படத்தை நான் இன்னமும் பார்க்கவில்லை. அடுர் கோபாலகிருஷ்ணன் என்ற மலையாளத் திரைப்பட நெறியாளரும் ''முகாமுகம்'' என்ற படத்தை நெறிப்படுத்தியிருக்கிறார் என்பதனை நாம் இங்கு நினைவு கூறலாம்.



பிரான்ஸ் நாட்டில் ''யூனிவேர்சல் ஆர்ட்ஸ் க்ரியேஷன்ஸ்'' வழங்கிய ''முகம'' படத்திலே, தங்கள் அகதி வாழ்வின் வெளிப்பாடு இடம் பெறுவதாக, தயாரிப்பாளர் கூறிக்கொள்கிறார்கள். ''அகதி வாழ்க்கை'' என்னும் பொழுது, முகாம்களில் அனுபவிக்கும் அகதி வாழ்க்கையாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

சினிமாவில் அரசியற்சார்புக்கு அழுத்தம் கொடுக்கும் யமுனா ராஜேந்திரனின் கூற்று ஒன்று எனக்கு உடன்பாடாய் உள்ளது. அவர் கூறுகிறார்:

''பிரமைகளை கருத்தளவில் உடைப்பதற்கு பிரமையான வடிவங்களைத் தகர்த்துக் கொண்டு எழும் புதிய சினிமா வடிவங்களே சாத்தியமான ஊடகமாக முடியும். இப்புதிய சினிமா வடிவத்தின் முன்னோடியே முகம்.''

நெறியாளர் அருந்ததி ஆய்வறிவு ரீதியான சிந்தனைக் கலைஞர் என்பதை அவதானிக்க முடிகிறது. அவரை நான் அறியேனாயினும், அவர் கூற்றுக்கள் சில எனக்கு உடன்பாடாய் இருக்கின்றன.

உதாரணமாக: ''...கலைஞர்கள் ஓடிப்போகும் கணங்களை நமது ஆளுமைக்கேற்ப கையகப்படுத்தி கலைத்துவமாக தம் அடுத்த சந்ததியினரிடம் கையளித்து விடுகின்றனர்... வேரறுத்து எம்போல் வந்து முகம் தொலைக்காமல் தாய் மண்ணில் என்றும் நிற்பவரே! ''முகம்'' உங்களிடம் புரிந்துணர்வுடன் ஓர் அனுகுமுறையினைக் கோரி நிற்கிறது. ''பிரியாற்றாமை'' ஏற்படுத்தியிருக்கும் சோகம் பற்றிச் சொல்லிக் கொள்ள வருகிறது. அகத் திரையில் அன்னிய கலாச்சாரத்தில் சொந்த முகம் இழந்து இரவல் முகமும் பொருந்தாத

கே.எஸ். சிவகுமாரன

## உள்நாட்டில் காலூன்றி உலக மனிதர்களாய்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இரண்டுங் கெட்டான் வாழ்க்கை பற்றி எடுத்துச் சொல்லவருகிறது.''

ஓர் ஆக்கப்படைப்பு பற்றி நாம் திறனாய்வு செய்யும் பொழுது, படைப்பாளியின் நோக்கம் என்ன என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ளாமல், கொச்சையாக நமது ''வாசிப்பை'' வெளிப்படுத்துவது திறனாய்வாகாது. இந்த விதத்திலே நான் கறார். எனவே தான் ''முகம்'' படக் கலைஞர்கள் நோக்கத்தை விரிவாகத் தந்தேன். அவர்கள் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா என்பது வேறு விஷயம்.

நெறியாளர், ''பாரெங்கும் சிதறி முகமிழந்து போன எங்களைப் பரிவோடு தேற்றுங்கள்'' எனக் கூறும் போது அவர்கள் நிலைமையை இத்திரைப்படம் வாயிலாக நாம் நன்கு அறிந்து கொள்கிறோம்.

தயாரிப்பாளர் எஸ்.நவரட்ணம், அச்சொட்டாக நிலைமையை விளக்கி, பிரான்ஸ்நாட்டு ஆய்வறிவுத் திரட்டுகளின் பின்னணியில் 'முகம்' போன்ற திரைப்படங்கள் உருவாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்.

இந்தப்படத்தை நான் பார்த்தபொழுது, இப்படம் வெறும் ஆவணச் சித்திரமாக இல்லாமல் உளவியல் நோக்கிலும் எடுக்கப்பட்டிருப்பதை வெகுவாக வரவேற்றேன். இப்படம் பற்றிய ஒரு கலைஞனின் பார்வையாக நமது கே.எஸ்.பாலச்சந்திரன் (கனடா) தந்திருக்கும்

ஓர் ஆக்கப்படைப்பு பற்றி நாம்
திறனாய்வு செய்யும் பொழுது,
படைப்பாளியின் நோக்கம் என்ன என்பதை
முதலில் நாம் புரிந்து கொள்ளாமல்,
கொச்சையாக நமது வாசிப்பை வெளிப்படுத்துவது
திறனாய்வாகாது.
எனவே தான்
முகம் படக் கலைஞர்கள் நோக்கத்தை விரிவாகத்
தந்தேன்.
அவர்கள் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா என்பது
வேறு விஷயம்.

வரிகள் எனக்கு உடன்பாடானவையே (பார்க்க: முகம் திரைப்பட அறிமுகவிழா மலர் – 15.08.1999).

படத்தில் வெளிப்படும் நகைச்சுவையை மனுவல் யேசுதாசன் (கனடா) நேர்த்தியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பிரான்ஸீவா ட்ரூபோ, ரெனே போன்ற அற்புதமான நெறியாளர்களைத் தந்துள்ள பிரான்ஸ் நாடுதான் ஜ்ஷோன் போல் சாத்ரே, அல்பேர் காம்யூ போன்ற இலக்கியவாதிகளையும் தந்துள்ளது. சாதாரணத் தமிழ் இளைஞர்களின் மரபுரீதியான பார்வையிலின்றும் விடுபட்ட அருந்ததியும், ஜோதியும், நவரட்ணமும், பிரான்சில் வாழும் ''எக்ஸில்'', ''உயிர் நிழல்'', நண்பர்களும் கலாமோகன், ரவிந்திரன் போன்ற கவிஞர்களும், புதிய தாரகைகளாக எனக்குத் தென்படுகிறார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சூழலிலும் மனப்பாங்கிலும் இருந்து வெளிவரும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் நமது மரபில் காலூன்றி உலக மனிதர்களாக வரும் வாய்ப்பு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

0

அலுகோஸின் கயிறு
அட்டியலாய் அணிந்து
பாடுவோர் பாடிக் கொண்டும்
ஆடுவோர் ஆடிக் கொண்டும்
ஆனந்தமாய்...

சார்பற்ற நாம்
சாலை யோரத்தில் -
பொறாமையாய்ப் பார்த்த வண்ணம்...
மௌனக் கண்ணீர் வடித்த வண்ணம்....

வீடு திரும்பின -
செம்மலர்களின்
சவக்களைத் தோற்றம்...

இருதய மிருந்த இடத்தில்
எஞ்சியது
வலி

கழுத்துகளில் சுருக்குக் கயிறு
இறுக்கும் பிரமை
பாதங்களில் இரும்புச் சங்கிலியின்
நர்த்தனம்.

பின்பொரு நாள் வந்தது காதல்
பிறரைப் போலெம்மையும் விலங்குகள் மாட்டி
தன்னுள் ஈர்த்துக் கொண்டதக் கரவான.

ஃபைஸ் அஸ்மத் ஃபைஸ்
தமிழில்:
பண்ணாமத்துக்கவிராயர்



ஒருவர் முன்வைக்கின்ற கருத்தை
நேர்மையாகவும்,
துணிவுடனும்
கூறுவதில்
எவ்வித குற்றமுமில்லை



சி. சிவசேகரம்

**மா**ற்றுக் கருத்துடையோர் பற்றி குறிப்பாக இறந்தோர் பற்றி, அநாகரீகமான முறையில் நான் எழுதியுள்ளதாக யோதிலிங்கம் முறைப்பட்டுள்ளார். உண்மை பல சமயங்களில் நாகரீகமானதல்ல. ஆயினும் நான் உண்மைக்குப் புறம்பாகவோ அநாகரீகமாகவோ என்ன எழுதினேன் என்பது தெளிவில்லை. 'அங்கலாய்ப்புக்கள்' அநாகரீகமான சொற்பிரயோகம் என்றால் அது இறந்தோர் மீதான விமர்சனமல்ல. கடந்த ஒரு வருடமாக நீலனை ஒரு உன்னதமான மனிதராகக் காண்பிக்க எடுக்கப்பட்டுவந்த முயற்சிகளை தளையசிங்கம் பற்றி மூன்றாவது மனிதனில் வந்த கருத்துக்களும் வேறுசில முயற்சிகளும் நினைவூட்டியது என்னவோ உண்மை. என் ஒப்பீடு இந்தவாறான முயற்சிகள் பற்றியதே ஒழிய வேறேதும் பற்றியதல்ல. வேண்டின், நீலனை மு.தவுடன் ஒப்பிடுவது பற்றி ஆட்சேபம் எழுப்பிய பொன்னம்பலத்துடன் யோதிலிங்கம் இறந்தோரை இழிவு செய்வது பற்றி விவாதிக்கலாம். என்னளவில் இந்த விளம்பர யுகத்தில் பொது அங்கீகாரம் என்பது, எதற்கும் ஏற்ற அளவுகோலல்ல. எனவே அதைப் பெறுவதற்கோ எவர்க்கும் பெற்றுத் தருவதற்கோ பிறர் மீது அபாண்டம் சுமத்த வேண்டிய நிர்ப்பந்தமும் எனக்கு இல்லை.

இறந்தவர்களையோ மூத்த எழுத்தாளர்களையோ யாரும் விமர்சிக்கும் போது காட்டும் நாகரீகம் உயிரோடு உள்ளவர்களையும் இளைய எழுத்தாளர்களையும் விலக்காகக் கொள்ள அவசியமில்லை. 'பதில் அளிக்க இயலாமை' பொதுவாழ்வில் இருந்தவர்கட்கு ஒரு பாதுகாப்பு அரணாக முடியாது. ஒருவர் முன்வைக்கின்ற கருத்தை நேர்மையாகவும் துணிவுடனும் கூறுவதில் குற்றம் இல்லை. பொறுப்புணர்வு என்பது நேர்மையும் சமூகப் பயனும் சார்ந்த ஒன்றே அல்லாது 'நாகரீகம்' சார்ந்தல்ல. நேர்மையும் நாகரீகமும் அற்ற தாக்குதல்கட்கு நம்மிற் பலர் இன்னமும் முகங்கொடுக்கிறோம். நமது எழுத்துலகில் முக்காடு போட்டுக் கொண்டும் மதிலுக்குப் பின்னின்றும் தாக்குகிற வீரர்களும் நிறையவே உள்ளனர்.

EPRLF இன் அரசியல் 1987க்குப் பின்பு எந்தத் திசையிற் போய் இன்று எங்கு வந்து நிற்கிறது என்பதே இன்று நமது கவனத்தை ஈர்க்கிறது. தேசிய வாதத்தின் உள்ளார்ந்த, ஆபத்தான பண்புகள் சில பற்றிய கவனமின்றித், தமிழ்த் தேசிய இன விடுதலையை நாம் ஆராய்வது கடினம். தமிழர் விடுதலையைப் பங்குக் குத்தகைக்கு எடுத்த பல கூட்டங்கள் இன்று தமது குத்தகையைப் பேரினவாதிகளிடம் அடமானம் வைத்து அந்த வரும்படியில் சீவியம் நடத்துவதை யோதிலிங்கத்தின் குத்தகை உவமை மிக பொருத்தமாகச் சுட்டிக்காட்டுகிறது.

நுஃமான் பற்றிய இரு குற்றச்சாட்டைப் பல இடங்களிலும் இக்பால் கூறிவருகிறார். எல்லா இடங்களிலும் அதற்கான பதிலை நுஃமான் மீளவும் மீளவும் எழுதுவது பயனற்றது. 'ஞானம்' சஞ்சிகையில் வந்த பதிலை அனுமதியுடன் மீள்பிரசுரம் செய்வது பயனுள்ளதாயிருக்கும். இக்பாலின் பத்திரிகை நறுக்குகள் எதையும் நிரூபிக்குமாயின் அவையும் எங்கேன் மீளபிரசுரமாகட்டும்.

இந்தியாவிலும் மலேஷியாவிலும் தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு நடைபெற்று வருகிற தளங்கள் பற்றியும் இங்கு நடைபெற்றுவரும் தளங்கள் பற்றியும் உற்றுக் கவனியாமல், தெரிவுகள் பற்றி முறைப்படுவது சரியல்ல, பல்கலைக்கழகப் பதவி தகுதிக்கு உத்தரவாதமல்ல என்பது சரி. ஆனால் ஆய்வுக்கான பொறுப்புக்களை ஏற்போர் எவரும் தகுதியற்றோராயின் அதைச் சுட்டிக்காட்டுவது தகும். (அதுபோக, பல்கலைகழகப் போதனாசிரியர் என்பது விரிவுரையாளர்களையோ பேராசிரியர்களையோ குறிக்காது என்பதையும் இங்கு சொல்ல விரும்புகிறேன். தமிழில் எவரையும் கலாநிதி, பேராசிரியர் என்று வர்ணிக்கப், பல்கலைக்கழகத்தில் வேலை பார்ப்பதே போதுமானதாக இருக்கிறது. பொதுவாக இந்த விதமான தலைப்பாகைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு எழுதுவது ஜனநாயகமாக விவாதத்துக்கு நல்லது).

பிற்குறிப்பு : நண்பர் சோ. தேவராஜா யாழ்ப்பாணத்திற்கு சென்ற போது நண்பர் முருகையனிடம் மஹாலக்ஷ்மி யாரென விசாரித்து அது மஹாகவியே என அவர் கூறியதாகத் தெரிவித்தார்.

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் தலித்துக்களும் ஈழத்தின் சாதியமைப்பும்

கார்த்திகேசு சிவத்தம்பி

மூன்றாவது மனிதன் இதழ் – 7இல் வெளிவந்த தலித்தியம் பற்றிய எனது கருத்துரைக்கான இரண்டு காத்திரமான துலக்கல்கள் (Responses), மூன்றாவது மனிதன் இதழ் 8இல் வெளியாகியுள்ளன.

எனது கருத்துரை பற்றிய ஒரு குறிப்பு அவசியம். அது ''தலித், தலித்தியக்கம் என்ற வகைகள் இலங்கைக்கு பொருந்துமா'' என்பதே. அது சம்பந்தமான எனது பிரதான நிலைபாடு ''இலங்கையில் சாதிப்பிரச்சினை பார்க்கப்படும் முறைமை வேறு, தமிழ்நாட்டில் சாதிப்பிரச்சினை பார்க்கப்படும் முறைமை வேறு. அங்கு தலித்துக்கள் முன்வைக்கும் கோஷங்களையும், பிரச்சினைகளையும் இங்கு பிரதி செய்ய முடியாது.''

அதை நான் மீளவும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தியாவில், தமிழ்நாட்டில் தலித்தியம் கொண்டுள்ள சமூக அரசியல் பரிமாணங்கள் வேறு: அவற்றை இலங்கை நிலைக்குள் பொருத்திப் பார்க்க முடியாது.
இந்த நிலைபாட்டை விளக்குவதற்காக, தமிழகத்துச் சமூகப்பின்புலத்தையும், இலங்கைச் சமூகப்பின்புலத்தையும் சற்று விரிவாக ஒப்பு நோக்கினேன்.

இதைக் கூறும் அதேவேளையில் ''யாழ்ப்பாணத்தில் சாதி முறைமை ஒழிந்து விட்டது என்று கூற நான் வரவில்லை அடிபட்டு அகதிகளாக வந்து அடுத்த நாள் பார்த்தால் சாதிகளாகப் பிரிந்து பிரிந்து இருப்பதைக் காணலாம். அகதி முகாம் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதில் கூடப் பிரச்சினையுண்டு'' என்றும் கூறியுள்ளேன். அவ்வாறு கூறிவிட்டு ''ஆனால் இந்தியாவில் தலித்துக்கள் இருக்கும் நிலை போல இங்கு இல்லை'' என்று கூறி முடித்தேன்.

நண்பர் சிவசேகரம் நான் இவ்விடயம் பற்றி எனது இன்னொரு நண்பரான அமார்க்ஸ் எடுத்துள்ள நிலைப்பாட்டை தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அது என் பதிலுக்கு இன்றியமையாத ஏற்புடைய ஒன்று அல்ல. தமிழகத்துத் தலித்திய அரசியல் பற்றியும் இலக்கியத்தில் அது பெறும் இடம் பற்றியும் நான் எனது பதிலில் எதுவும் குறிப்பிடவில்லை.

காமராஜ் பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று நண்பர் சிவசேகரம் கூறியுள்ளார். காமராஜின் ஆட்சிக் காலம், குறிப்பாக அவரது கல்விக் கொள்கை, தலித்திய எழுச்சிக்கு வித்திட்டது. ஆனால் காமராஜ் காலத்தில், தமிழகத்து அரசியலில் இப்பிரச்சினை ''தலித்'' என்ற பெயரிற் பேசப்படவில்லை. அது பெரும்பாலும் ஆதித்திராவிடக் குடிகள் என்ற பெயரிலேயே பேசப்பட்டது. அப்பொழுது அப்பகுதியைச் சார்ந்த தலைவர்களும் இருந்தனர். அவர்கள் கூட தலித் என்ற மேல் ஓட்டுக்குள் (லேபல்) போடப்படவில்லை. (காமராஜின் எழுச்சி நாடார் சமூகத்தின் மேனிலைப் பாட்டின் சின்னமாக அமைத்தது)

திராவிட இயக்கத்தினர் கூட இந்தப் பெயரை (தலித்) பயன்படுத்தவில்லை. சத்தியவாணிமுத்து இச்சமூகத்தினரின் பிரதிநிதியாக அமைச்சரவையில் இடம் பெற்றார் என்று எண்ணுகிறேன். ''இலங்கையில் நாங்கள் எகுநாதனையோ, எஸ்.பொன்னுத்துரையோ தலித் ஆகபார்க்கவில்லை என்பது உண்மையில் மு.போ.எ.சங்கத்தைத்தான் குறிக்கும். அந்தச் சொற்பயன்பாட்டில் ஒரு சிறு கவலையீனம் இருப்பதை ஒத்துக்கொள்கிறேன். உண்மையில் அந்தப் பிரக்ஞை எமக்கு இருக்கவே இல்லை.

ஆனால் நான் சொன்ன இன்னொரு சமூகவியற் குறிப்பு முக்கியமானது. பிரசித்த எழுத்தாளர்களை பொறுத்தவரையில், இலக்கிய ஆர்வலர் மட்டத்தில் சமூக ஏற்புடைமை பொன்று படிப்படியாக வளர்ந்து வந்தது'' அது உண்மை.

நண்பர் யோதிலிங்கம். கிளப்பியுள்ள பிரச்சினைகள் சுவாரசியனவை.

1.அருந்ததியர் நிலை
2.அறுநாட்டு வேளாளரின் ஒதுக்கு நிலை
3.யாழ்ப்பாணத்தில் இளைஞர் தீவிரவாதக் குழுக்களிடையேயும் சாதி உணர்வு இருந்தமை.

இதில் முதலாவது பற்றி.......
''சக்கிலியர்'' என்று முன்னர் குறிப்பிடப் பெற்ற அருந்தியர் சமூகத்தினர் உண்மையில் தமிழ் நாட்டுச் சாதியமைப்புக்கு அந்நியமானவர்கள். அவர்கள் தெலுங்கு நாட்டவர். அவர்களின் தாய்மொழி தெலுங்கே. இலங்கையிலுள்ள அருந்ததியர்களிடமிருந்து சிதைந்த தெலுங்குப் பேச்சு வழக்கை இன்றும் அவதானிக்கலாம்.

தெலுங்கு ஆட்சியின் பொழுது அவர்கள் தமிழ்நாட்டுக்குள் வந்தனர். இறந்த மிருகத்தின் தோலைப் பதம் பண்ணியமையில் (மாட்டுத்தோல்) இவர்கள் பற்றிய சமூகக் கணிப்பு மிக குறைவாகவே இருந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிடையேயிருந்து தான் மதுரைவீரன் தோன்றியதாக ஐதீகம் உண்டு.

தமிழகத்திலிருந்து இலங்கைப் பெருந்தோட்டங்களுக்குத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்ட பொழுது, தமிழகத்துக் கிராமங்களில் நிலவிய முறைமையை இங்கு நாற்று நடவு செய்யும் ஒரு முறைமை இருந்தது. (நாவிதர்களும் கூடக் கொண்டு வரப்பட்டனர் என்பர்)

பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தினுள் பலசாதிகள் உண்டு. அது உண்மையில் ஒரு சாதியச் சமூகமே (இது பற்றி எனது குறிப்பிற் சொல்லியுள்ளேன்). ஆனால் இலங்கைப் பெருந்தோட்டச் சூழலில், இவர்கள் யாவரும் மேலாண்மையுடைய ஒரு பெருந்தோட்டப் பொருளாதார அமைப்புக்குள் தொழிலாளர்களாக இருந்தமையால், இவர்களிடையே நிலவிய சாதிவேறுபாடுகள், இயல்பான தமிழகக் கிராமத்திலுள்ள முறைமையைபோன்று தொழிற்படவில்லை.

இதிலுள்ள இன்னொரு சிக்கல் என்ன வென்றால், இலங்கையில் நகரவளர்ச்சியுடன், இவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களாக் கொண்டு வரப்பட்டமையே. இது ஆங்கிலேயர் காலத்தில் நடந்தேறியது. கொழும்பு அத்தகைய ஒரு பிரதான நகரம். இவர்கள் தமிழ்ப்பிரதேச நகரங்களான பட்டினங்களுக்கு சென்றபொழுதும், அவ்வவ் இடங்களில் நிலவிய சாதிமுறைமைக்கு ''வெளியிலே'' அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களிலும் தாழ்த்தப்பட்டவர்களாக வாழ்ந்தனர்.

1960களிலிருந்து இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ள தெனினும், இன்னும் கணிசமான அளவு மாற்றம் ஏற்படவில்லை. சமூகமேனிலைப்பாட்டுக்கான சாத்தியப்பாடுகள் மிகக்குறைவு. இதனால் இவர்கள் நிலைமை மோசமாகவே உள்ளது. ஆனால் அண்மையில் கொழும்பில் ஒரு செல்நெறியை அவதானித்துள்ளேன். கொழும்பிலுள்ள இவர்களது வழிபாட்டு தலங்கள் (கோயில்கள்) படிப்படியாக சமஸ்கிருத நெறிப் படுவதை நான் அவதானிக்கிறேன்.

''அறுநாட்டுவேளாளர் பற்றி யோதிலிங்கத்தின் அவதானிப்புச் சரியானதே. இவர்கள் உண்மையில் இன்று இலங்கையில் ஒரு வர்த்தகக்குழாமே. கொழும்பில் முன்னர் பல கடைகள் இவர்களிடமிருந்தன. மலையக நகரங்களில் இவர்களுக்கு வணிக நலன்கள் உண்டு. இன்று கொழும்பில் தமிழ்ப்பண்பாட்டு விடயங்களில் இவர்களுக்கு ஒரு முக்கியத்தும் உண்டு. தமிழகத்திலும் இவர்கள் ஒரு முக்கிய உப – குழுவினராக உள்ளனர். இவர்கள் பற்றி வலென்ரைன் டானியல் எழுதிய நூல் மிக முக்கியமானது. இவர்கள் தங்கள் சாதித் தன்மையைத் தமிழ்ப் பண்பாட்டு வட்டத்தினுள் எவ்வாறு பேணுகின்றனர் என்பது பற்றி டானியல் ஆராய்ந்துள்ளார்.

யோதிலிங்கம் தரும் மற்ற அவதானிப்பு, இளைஞர் இயக்க தங்களிடையே சாதியுணர்வு பற்றியது. இந்நிலை ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் இப்பொழுது படிப்படியாகக் குறைந்து செல்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இடைநிலைச் சாதிகளுக்கும் உயர்நிலைச் சாதிகளுக்கும் இடையே நிலவிய இடைவெளி இப்பொழுது பெரிதும் குறைந்து விட்டது. ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்குமுள்ள இடைவெளி பெரிதும் குறையவில்லை.

இதனைப் பற்றி நான் பல தடவைகள் எழுதியுள்ளேன். நேரிற்கண்டுள்ளேன் – உணர்ந்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் சாதி அழிந்துவிடவில்லை. அவ்வாறு எளிதாக அழிந்து விடக்கூடிய அளவுக்கு அது மேல் வேர்விட்டமரம் அல்ல. ஆழவேர் விட்டது.

பொருளாதார முறைமை மாறி, அந்தமுறையை தோற்றுவித்த சமூகக் கட்டுமானம் மாறுகிற பொழுதே இதுவும் முற்றாக மாறலாம். அதற்காக அது முற்றும் மாறாது. 1958களுக்கு முன் இருந்த நிலையில், அல்லது 1868க்கு முன் இருந்த நிலையில் இப்பொழுது உள்ளது என்பதும் பொருந்தாது.




கடந்த தீபாவளி தினத்தன்று கலைஞர் கமலஹாசன் உடனான பி.எச். அப்துல்ஹமீட்டின் நேர்காணலை சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. கமலஹாசனின் தெளிவான தமிழ் உச்சரிப்பும், நேர்த்தியான வசன நடையும் அழகாயிருந்தன. ஒரு மணி நேர உரையாடலில் இரண்டே இரண்டு ஆங்கில வார்த்தைகளே உபயோகித்தார் என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம். இந்நேர்காணலை பார்த்துக் கொண்டிருக்கும் போது உமா வரதராஜனும், சாருநிவேதிதாவும் எனது ஞாபகத்தில் தவிர்க்க முடியாமல் வந்து போனார்கள். உமாவரதராஜன் அவர்கள் "மூன்றாவது மனிதன" மே–ஜீலை 2000 இதழிலும், சாருநிவேதிதா அவர்கள் "காலச்சுவடு" ஏப்ரல்–ஜுலை 2000 இதழிலும், கமலஹாசன் பற்றியும், அவரின் ஹேராம் பற்றியும் விமர்சித்திருந்தனர். ஹேராம் பற்றி பலரிற்கு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான அபிப்பிராயங்கள் உள்ளன. ஆனால் கமலஹாசன் பற்றி விமர்சிக்கும் போது இருவரும் அவர் பற்றிய பல விடயங்களை மறந்து போனது ஆச்சிரியம் தருகிறது.

அனேகமாக இவர்கள் இருவரும் இப்போது பல நூறு கோடி பேர்களிற்கு தெரிந்த கமலஹாசனையே எழுதியுள்ளனர். ஆனால் பரமக்குடியிலும், ஆழ்வார் பேட்டையிலும் சில நூறு பேர்களிற்கு மட்டும் தெரிந்திருந்த கமலஹாசனை பார்க்கவில்லை. கட்டுபாடான ஆச்சாரம் மிகுந்த பிராமண குடும்பத்தில் பிறந்தது. சிகை அலங்கரிப்பு நிலையத்தில் முடி திருத்துபவனாக, எங்களூர் மொழியில் சொன்னால "அம்பட்டனாக" வேலை பழகியது (இதற்காகவோ தெரியவில்லை, கமல் தனது "வறுமையின் நிறம் சிகப்பு" படத்தில், நாலாவது தலைமுறையை யோசித்துப்பார், நாவிதன் கூட உனக்கு சித்தப்பனாவான் என்று தனது தந்தையிடம் வசனம் பேசுகிறார்) அசைவம் சாப்பிட்டது, கிறிஸ்தவ சங்கத்தில் சேர்ந்து கிறிஸ்த்தவம் பரப்பியது (எல்லாம் வீட்டிற்கு தெரிந்துதான்) எல்லாவற்றையும் எப்படி வகைப்படுத்துவது? சாருநிவேதிதாவின் "கொழுப்பெடுத்த குந்தாணி" என்பதா? இதைத்தான் கமலஹாசனின "திமிர்" என்பது. இங்கு திமிர் என்பதை அடிக்கோடிட்டு வாசிக்கவும். நல்ல வேளையாக கமல் இவற்றை ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்ற நடிகனாவதற்கு முன்பே செய்து விட்டார். இல்லாவிட்டால் இதுவும் கமலின் ஒருவகை ஸ்ரன்ட் அல்லது பார்ப்பனியத்தின் இன்னோர் விதமான வெளிப்பாடு என சாருநிவேதிதா சொல்லியிருப்பார்.

உமா வரதராஜன், "கமல் தி.க.வா?, ஆர்.எல்.எஸ் சார்பாளரா? அல்லது பாரதீய ஜனதாக்காரரா? என சந்தேகிப்போரிற்கு முதலில் கமல் ஒரு தி.வி.க(திரைப்பட வியாபாரிகள் கழகம்) என்பதை புரிய வேண்டும" என்கிறார். உண்மைதான். கமல் கூட தான் வியாபாரியாக இருக்க வேண்டிய தேவை உள்ளதாக கூறுகிறார் ஏன் அவரின் ஹேராம் கூட ஒரு வர்த்தகரீதியான படம் என்றே சொல்லியிருந்தார்.

இது தவிர உமா வரதராஜன், தமிழ்சினிமாவில் இரண்டு வகைவியாபாரம் நடைபெறுகிறது எனவும் அவை



நடைபாதை வியாபாரம், Supermarket வியாபாரம் என நன்றாக வகைப்படுத்துகிறார். Supermarket வியாபாரத்தில் சங்கர், மணிரத்தினம் ஆகியோரோடு கமலையும் சேர்த்ததுதான் உறுத்துகிறது. மணிரத்தினம் என்பவர் திராவிடத்தை வேரறுத்து இந்திய தேசியத்தை முதன்மைப்படுத்தி படம் எடுப்பவர் என்ற தோற்றப்பாடு பலரிடம் உண்டு. அதைவிட்டுவிடுவோம், ஆனால் "மௌனராகம", "நாயகன" ஆகிய நல்ல படங்களை எடுத்தவர் திடீரென "இருவர்" என்ற படத்தை எடுத்தது ஏன்? என்று பலரும் புருவம் உயர்த்துகிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் சங்கர் என்பவர் சினிமாவில் உள்ள அத்தனை உச்சவளங்களையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி எப்படியாவது உச்ச வசூலை பெறவேண்டும் என்ற நோக்கோடு படம் எடுப்பவர். இவர் படங்களில் தமிழ் அடையாளங்களையும், தமிழ் நாட்டையும் பூதக் கண்ணாடி வைத்துத்தான் தேடிப்பார்க்க வேண்டும். இவர் தமிழர்களிற்காக படம் எடுப்பதில்லை., இந்தியர்களிற்காகவே படம் எடுக்கிறார். இவர் பெயர் கூட சங்கர் அல்ல "ஷங்கர்". யாராவது இவரிடம் ஒரு கோடி கொடுத்து அந்த பட்ஜெட்டுக்குள் படம் எடுக்கச் சொல்லுங்கள். அந்தப்படத்தோடு சங்கர் காணாமல் போய்விடுவார். ஆனால் கமல் இவர்களிடமிருந்து வேறுபட்டவர். அவர் ஒரு மைக்கல் மதனகாமராஜன், ஒரு ஔவைசண்முகி நடித்தால்தான், ஒரு குணா, ஒரு மகாநதி கொடுக்க முடிகிறது.

அடுத்து சாருநிவேதிதா கமல்மீது குத்திய பார்ப்பனிய, இந்துத்துவ முத்திரையை பார்ப்போம். சோ.ராமசாமி, சுப்பிரமணியசுவாமி மாதிரி பிற்போக்குத்தனமான பிராமணனாக இருக்காவிட்டாலும் தனது இரு தமையன்மார் மாதிரி சராசரி பிரமாணனாக கமல் வாழ்ந்திருக்கலாம். யாரும் ஒன்றும் சொல்லிவிடப் போவதில்லை. அதை விட்டுவிட்டு பாம்பையும் பார்ப்பனனையும் கண்டால் முதலில் பார்ப்பனனை அடி என்று சொன்ன பெரியாரின் திராவிடர் கழகத்தில் போய் சேர்ந்து கொண்டதுதான் இந்துத்துவமா? பெரியாரின் வாரிசுகள் எனவரிந்து கட்டிக்கொண்டு வந்தவர்கள் பெரியாரிலிருந்தும், திராவிட கொள்கைகளிலிருந்தும் தடம்மாறி அதிலிருந்து அளவிட முடியாத தூரத்தில் வந்துவிட்டனர். அவற்றிற்கு சின்ன உதாரணம் அவர்கள் நடாத்தும் "தனித்தமிழ்" தொலைக்காட்சியான சன் ரீ.வி. அம்புலிமாமா கதைகளையும், இத்துப் போன நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி கொண்டிருக்கிறது. இதுபற்றி அதன் அதிபர் கலாநிதி மாறனிடம் ஒரு வார இதழில் கேட்டபோது "நான் அடிப்படையில் தி.மு.க. காரன்தான் ஆனால் இது போட்டியுள்ள வியாபாரம், சந்தைக்கேற்ற மாதிரி எங்களை தயார் செய்ய வேண்டியுள்ளது" என்று சப்பைக்கட்டுகட்டுகிறார்.

இது இப்போது தொடங்கியதல்ல, 1961இல் அறிஞர் அண்ணாதுரையுடன் ஆரம்பமாகியது. 1961இல் சீனா இந்திய எல்லைகளை ஆக்கிரமித்த போது மூண்ட இந்தியா சீன யுத்தத்தின் போது திராவிட நாடு, தனித்தமிழ்நாடு என கோசமிட்ட அதே அண்ணாத்துரைதான் அப்போது முதலில் நாம் இந்தியர், பின்னர் தான் தமிழர் என இந்தியதேச பக்தியை வெளிப்படுத்தினார். ஆனால் ஆரம்பத்தில் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணலில் கமல் தனக்கு ஜாதியில்லை, மதமில்லை தனது ஒரேயொரு அடையாளம் முகவரி தான் தமிழன் என்பதும், எனது மொழி தமிழ் என்பதைத் தவிர வேறு அடையாளம் இல்லை என்பதை பிசிறில்லாமல் சொல்லியிருந்தார். ஒன்றை கவனிக்கவேண்டும்: அவர் தன்னை இந்தியன் என்று சொல்லவில்லை. சாருநிவேதிதா இதை கவனிப்பாரா? முழு இந்தியாவிலும் புகழ்பெற்ற, நன்கு அறியப்பட்ட ஒரு நடிகன் தமிழிற்குள் தன்னை மையப்படுத்தி வைத்திருப்பது மிக அவதானத்திற்குரிய தொன்றாகும்.

சென்ற ஆண்டு நடை பெற்ற கார்கில் யுத்த நிதிக்காக தமிழ் திரையுலகமே பொங்கியெழுந்து நட்சத்திர கலை விழாக்களை நடத்தி நிதிசேகரித்து கூட்டத்தோடு கூட்டமாக அரோகாராபாடி மெய்சிலிர்த்து தமது தேசப்பற்றை உறுதிப்படுத்தியபோது கமல் அவற்றில் பங்குபற்றாது தவிர்த்தார்.

மேற்சொன்னவை எல்லாம் கமலஹாசனை மற்றைய சினிமாக்காரர்களிடமிருந்து வேறுபடுத்துபவை. அத்தோடு அவைஎல்லாம் இந்தியதேசிய வாதிகளும், பார்ப்பனிய இந்துத் துவவாதிகளும் கமல் மேல் ஒருவித காழ்ப்புணர்வு வர காரணமாக அமைகின்றன. இவை எல்லாம் அறிவு ஜீவியான சாருநிவேதிதாவிற்கு தெரியாதது ஆச்சரியமாயிருக்கிறது. ஹேராம் என்ற திரைப்படத்தை வைத்துக்கொண்டு கமல்மீது இந்துத்துவ பார்ப்பனிய முத்திரை குத்துவது குழந்தைத் தனமானது அபத்தமும கூட. சாருநிவேதிதா மாதிரியானவர்களிற்கு தமிழில் எல்லாமே "தயிர் வடைகளாகவே" இருக்கின்றன போலும். சாருநிவேதிதாவின் படைப்புகளைத்தவிர.



## இப்போதுள்ள குறி வந்த கதை

அப்போது
ஆதாமவன் - விலக்கப்பட்ட கனியைப் புசித்திருக்கவில்லை.

அவன் அலைக்கழிந்த பெண்கள்
சாத்தான்களால் சேவகம் செய்யப்பட்ட கனவுலோகத்தில்
நீள்யவ்வன நிலையில்
பிறந்த மேனியராய்த் திரிய விடப்பட்டிருந்தனர்.

பராயப்படும் முன் தன்னைப்
பாவித்த ஒருத்தியின் பருத்தஇரு
மார்பகங்களின் மேலேயே இன்னும்
உறக்கத்தைப் பழக்கமாகக் கொண்டிருந்தான்.

குருடனைக் கூட்டிச் செல்லும் தடியாய்த்- தன் விறைத்த
குறிவழி நடந்தவன்
இச்சையோடு அது இரையும்போதெல்லாம் புகுந்து
கனவு விம்பங்களோடு கலவினான்.
இவனால் வடிவமைக்கப்பட்ட மார்பகங்களும், யோனிவழிகளும் கொண்ட
கன்னிகையரோடு சுயஇன்பங்கண்டு
ஸ்கலிதமான சில கணத்திற்கெலாம்,
முறுகித் திரண்டு ஏறிய நரம்புகள் பிரிந்து
இரத்தந் தணியக் குறி பதிந்த போது - ஆதாம்
கனியைப் புசித்துமுடித்து விட்டிருந்தான்.



வெட்கம் மேலிட அபத்தைப்
பொத்தி மறைத்தவனாய்க் கிடந்தஆளை,
உற்ற கூர்சம் தெளிவித்து விறைத்த ஆண்லிங்கம்
அது அவனைத் திரும்ப
ஆதாமும் அவன் விலாவென்பால் ஏவாளும்
சிருஷ்டிக்கப்பட்டுக் கனியைத் தின்னத் தலைப்பட
முந்திய காலத்தில் கனவில் பதிவைத்தது.

ஒரு தடவை—
அவனால் விபசாரியாய் அறியப்பட்ட ஒருத்தி
அவள் மரணித்த அன்றிரவே,
புற்றை வெட்டிச் சிகிச்சைக்காய் அகற்றப்பட்ட
ஸ்தனங்கள் இருந்த இடத்திலெலாம் சீழ்கட்டிப் புழுநெளிய
வந்து—
சாவைத்தொட்டும் பயங்காட்டி அழுத போது—
கதறும் ஒரு குரலை நாய்கள்
விரட்டி ஊளையிட்டுக் குரைப்பதையும் வெளியில் கேட்டான்.

காய்ச்சல் கண்ட அன்றே—
ஸ்திரிகளை விட்டும் விரண்டு அலறி
கனவிலிருந்து ஓடி வெளியேறியவன்
அவளின் ஏழாம் நாள் சடங்குகள் முடிந்து மற்ற அன்று—
மதத்தலங்களிலிருந்தும்
மோகினிகளால் மீட்கப்பட்டு,
திரும்பவும் ஒருக்கால் மார்க்க உபன்நியாசங்கள் அவனை
அண்டிவிடாதபடி பராமரிக்கப்பட்டான்.



தேறி — வாலாயச் சாத்தான்களை ஏவிக்
கனவின் உள்ளடுக்குகளை மீள நிரப்பிக் கொள்ள—
எண்ணற்ற அழகிகளின்
நக நறுக்குகளையும், சீப்புக்களிலிருந்து
சிக்குமுடிகளையும் சேகரித்துச் — சேர்த்திக்குச்
செய்வினை செய்து, புதைத்து
வாயிற்படிகளின் கீழ் வைத்திருந்த கனவுலோகம்
பிந்திய நாட்களில் சொர்க்கம் வரைக்கும்
விஸ்தீரணம் கொண்டிருந்ததாம்,

ஈற்றில்—
வசிய மாந்திரீகங்களைப் பயின்று கொண்டும்,
அரையில்
ஆயிரத்தி எட்டுத் தாயத்துக்களை அணிந்தவனாய்,
கிண்டிப் பிணங்களை — தீயில்
இட்டு உருக்கித் தைலமாக்கி
ஈர்க்கில் தொட்டு அதைத் தெறித்துப் — பெண்ணை
வீழ்த்தி வயமாக்கத் தலைப்பட்டவனை—
குறி சிதறக் கடவதென்று
கடவுள் சபித்தாரென
இதிகாசம் கூறுகின்றது.

இன்னும்,
ஊழியில் பிறக்கவிருக்கும் கடைசி
ஆண் மகன்வரை இருக்கப்போவது
சிதறிய அவனின் குறியின் துண்டே எனவும்
கிளைக்கதை ஒன்று வருகிறது.



20001118 இரவு 12.30மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குண்டுகள் எங்காகிலும் வெடித்துக் கொண்டே இருக்கின்றது. அமைதியாகக் கருதக்கூடியதாக ஒரு இடத்தையும் விட்டு வைக்காமல் வெடிக்கின்றது. யார் வைக்கின்றார்கள். எங்கு எப்படிக் கொண்டு செல்லப்பட்டது என்ற கேள்விகளுக்கு விடைகாண முடியாவண்ணம் வெடிக்கின்றது அல்லது கண்டெடுக்கப் படுகின்றது. கண்டெடுக்கப்படும் போது அது குண்டுகளாக இல்லாவிட்டாலும் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் அவை குண்டுகள் தான். பெற்றியும், ஒரு துண்டுவயரும் இருப்பின் அது குண்டு எனவும் அங்கு ஊடுருவல் நடந்திருக்கின்றதெனவும் இனங்காணும் பொழுதுகள் இவை. ஆனால் இங்கு வெடித்தது உண்மையான குண்டுதான். சில அதிரடி உடைகளையும், சாதாரண சட்டை ஒன்றையும் கொன்றிருக்கின்றது. இதன் போது அதிரடி உடைகள் மரணித்தது பற்றி அதிசயப்பட ஏதுமில்லை. ஏனெனில் இது அவர்களுக்காக, அவர்களின் வரவுக்காக வைக்கப்பட்டதால் குறித்த அவர்களின் பயணத்தின் போது வெடித்தது. அவர்களைப் பாவம் என்பதற்கும் இல்லை. அவர்கள் அம்மணமாக இருந்திருப்பின் அல்லது சாதாரணமாகவே மனிதனாக இருந்திருப்பின் "பாவம்" என மனம் வருந்திக் கொண்டோ, ஒரு துளி கண்ணீராகிலும் சிந்திக் கொண்டு போயிருக்கலாம். அவர்களது உடை கரடுமுரடானது. வியர்வையை நக்கி எடுக்கக்கூடியது. ரெத்தச் சுவையை கறையை அறியத்துடிப்பது. பெண்களின் அங்கங்களை தடவத்துடித்துக் கொண்டிருப்பவை. இதனால் அவைகள் இறக்கும் போதெல்லாம் பெரும்பாலும் யாரும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. இதை விடவும் அவைகள் தங்களை அழிக்கவென கொண்டுவரப்பட்டவையெனவே நினைத்தார்கள்.

அந்த உடல்கள் கிடக்கும் நிலை பார்க்கக்கூடியதாக இல்லை. ஏதோ ஒரு அங்கம் குறைவுபட்டவையாகவே கிடந்தன. வீதியெல்லாம் ரெத்தம், காலில் குருதியை ஒட்டிக் கொள்ளாமல் மறுபக்கம் போகமுடியாதளவு பரவிக்கிடந்தது. ஒரு காலில் எலும்புடன் சதையும் போக தோல் மட்டும் கோது போல கிடந்தது. இது யாரினுடைய காலென்று தெரியவில்லை. கடையின் கண்ணாடியில் சதைத்துண்டொன்று சப்பென்று ஒட்டி கீழே வடிந்து விழுந்தது. குண்டு பிளவு படும் கணத்தில் தள்ளிய காற்றில் சுவர்கள் சரிய ஓட்டுத்துண்டுகள் பறந்தது. இந்த சத்தத்தில் தான் குண்டு வெடித்திருக்கின்றதென தெரிந்தது. அதிர்வு பரவலில் இரண்டு மூன்று கடை தள்ளி நான் அமர்ந்திருந்த சாப்பாட்டுக்கடையின் அலுமாரி திறவுபட்டு, உழுந்து வடையொன்று கீழே விழுந்தது. மேசை மீது தண்ணி நிரப்பி வைக்கப்பட்டிருந்த டம்ளர் நீரைச் சிந்தியது. கல்லுமழை கொட்டுவது போல மேல ஓட்டுத்துண்டுகள் என் தலையில் இறங்கியது. நானிருந்த முன் மேசையில் டீ குடித்துக் கொண்டிருந்த சிலர் எங்கோ மறைந்தார்கள். அந்தக் கடையின் பின்புறம் பற்றி யாதுமே நான் அறிந்திருக்கவில்லை. தெரிந்த முன் வழியால் செல்லவும் பயத்தில் வாயைத்திறந்து முழிபிதுங்க நின்ற நிலை பின்னர் நினைக்கும் போது எனக்குச் சிரிப்பு வந்தது.



அங்கு வேலை செய்த பையன் என்னைக் கூப்பிட்டு கொண்டே வீதியைக் கடக்கமுயல வெடிச்சத்தத்தில் கீழே விழுந்தான். அதன் பிறகும் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தது. கடையில் முதலாளியாக இருந்த அம்மா கத்திக் கொண்டு இருகாதுகளையும் பொத்திக் கொண்டு கீழே குந்தினாள். கடையின் அலுமாரியில் வெடிபட்டு கண்ணாடியும் வடையும் துண்டு துண்டாய்ச் சிதற சுவரில் பட்டு குழியாக்கியது. இப்படி சன்னங்கள் மாறிமாறிப் பாய கீழே குப்புறப்படுத்துக் கொண்டேன். வெளியில் "ஐயோ அம்மா" என்ற சத்தம் வெடிச்சத்தத்துக்குப் போட்டியாக கேட்டுக் கொண்டே இருந்தது. வெளியே முன் கதவால் போனால் நானும் செத்துத்தான் விழ வேண்டும். அப்பா இல்லாத என் அம்மாவை யார் பார்த்துக் கொள்வது. குழந்தை குட்டியோ எனைப்பார்த்திருக்க அவர்கள் கதி. அம்மாவை யாராவது அவளின் தங்கச்சியோ, தம்பியோ பார்த்துக் கொள்ளக் கூடும். எனை எப்படியும் புதைத்துவிடுவார்கள்.

## போகாத உயிரும் தீராத வாழ்க்கையும்

— திசேரா



தவழ்ந்து கொண்டு உட்பக்கம் செல்ல அது குசினிப்புறம், குசினியால் செல்ல கிணறும் மலசலகூடமும் இருந்தது. சுற்றி மதில், பாய்ந்து போக வீட்டுக்காரர்கள் கத்திக்கூச்சல் போட, சத்தத்துக்கு எனை மட்டுமல்லாமல் சத்தம் போட்ட வீட்டுக்காரனையும் என்னவென கேள்வி கூடக் கேட்காமல் சுட்டு விடுவார்கள். தெரியாத பகுதிக்குள் குதிக்கவெண்ணாமல் தடுமாறிய வேளை குசினிக்குள் வரும் கதவால் வந்த சன்னம் இரு தகரங்களையும் துளைந்து கிணற்றுப் பக்கம் போனது. எதிலோ பட்ட சன்னமொன்று வேகமிழந்து எனதருகில் விழ, உடல் எகிறி தலை கதவு நிலையில்பட்டு வலியெடுத்தது. நான் செத்துப் போகத்தான் வேணும், சாவதை விட சாவுக்கு முன்னான, கண் இமையில் ஊசிகுத்தலும், குதிகாலில் ஏறும் ஆணியும், சிரைக்கப்பட்ட மொட்டையும் தான் கண் முன்னே நின்றது. இந்த நிலையில் சுட்டுக்கொன்று போடப்படுவேன். ஆனாலும் தப்பிக்கத்தூண்டியது வாழ்க்கை. குசினிக்குள் என்னை விட உயரமாக சீலிங்குக்கு ஒரு அடி ஒன்றரை அடி குறைவாக விறகு அடுக்கபட்டிருந்த இடம்தான் சரி, சாமான்கள் மூடப்பட்ருந்த சாக்குகள் நிறைந்த இடமோ சரிவராது. விறகுக்கு மேலால் ஏறி சுவர் ஓரமாக குப்புறப்படுத்துக் கொண்டு பெரிய வீரக்கட்டை இரண்டை எனை மறைப்பது மாதிரி வைத்துக் கொண்டேன்.

வெடிச்சத்தம் முடிவதாக இல்லை. வெடிச்சத்தம் நின்ற போது ஏதோ வாகனம் வந்து நின்றது. யார் யாரோ குதிப்பதாய் கேட்டது. வாகனமும் சத்தத்தை நிறுத்திக் கொண்டது. மீண்டும் வெடிச்சத்தம் பொங்கி எழுந்தது. இப்போது வெடிச்சத்தத்துக்கு எதிராகவோ, நிகராகவோ சத்தம் எதுவும் கேட்கவில்லை. சத்தம் போடக்கூடியவர்கள் என்னைப் போல மறைவிடமாக ஒழிந்திருக்கலாம். அல்லாமல் போனால் மௌனமாய் செத்துப் போயிருக்கலாம். இப்போது காலடிச்சத்தமே கூடுதலானது. வெடிகள் ஓய்ந்து போக, ஆரவாரப்பட்டுக் கொண்டு காலடிகள் பரவியது. எனையும் நெருங்குவது போல கடைக்குள் நுழைந்தது. ஏதோ குறியீட்டுப் பாணியில் சம்பாசித்துக் கொண்டு நெருங்கியது. திடீரென "நானில்லய்யா" என்ற பெண்குரல். கடையின் முதலாளியம்மாவாக இருக்கவேண்டும். அவதான் வெடிச்சத்தத்துக்குப் பயந்து கீழே ஒழிச்சிருந்தவ மாட்டித்தாவு பாவம். "எனக்குத் தெரியாது ஐயா" "என்ன விட்டிருங்க ஐயா" "கும்பிடுறன் சாமி", "எனக்குப் புள்ளகுட்டி இருக்குங்க" என்ற அவளது பாசையே விளங்கக் கூடியதாக இருந்தது. அதற்கு அவன்கள் ஏதோ பாசையில் உறுக்கிக் கதைத்தார்கள். "பாவம" என்று அவன் கதைத்திருந்தாலும் தெரியாது ஆனால் அப்படி இருக்க முடியாது. அப்படி அவனுடைய தொனியும் காட்டவில்லை. ஏதோ கெட்ட வார்த்தையில் திட்டியும் இருக்கலாம். கோபத்தில் அவன் கண்ணாடியில் அடித்திருக்க வேண்டும். கண்ணாடிக்கே உரித்தான சத்தத்துடனேயே அது உடைந்து சத்தம் எழுப்பியது.

காலடிகள் இப்போது எனை நெருங்கி வந்தன. தகரத்தால் மறைக்கப்பட்டிருந்த பின் பகுதியில் எட்டிப் பார்த்து திரும்பி ஏதோ சொன்னான். இப்போது தண்ணி நிரப்பப்பட்டிருந்த ரம்மில் தட்டும் சத்தம் கேட்டது. எனதுயிர் எங்கிருந்தோ வந்துவிட்டதாகத் தோன்றியது. மீண்டும் அவளை உலுக்கிக் கேட்டது. அவளால் இப்போது எதையும் கதைக்க முடியாமலும் அடக்கமுடியாமலும் இருந்திக்க வேண்டும். வாய் விட்டு குழறிய சத்தம் மட்டுமே இழுபட்டுக்கொண்டு போனது. இந்த இழுவை அவர்கள் அழைத்துக் கொண்டு செல்லவில்லை. இழுத்துக் கொண்டு செல்கிறார்கள் எனக் காட்டியது. அவளது அழுகை மேலோங்கி இருந்த போது வெடிச்சத்தமொன்று அதைத் தணித்து விட்டது. மீண்டும் காலடிச்சத்தங்களே கேட்டது. இப்போதும் வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டது. என்னைப் பிடித்து இருந்தாலும் இப்படித்தான் இழுத்துக்கொண்டு சுட்டிருப்பானுகள். காலையில் நாய்களோ காகமோ தீனிக்காக சுவைத்திருக்கும். காகங்கள் முன்னமே தலைகளை அடிக்கடி கிழித்துவிட்டுப் பறக்கும். இந்த நேரம் அம்மா ஊர்முழுக்கத் தேடி கதறி இருப்பாள். இனிப்போக முடியாவிட்டாலும் காலையில் ஓடிப்போய் முதல் வேலையாக வெத்திலை வைத்துக் கேட்டிருப்பாள். அவனும் கண்ணை மூடி உயிரோடு தான் இருக்கின்றேனென்று சொல்லியிருப்பான்.

அம்மாவினது கழுத்தில் இருக்கும் கழலை அவளைப் பாவமாகக் காட்டும். முன்னரே ஒபரேசன் பண்ணி இருந்தாலும் அது இப்போது வளர்ந்து போய் இருந்தது. அதேபோல முதலாளிப்பெண்ணுக்கும் கழலை இருந்தது. அவளது உடலை நாய்கள் நக்கி இருக்காது. முதலே நாய்கள் தலைமறைவாகி விடுகின்றன. முதல் இந்த உடுப்பைக்கண்டால் குரைத்துக் கொண்டே இருக்கும். கடிக்கவும் பார்க்கும். குரைப்பது கூட பிரயோசனமில்லாமல் போன போது பயம் கவ்விக்கொண்டதால் அதுகள் மணத்தை நுகர்ந்தே தொலைதூரத்தில் நின்று கொள்கின்றன. ஒன்றிரண்டு வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரைச்சல் கேட்டது. நுளம்புகள் காதுக்குள் பறந்து கத்தியது. கையைத் தூக்கி அடிக்கப் பயமாக இருந்தது. கடிக்கும் போது மெதுவாக அந்த பாகத்தை ஆட்டிக் கொள்ளவே முடிந்தது. ஆனாலும் மீண்டும் வந்து குந்திக்கொண்டு தும்பிக்கையை நீட்டிக் குத்தியது.



□□அவளது அழுகை
மேலோங்கி இருந்த போது வெடிச்சத்தமொன்று
அதைத் தணித்து விட்டது.
மீண்டும் காலடிச்சத்தங்களே கேட்டது.
இப்போதும்
வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டது.
என்னைப் பிடித்து இருந்தாலும் இப்படித்தான்
இழுத்துக்கொண்டு சுட்டிருப்பானுகள்.
காலையில் நாய்களோ காகமோ
தீனிக்காக சுவைத்திருக்கும்.□□

கடைதிறந்து கிடக்கு யாரும் வந்தாலும் தெரியாது. யார் தான் வரப்போறா, சிலநேரம் யாராவது எனைப் போல ஒழிச்சி இருக்கலாம். கையைத் தூக்க விறகுக் கட்டை விழலாம், அதுவே காட்டிக்கொடுத்து விடும் பின்னர்... அவ்வளவுதான் இதையெல்லாம் யோசித்துக் கொண்டே நுளம்புகளை குத்த விட்டு பேசாமல் இருந்தேன். கண்களை மூடும் போதெல்லாம் சுடப்பட்டு யாரோ செத்துக் கிடந்தார்கள். சில வேளைகளில் கடைக்கார அம்மா போலும், முன்மேசையில் இருந்து டீ குடித்துக் கொண்டிருந்த இரண்டு பேர் போலவும் மாறி மாறி வந்தது.

அப்பா செத்துக் கிடந்த போது அம்மா தலையில் அடித்துக் கத்தியது போலவே ஆஸ்பத்திரிக்கு முன் ரோட்டில் சுடப்பட்ட பலர் கிடத்தப்பட்டுக் கிடந்த எனக்கருகில் குந்திக் கொண்டு அம்மா கத்தினாள். அவளுக்கு பக்கத்தில் யார் யாரோ நின்றார்கள். எனக்கருகில் கிடந்த பிணத்தின் பின் மண்டையில் மஞ்சட் கூழ் வடிந்தது. இன்னொன்றுக்கு கண்ணுக்குள்ளால் வெடி பாய்ந்து இருந்தது. சில முண்டங்கள் கூடக்கிடந்தன. இப்படித்தான் தலையை வெட்டி வேலிக் கட்டையில் குத்தி விட்டுச் செல்வார்களாம். தோட்டத்துக்கு "வெருளி" போல இது பயமுறுத்துமாம். பெண்களோ சிறு பிள்ளைகளோ, சில ஆண்களும் கூட நினைவழியும் வரை அப்பக்கம் போகமாட்டார்களாம். திடீரென என்தலை கூட வேலிகட்டையில் குத்தி இருந்தது. கண்திறந்தே கிடக்க கன்னம் ஊதி அழகாக இருந்தேன். இந்த முகத்துடன் பெண் பார்க்கப் போயிருந்தால் திருமாண மாகியிருக்கலாம். சிலவேளை காதலித்துக் கொண்டாவது இருந்திருக்கலாம். அவளும் நானும் கண்களால் பேசிக் கொண்டு மௌனத்தை மொழியாக்கி எத்தனை கவிதைகள் எழுதியிருப்பேன். ஆனால் இந்த நிலையில் அவளது கதி. கவலைக்குள் பயம் பிடித்துக்கொள்ள நுளம்பு குத்தியது.

காகங்களும், குருவிகளும் கத்திக்கொண்டு எங்கெல்லாமோ பறந்து பலரைக் கூட்டிக் கத்தியது. எனக்கு மட்டும் பயம் தெளிந்தபாடில்லை எலிமூத்திர மடித்த நாத்தம் தடவும் போது தான் தெரிந்தது. நான் செத்துக் கிடந்தபோதோ. எனது தலை வேலிக் கட்டையில் குத்தப்பட்ட போதோ பயத்தில் ஆடை நனைந்திருக்க வேண்டும். வயிற்றுள் பசி கத்தியது. வாங்கி மேசையில் வைத்திருந்த டீயைக் குடிக்க முன்னமேயே அது நிகழ்ந்து விட்டது. வெடிப்பட்ட வடையை நினைக்கும் போது பசி தொலைந்து போக பயந்தான் கவ்வியது. பசியைத் தாங்க முடியாமல் கத்த சுடச்சுட மரவள்ளிக் கிழங்கையும், சம்பலையும் தின்று விட்டுப் படுத்த அந்த நாட்களிலெல்லாம் பசி அடக்க முடியாததாகவே இருந்தது. அடியில்லாத தகர டின்னை தேடி எடுத்து மார்கழி வெள்ளத்துக்குள் இறங்கி மின்னிக் கண்ணைப் பார்த்து டின்னை வைத்து கைக்குள்ளால் அள்ளி எடுத்து மீன் வளர்க்கும் ஆசையில் விளையாடும் போது கூட பசிக்கு ஓடி வந்து மரவள்ளிக்கிழங்கை தின்று அதுவும் கிடைக்காவிட்டால் தண்ணியைக் குடித்துவிட்டு குப்புறப் படுத்து பசியை அடக்கிய பொழுதுகளிலும் சோறு தெய்வமாய்ப் போன காலத் தை விட இப்போதெல்லாம் உயிரே தெய்வமாகிப் போனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கை குரூரமானதென
மறுபடி மறுபடி
நிரூபிக்கப்பட்டாலும்
வாழ்வின் மீதான காதலை
யாராலும் உதறிவிட
முடிவதில்லை."

இந்தக் கவிதை தான் ஞாபகத்துள் இருந்தது. அம்மா மடிக்குள் படுத்து பசி பசி எனக்கத்திக் கொண்டு மண்ணைக் காலால் உதைக்க வேண்டும் போல இருந்தது. விறகுக்கட்டை ஒன்று கூட கீழே விழுந்தது.

அடுக்கிலிருந்து மெல்ல இறங்கி நிற்கும் போது தலை சுற்றிக் கொண்டு வந்தது. இருண்ட மேகம் கண்ணுக்குள்ளால் பறந்து சுயமாக நிற்கவெண்ணாமல் விறகடுக்கில் சாய்ந்து நின்றேன். வயிறுக்கு ஏதாவது தேவைப்பட்டது. எனக்கெதிரில் ரம் நிரம்ப தண்ணீர் இருந்தது. தண்ணீருக்குள் வாயை வைத்து உறிஞ்சினேன் அப்படியே தலையையும் அதற்குள் முக்கி எடுக்க நன்றாக இருந்தது. தலைநீர் உடம்பில்படும் போது உடல் ஒருதரம் சிலிர்த்துக் கொண்டது. இன்னமும் முன்னால் போக பயமாகவே கிடந்தது. பின்பகுதியில் ஒருபக்கசுவரால் ஏறி குதிக்க எண்ணி கால் இந்தப் பக்கம் தொங்க தலையை அந்த பக்கமாக நீட்டி உடம்பை மதிலில் வைத்துக் கொண்டு இருக்கும் போது அந்த வீட்டுக் கிழவன் ஏதேச்சையாக வெளியே வந்தவன் என்னென்னமோ சொல்லி திட்டினான். பசி காதை அடைத்திருந்ததனால் எதுவும் கேட்காமல் போனது. எதையும் சொல்லிக் கொள்ளவும் முடியாமல் நா குடலுக்குள் புதைந்து போனது.

இதற்கு மேல் உயிரைப்பெரிதாக நினைக்கமுடியாமல் வெளியே பசி, பய வெறியுடன் நெஞ்சை குண்டு துளைக்காத கவசம் போலாக்கி நடந்தேன். சாதாரணத்தையும் விட குறைவாகவே நடமாட்டம் இருந்தது. குண்டு வெடிப்புத்தான் காரணமாகப்பட்டது. வீட்டுக்குத்தான் நடக்க வேண்டும். நடந்து கொண்டே போக முடியாத தூரம். பின்னுக்குத் திரும்ப ஆயுதங்களுடன் சந்தியில் ரெண்டு, மூன்று உருவம் நின்றது. முன்னுக்கு திரும்பி ஒரு அடி எடுத்து வைக்கவும "டும" பெரிய சத்தமொன்று பசி அடைத்திருந்த காதைத்துளைத்து செவிப்பறையையும் கிழித்து என்னைத் தூக்கிப்போட்டது.

கண்ணை திறக்க முடியாமல் இருந்தது. இமைகள் நடு நடுங்கி மேலே விரிய அம்மா தெரிந்தாள் இன்னமும் நாக்கு வெளியே வரவில்லை. புதைந்து தான் கிடந்தது. நாக்கை, வெளியே இழுத்து விடுவோமென கையைத்தூக்க முயல அம்மா என்னமோ சொல்லி கையைப்பிடித்துக் கொண்டாள். கையை ஆட்ட வேண்டாமென்கிறாள் போல எனக்கு மேலால "சேலைன" போத்தலொன்று முடியும் தறுவாயில் தொங்கியது. அம்மா கண்ணும் சிவந்து தான் இருந்தது. கால்மாட்டில் இன்னும் பலர் நின்றிருந்தார்கள். அவர்கள் எல்லோரை கண்ட போதுதான் பயம் போனது. நாக்கு ஒருவாறு இழுபட்டு மேலே வந்தது. மெல்லமாக "பசி" என்றேன். அம்மா அணைத்தாள். தலையைத் தடவிக் கொடுத்தாள். உயிர்தலைக்கூடாக இறங்கி பரவி உடல் சிலிர்த்தது. ○



நிலவு உடைந்து போய்
அழுது வடிந்து உறைந்தது
ஆள்காட்டியின் அழுகையூடு இயைந்தவாறு.

எங்களின் ஊரின்
முகாரி மரங்கள் எல்லாம்
தொங்கிற்று இலையோடு இலையாக
கிளைக்குப் பாரமாயிற்று

சருகுகள் தேங்கிய தெருவெல்லாம்
சாவின் வாடையைக் கிளர்த்தி
சுடுகாட்டைப் படமாக்கி
இதயத்தில் ஆணி அறைந்தது.

எட்டவான வேட்டோசைகள்
ஒன்றிரண்டு தவிர
சூனியத்தில் திசைபகர ஏதுமற்று
கனத்த காலடிகள்
சருகுகளையும்
சிறு சுள்ளிகளையும்
நசித்து பிசாசுகள் தூஷணையோடு
உலவுகின்றன.
பிறமொழிகளைத் தெளித்தபடி
காற்றினைக் கறைப்படுத்தி

கைசரவணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சூழலில் தமிழ்ப் பெண்களுக்கான அரசியலும் அமைப்பும்

**சி.அ.யோதிலிங்கம்**

தமிழ்த்தேசிய அரசியல் இன்று உள்நாட்டுப்பிரச்சினை என்ற கட்டத்தினைத் தாண்டி, சர்வதேச அரங்கிற்கு சென்று விட்டது. மேலைத்தேச நாடுகள் இதனை எப்படித் தீர்ப்பது என தமது மூளையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கின்றன. பிரச்சினையின் ஆழ அகலத்தினைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காக பிரச்சினை பற்றிய தேடல்களிலும் இறங்கியுள்ளன. இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் உட்பட பல ஐரோப்பிய தூதுவராலயங்கள் தங்களின் தேடல்களுக்காக தமிழ் நூல்களை கொள்வனவு செய்யும் பணிகளிலும் கூட இறங்கியுள்ளன. பிரச்சினையின் சமூகத்தளத்தினை அறிந்து கொள்வதற்காக வெறுமனவே அரசியல் நூல்கள் மட்டும் வாங்குவதில் கவனம் செலுத்தாமல் கலை, இலக்கியம், சமூகம் தொடர்பாக வெளிவந்த பல்வேறு நூல்கள் தொடர்பாகவும் கவனத்தை குவித்து வருகின்றன.

எனவே இத்தகைய செயற்பாடுகள் காலம் தாமதித்தாவது தமிழ்த் தேசிய அரசியல், ஒரு தீர்வினை நோக்கி நகரும் என்பதையே வெளிக்காட்டுகின்றது.

இந்நிலையில் தான் தமிழ்த் தேசிய அரசியலுக்கான தீர்வில் தமிழ்ப் பெண்களின் இடம் யாது? என்ற கேள்வி எழுகின்றது. துரதிஸ்டவசமாக தமிழ்ப் பெண்களின் அரசியல் பற்றிப் பேசும் புலமைநிலைப்பட்ட வெளிப்பாடுகள் போதியளவிற்கு வெளிவரவில்லை என்பது இங்கு மிகப் பெரிய குறைபாடாக உள்ளது. இந்தப் பற்றாக்குறைவினால் ஏற்பட்ட மிகப் பெரிய விளைவு தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்ப் பெண்களுக்கான அரசியல் போதியளவு உள்வீர்க்கப்படாமையாகும். இன்று அரங்கில் பெண்ணிலைவாதம் பற்றிப் பேசுகின்றவர்கள் கூட இவ்விடயத்தை பேசாப்பொருளாக வைத்திருக்கவே தலைப்படுகின்றனர். இதனால் தமிழ்த் தேசிய அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்ற இன அரசியலின் மூன்றாவது கட்டத்திற்கு சென்று கொண்டிருக்கின்ற போது தமிழ்ப் பெண்களின் அரசியல் என்பது இலங்கையர் என்ற அடையாளத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றது.

இதுபற்றிப் பேசுகின்ற போது தமிழ்ப்பெண்களின் அரசியல் வரலாறு பற்றிய தெளிவையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1949ம் ஆண்டு தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு தமிழர் அரசியலின் மூன்றாவது கட்டமும், இனஅரசியலின் இரண்டாவது கட்டமும் ஆரம்பிக்கப்படும் வரை தமிழ்ப் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான சந்தர்பங்கள் வழங்கப்படவில்லை. டொனமூர் அரசியல் திட்ட உருவாக்க காலத்தில் கொழும்பில் வாழும் ஒரு சில மேட்டுக் குடிப் பெண்கள் மட்டும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டபோது பெண்களுக்கும் வாக்குரிமை கோரி டொனமூர் குழுவினை சந்தித்த குழுவில் டாக்டர் மேரி ரட்ணம், திருமதி.ஈ.ஆர்.தம்பிமுத்து, திருமதி சிறீ பத்மநாதன் போன்ற தமிழ்ப் பெண்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் அனைவரும் அக்கால கட்டத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய தமிழ் அரசியல் வாதிகளின் மனைவிமார்கள் ஆவர்.

இவர்களைத்தவிர திருமதி. நேசம் சரவணமுத்து சிறிதுகாலம் டொனமூர் கால அரசாங்க சபையில் கொழும்பு வடக்கு பிரதிநிதியாக இருந்திருக்கின்றார். இவ்வாறு இலங்கையர் என்ற அடையாளத்துடன் தொழிற்பட்ட அரசியலில் பெண்கள் சிலர் பங்குபற்றியிருந்தார்களே தவிர அக்காலத்தில் எழுச்சியடைந்த இன அரசியலில் பங்கு பற்றும் நிலை இருக்கவில்லை. இன அரசியலுக்கு இக்காலகட்டத்தில் தலைமைதாங்கிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பெண்களை அரசியல் நடவடிக்கைகளில் இணைப்பதில் எந்த வித அக்கறையினையும் காட்டவில்லை.

1949ம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் தோற்றத்துடன் இப்போக்கில் மாற்றம் ஏற்பட்டது. தமிழ்தேசிய அரசியலில் பெண்களையும் இணைக்கும் நிலை ஏற்பட்டது. இங்கு தமிழ்த் தேசிய அரசியல் கவனத்தில் எடுக்கப்பட்டதே தவிர அதற்குள் பெண்களின் அரசியலும் அடங்கவேண்டும் என்னும் விடயம் எந்தவித கவனத்திற்கும் உள்ளாகவில்லை. சர்வதேச ரீதியாக வளர்ந்திருந்த பெண் விடுதலைக் கருத்துக்களோ குறைந்த பட்சம் தென் இலங்கையில் வளர்ந்திருந்த பெண்ணிலைவாத கருத்துக்களோ தமிழர் அரசியலில் உணரும்நிலைவரவில்லை. அவ்வளவிற்கு தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் மூடுண்ட ஒரு சமூகப் பிரிவினராகவே வைக்கப்பட்டனர். எனினும் தமிழ்த் தேசிய அரசியலிலாவது அவர்கள் பங்குபற்றச் சந்தர்ப்பம் அளித்தமை முற்போக்கான அம்சமாக இருந்தது.

தமிழரசுகட்சியில் பெண்களுக்கென ஒரு தனியான பிரிவை உருவாக்காத நிலையில் கூட பெண்கள் நூற்றுக்கணக்கில் தமிழரசுக்கட்சியின் போராட்டத்தில் பங்குபற்றினர். 1957ம் ஆண்டு ஏப்பிரலில் சுதந்திரத்தினைத் துக்க தினமாக அறிவித்து சத்தியாக்கிரம் செய்த போது பெண்கள் பலர் அதில் முன்னணியில் நின்றனர். யாழ்நகரில் கோமதி வன்னிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம் தலைமையிலான குழுவினர் திறக்கப்பட்ட கடைகளுக்கு முன்னால் சத்தியாக்கிரகம் செய்து அவற்றை மூடவைத்தனர். காரைநகரில் திருமதி நாகம்மா — வேலுப்பிள்ளை தலைமையிலான குழுவினர் பஸ்வண்டிகளின் முன்னால் படுத்து பஸ்களை நகரவிடாது சத்தியாக்கிரகம் செய்தனர். திருமதி. மங்கயற்கரசி அமிர்தலிங்கம், திருமதி கலா தம்பிமுத்து போன்றோர் தமிழரசுக்கட்சியின் பீரங்கிப் பேச்சாளர்களாக செயற்பட்டனர். ஆயிரக்கணக்கான பெண்களின் வாக்குகளைப் பெற்று கொடுத்த இவர்களைக் கூட பாராளுமன்ற உறுப்பினர்களாக்குவதற்கு கட்சி ஒருபோதும் முன்வரவில்லை.

தமிழரசுக்கட்சி போய் தமிழர் விடுதலைக் கூட்டணி வந்த போது அதன் கிளை அமைப்பாக தமிழீழ மகளிர் அணி எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. உரும்பிராய் சிவகுமாரனின் தாயார் அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைவராகவும், திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம் செயலாளராகவும் பதவி வகித்தனர்.



இலங்கை மக்கள் இனரீதியாக பிளவுண்டு இன அரசியல் வளர்ச்சிடைந்த பின்னர் பொதுவான பெண்கள் அமைப்பினூடாக தமிழ்ப்பெண்கள் தங்களது அரசியலை பெற்றுவிட முடியாது என்பதனையே கூறவருகின்றேன்.

இவற்றிற்கு புறம்பாக எழுபதுகளில் தமிழ் இளைஞர் அமைப்புக்கள் உருவாகின. தமிழ் மாணவர்கள் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி என்பன உருவாக்கப்பட்டன. இவற்றில் பெண்களும் இணைக்கப்பட்டனர். எனினும் பெண்கள் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. முக்கிய பதவிகளிலும் பெண்கள் சேர்க்கப்படவில்லை.

1980ம்களில் இயக்கங்கள் எழுச்சியடைந்த போது இப்போக்கில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. சமூகமாற்றச் சிந்தனையையும் தங்கள் அரசியலில் இணைத்துக் கொண்ட EPRLF, EROS, NLFT போன்ற அமைப்புகள் பெண்கள் அரசியலுக்கும் முன்னுரிமை கொடுத்தனர். பெண்களின் அரசியல் எவ்வாறு இருக்க வேண்டும், தமிழ்த்தேசிய அரசியலில் அதன் பாத்திரம் என்ன? அமைப்புத்துறையில் பெண்களின் பங்கு யாது? போன்ற விடயங்கள் தொடர்பாக விவாதங்கள் களத்திற்கு வந்தன. இயக்கங்களுக்கு புறம்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிராமீய உழைப்பாளர் சங்கம் போன்றனவும் பெண்களின் அரசியல் தொடர்பான கருத்துருவாக்கங்களில் பங்குபற்றின. சக்தி, செந்தணல், போன்ற பெண்களின் சஞ்சிகைகளும் வெளிவந்தன. 1986க்கு பின்னர் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புக்கள் களத்தில் செயற்பட முடியாத நிலையில் மீண்டும் முயற்சிகள் எல்லாம் பூச்சிய நிலைக்கு வந்தன.

இதன் பின்னர் பெண்கள் பற்றிய விவாதங்கள் கொழும்பிலும் புலம்பெயர் நாடுகளிலும் பேசுபொருளாக இருந்தது. இருதளங்களிலும் பெண்கள் பற்றிய செயற்பாடுகள் முன்னெடுத்தவர்கள் தமிழ்ச் சூழலில் பெண்களின் அரசியல் என்கின்ற விடயத்தை தவிர மீதியான விடயங்கள் எல்லாவற்றையும் பற்றி நாட்கணக்காக விவாதித்தனர். இனப்பிரச்சினை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு தமிழ்ப் பெண்கள் தொடர்பாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கக் கூட ஒரு பெண்கள் அமைப்பும் முற்படாதது மிகவும் சோகமானதாக இருந்தது.

இவ்விருதளங்களிலும் செயற்பட்ட பெண்களிடம் இன்றைய தமிழ்ச் சூழலில் பெண்களுக்கான அரசியலையும், அதனை முன்னெடுக்கின்ற அமைப்பையும் பற்றி பிரக்ஞை பூர்வமான எந்த கருத்தும் இல்லாததும் தான் மிகவும் கவலைக்குரிய விடயம்.

தென்இலங்கையில் செயற்பட்டவர்கள் மத்தியில் நாம் தமிழர் என்பதை விட நாம் இலங்கையர் என்ற அடையாளச் சிந்தனையே மேலாதிக்கம் பெற்றநிலையில் உள்ளது. தமிழ்ச்சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளும் இலங்கையர் என்ற மையச் சிந்தனையில் இருந்து விலகி தமிழர் என்ற அடையாளத்தினூடாக தமது அரசியலை முன்னெடுக்கும் போது இவர்கள் இப்போதும் இலங்கைப் பெண்கள் என்ற அடையாளத்தினூடாக தமது அபிலாசைகளை முன்னெடுக்கலாம் என கனவு காணகின்றார்கள். இதனால்தான் தமிழ்ச் சூழலில் பெண்களுக்கான அரசியலைப் பற்றியோ, தமிழ்த் தேசிய அரசியலில் தங்களின் அரசியலோடு ஊடுருவது பற்றியோ அவர்களால் சிந்திக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களாக இருப்பதனால் தமிழ்த் தேசிய அரசியலுக்கு தமது பங்களிப்பினை செய்ய வேண்டும் என்ற கடப்பாடு தமிழ்ப் பெண்களுக்கும் உள்ளது என்ற விடயத்திற்கு அப்பால் பெண்நிலைவாத நிலைனின்று நோக்குகின்ற போது கூட தமிழர்கள் மத்தியில் கட்டப்படபோகின்ற அதிகார அமைப்பில் இருந்துதான் தங்களுக்கான உரிமைகளை பெண்கள் பெற வேண்டியிருக்கின்றார்கள் என்பது இங்கு முக்கியமான விடமாகும். தமிழ்த் தேசிய அரசியலில் பெண்களின் அரசியல் ஊடுருவுகின்ற போதே இது சாத்தியமாக இருக்கும். பெண்கள் தமக்கென அரசியல் கருத்து நிலைகள் உருவாக்கி, அதனை முன்னெடுக்கும் அமைப்புக்களை உருவாக்கி ஒரு வலிமையான நிலையில் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் ஊடுருவுகின்ற போதே இவை நடைமுறையில் வெற்றி பெறக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படும்.

இங்கு நான் தமிழ்ப் பெண்களுக்கு தனியான அரசியலும், அமைப்பும் தேவை என வற்புறுத்துவதற்காக ஏனைய இனப் பெண்களோடு ஐக்கிமே கூடாது எனக் கூறவரவில்லை. இலங்கை மக்கள் இனரீதியாக பிளவுண்டு இன அரசியல் வளர்ச்சிடைந்த பின்னர் பொதுவான பெண்கள் அமைப்பினூடாக தமிழ்ப்பெண்கள் தங்களது அரசியலை பெற்றுவிட முடியாது என்பதனையே கூறவருகின்றேன். இங்கு சிங்களப் பெண்கள் தமிழர் என்ற அடையாளத்திற்காக தமிழ்ப் பெண்கள் போன்று ஒடுக்கப்படும் நிலையை எதிர்நோக்குவதில்லை என்பதனை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தவிர தமிழ்பெண்கள் தாங்கள் ஒரு அமைப்பாக இருந்து பெண்களின் பொதுவான பிரச்சினைகளுக்காக ஏனைய இனப்பெண்களோடு ஐக்கிய முன்னணி அமைத்து இணைந்து போராடுவது தொடர்பாக எனக்கு எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. இச்செயற்பாடு இலங்கையிலுள்ள ஏனைய இனப் பெண்களோடு மட்டுமல்ல உலகெல்லாம் பரந்து செயற்படும் பெண்களுடன் கூட இவ்வாறான ஐக்கிய முன்னணி அவசியம். இவ் ஐக்கியச் செயற்பாடுகள் தமிழ்ப் பெண்களின் அரசியலை சர்வதேசமயப்படுத்தவும் உதவும்.



புலம்பெயர்நாடுகளில் வாழும் பெண்களைப் பொறுத்தவரை இலங்கையில் வாழும் பெண்களோடு ஒப்பிடுகின்ற போது ஜனநாயக ரீதியான நெருக்கடிகள் குறைவு. ஆனால் அவர்கள் கூட இதுவிடயத்தில் போதிய அக்கறை எடுக்கவில்லை. வருடாவருடம் அவர்களால் நடாத்தப்படும் பெண்கள் சந்திப்பில் கூட இதுபற்றிய விவாதங்கள் நடைபெற்றதாக தகவல்கள் கிடைக்கவில்லை.

பெண்களுக்கான அரசியலை உருவாக்கும் போது மேலைத்தேச பெண்ணிய சிந்தனைகளை அப்படியே பிரயோகிப்பதை விட எங்களுக்கேற்ற விதத்தில் அவற்றினை மாற்றி பிரயோகிப்பதே சிறந்தது என்பது எனது அபிப்பிராயம். இங்கும் எமது வேரில் நிற்றல் அவசியம். எமது மரபில் பெண்கள் பற்றிய முற்போக்கான சிந்தனைகள் பல உள்ளன. அவற்றினைத்திரட்டி அவற்றின் வேரில் நின்று கொண்டு மேலைத்தேச சிந்தனைகளில் எமது சூழலுக்கு பொருத்தமானவற்றையும் இணைத்து பெண்களுக்கான அரசியலை உருவாக்குவது சிறந்தது என்பதே என் அபிப்பிராயம். இது தொடர்பாக மாறுபட்ட கருத்துநிலைகள் இருக்கலாம்.

அமைப்புத்துறையைப் பொறுத்தவரை தமிழ்ச் சமூகத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் அமைப்பினை உருவாக்குதல் வேண்டும். குறிப்பாக தமிழ்ச் சூழலில் விளிம்பு நிலையில் இருக்கும் சாதியால் தாழ்த்தப்பட்ட பெண்கள், குடா நாட்டைச் சாராத பெண்கள், தமிழர் தாயகத்தில் வாழும் இந்திய வம்சாவழிப் பெண்கள் போன்றோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கும் வழிவகைகளை உருவாக்க வேண்டும்.

இது விடயத்தில் மிகுந்த கவனம் தேவை. தமிழ்ச் சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினர் பெண்களைப் புறக்கணிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை வைக்கும் தமிழ்ப் பெண்கள் தங்களுக்குள்ளே விளிம்பு நிலைப் பிரிவினரை புறக்கணிப்பதாக இருக்கக் கூடாது.

இறுதியாக. பெண்கள் தொடர்பான கருத்துகளையும், எனது சில அவதானங்களையும் இது வரை கூறியுள்ளேன். இவை முடிந்த முடிவுகளல்ல. இதுபற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். பாந்து பட்ட வகையில் விவாதங்களை நடாத்தும் போதே சரியான கருத்து நிலைகளை எம்மால் உருவாக்கமுடியும். இந்த வகையில் ஒரு விவாதத்திற்கான தொடக்கமாக எனது கருத்துக்களை கொள்ளுமாறு பெண்கள் அரசியலில் அக்கறையுள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இது விடயத்தில் மீண்டும் ஒரு உண்மையை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். தமிழ்ப் பெண்களின் அரசியல் தொடர்பாக நாம் எந்த வித கருத்துக்களையும் கூறலாம். ஆனால் இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்கள் தமிழ்ப் பெண்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றேன் இத்துயரம்

இன்றேன் இத்துயரம்
இத்துயரத்தின் ஆணிவேர் எங்கிருந்து எங்கு
பொய்யென ஒன்றையும்
மெய் என ஒன்றையும்
உயிர்த்திருக்கும் பொம்மைகளாய் செய்து
தரப்பட்ட பால்யம் நோக்கி
அவன் கால்கள் நடந்தன.

இன்னும் வேர்கள் இறங்கிக் கொண்டே
சென்றன.
எங்கு ஆரம்பிப்பது
எங்கு முடிவுறுத்துவது
பாதாளத்தை நோக்கி அவன் பன்றியாகினான்
வான் முகட்டை நோக்கி அவன் பறவையாகினான்.

ஏய், பொய் சொல்லிப் போன தாளம் பூவே,
அழகிய கண்ணாடி இலட்சியங்களின்
நீரோடைக்குள்
ஒரு ஆணிவேர் சிரித்ததே,
உனக்குக் கேட்டதா
பற்றிப் பிடித்து
பலமாக இழுத்தும்
பாதிதான் கைக்குள் பட்டது.
மீதியைத் தேடி மீண்டும் மீண்டும்
தோண்டியதில்
நிலம் கூட வலித்துக் கதறியது.

மேல் நோக்கி உயரும் மணிமுடியுடன்
கீழ் நோக்கி தாளும் வேர்களுடன்
உயர்ந்திருக்கும் அவன் வாழ்வின்
இருப்பு நோக்கி
வீசிய சொற்கள் யாவும்
வெறும் சருகுகளாகி கீழே வீழட்டும்.

உதடு கிழிந்து கசிந்தது குருதி.
உணவுத் தட்டின் வருகையை
பதிவு செய்த அவளது வழமையான ஒப்பம்
அம்மேசையில் இன்னும் இருந்தது
ஒரு கத்திபோல.
கண்ணீர் நிறைந்த இரண்டு
கண்ணாடிக் குவளைகளுடன்.

என் செய,
கூடிக்குழுமியிருந்த சிட்டுக்குருவிகள் யாவும்
திடீரென வீழ்ந்த கல்லொன்றினால்
பெயர்ந்த அத்தனித்த வெற்றிடத்தில்
வீழ்ந்து கிடந்தான்.
இறுதியில,
இக்கவிதையின் மெல்லிய மெத்தை விரிப்பில்
அவன் படுத்துறங்குகையில்
பாதியில் நின்று போன அக்கனவு
மீள விரிகிறது.

கல்லூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சீயம் – பின்நவீனத்துவம் சில முரண்பாடுகள், முரண்நகைகள்.

மு. பொன்னம்பலம்

மேற்குலக மெய்யியலாளரின் கண்டுபிடிப்பாகப் பேசப்படும் அனேக மெய்யியற் சிந்தனைகளின் தோற்றம் பற்றித் தீவிரமாக ஆய்வுக்கெடுத்துக் கொண்டால் அவற்றின் மூலக் கூறுகள் ஏதோ விதத்தில் கிழக்கத்தேயச் சிந்தனைகளோடு தொடர்புற்றிருப்பதைக் காணலாம். ஆரம்பக் கிரேக்க சிந்தனையாளர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் ஹெராகிளிற்றஸின் நெருப்பை உவமைப்படுத்தி, நித்தியமாற்றம் (Becoming) பற்றிக் கூறும் சிந்தனைக்கும் இவருக்கு முன்னரே இவ்வாறான மாற்றம் பற்றி விளக்கிய பௌத்த சிந்தனைக்கும் வித்தியாசமில்லை எனலாம். இதேபோலவே பிளேட்டோ கூறும் இலட்சிய கருத்து வடிவங்களுக்கும் அதன் பிரதிகளான யதார்த்த போலி வடிவங்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையை வேதாந்த சிந்தனையில் காணலாம். இன்னும் ஸ்பினோசா, கான்ட், பேர்க்லி, டேகார்டே என்று ஓடிவரும் மேற்குலகச் சிந்தனையாளர்களின் கருத்துலகில் கிழக்குத்தேய வேதாந்த அல்லது பௌத்தச் சிந்தனைகளின் கீற்றுக்கள் படிந்திருப்பதைக் காணலாம். ஏன் இன்றைய பின் நவீனத்துவ சிந்தனைய கூட இதே கிழக்கத் தேயச் சிந்தனையின் அருட்டலின் இன்னொருவகை வெளிக் காட்டலே எனலாம். இது மட்டுமல்ல மார்க்சீயத்தின் உயிர்நாடியாக விளங்கும் உலகின் சகல சமூக, அரசியல், பொருளாதார இயக்கம் என்று வரும் இன்னோரன்ன பல்வகைப்பட்ட இயக்கங்களை விளக்கவும் யாந்திரீக பொதுவுடைமையிலிருந்து மார்க்சீயப் பொதுவுடைமையை வித்தியாசப்படுத்தவும் பயன்படுத்தப்படும் முக்கிய கோட்பாடான இயங்கியலே கிழக்கத்தேயச் சிந்தனையின் செல்வாக்கிற்குட்பட்டது என்றால் மிகையாகாது.

> யாந்திரீகப் பொதுவுடைமையிலிருந்து மார்க்சீயப் பொதுவுடைமையை வித்தியாசப்படுத்துவது அதன் இயக்கவியல் பார்வையே. எனினும் இயக்கவியல் விஞ்ஞானப் பார்வையின் வழி நின்று வரலாற்று ஓட்டத்தை மார்க்ஸ் வரையறுத்து வைத்து சொன்ன எதிர்வு கூறல்கள் ஒன்றும் அவர் கூறியதற்கொப்ப நடைபெறவில்லை.

ஹெகல் ஒருவகை (மிஸ்ரிக்காக) ஆத்ம விசாரியாக இருந்தபோது இந்த இயங்கியல் தரிசனம் அவருக்குச் சித்தித்ததாகவும் அதன் வெளிச்சத்தில் அவர் உலக வரலாற்றை விளக்க முயன்றதையும் நாம் அறிவோம். இவ்வாறான ஹெகலின் மாற்றத்திற்கு கீழைத்தேய பௌத்த, உபநிஷத், சூபிஸ சிந்தனைகளே காரணமாய் இருந்திருக்கவேண்டும் என்பதற்கு, இக்கால கட்டத்திற்கும் அதற்கு முன்னரும் கீழைத்தேய சிந்தனைகள் குறிப்பாக உபநிஷத், பௌத்த சிந்தனைகள் – ஜேர்மன் நாட்டுப் புத்திஜீவிகளைப் பாதித்ததுபோல் வேறெவரையும் பாதிக்கவில்லை என்கிற உண்மையிலிருந்து அறியலாம். சுவாமி விவேகானந்தரை தன் இல்லத்திற்கு அழைத்து உபசரித்த போல் டௌஸன் போன்ற கீழைத்தேய சிந்தனை மரபில் ஊறிய ஜேர்மானிய அறிஞர்கள் இதற்குக் காரணமாய் இருந்துள்ளனர் என்பதும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரத்தக்கது.

ஹேகலின் கண்டு பிடிப்பாகப் போற்றப்படும் இயக்கவியல் என்பது கீழைத்தேய சூபிஸ பௌத்த, வேதாந்த சிந்தனைகளில் மிகச் சர்வசாதாரணமாகப் பயின்று வரும் ஒன்றாகும். இவ்வாறு இயங்கியல் இவற்றில் பயின்று வருவதற்குரிய காரணம், இவை அகப்பண்பாட்டை அழுத்தும் ஆத்மவிசாரமாக இருப்பதே. ஆத்ம விசாரத்தின் உயிர்த்துவமாக இருப்பது இந்த இயங்கியல் முறைமையே. சிவம் – சக்தி என்று வரும் கருத்து – எதிர்க்கருத்து அர்த்தநாரீஸ் வாரில் இணைவுறுவதும், 'நேத்தி நேத்தி' என்று எல்லாவற்றையும் நிராகரிக்கச் சொல்லும் வேதாந்தவிசாரம், 'இற்றி இற்றி' என்று நிராகரித்த சகலவற்றையும் ஏற்றுக் கொண்டு நிர்விகல்பதில் முடிவுறுவதும், தீவிர உடல் ஒறுப்பு என்னும் கருத்தையும் தீவிர உடல் போகம் என்னும் எதிர்க்கருத்தையும் நடுவழியில் (மாத்தியமிக்க) இணைவுறச் செய்யும் பௌத்தமும், இன்னும் 'நிர்வாணமே சம்சாரம், சம்சாரமே நிர்வாணம்' என்று இதையே நாகர் ஜுனா மிகத்தீவிரமாக ஒன்றுக்குள் ஒன்றைப் புகுத்தி, இரண்டையும் நடுவழியில் இணைவுறச் செய்வதும் நான் ஏற்கனவே கூறியதுபோல் கீழைத்தேய ஆத்மவிசார அகப்பண்பாட்டில் இயக்கவியல் என்பது எவ்வளவு அனாயசயமாக பயின்று வருகிறதென்பதை காட்டுவதாய் உள்ளது.

இந்த வெளிச்சத்தில் பார்க்கும் போது இயக்கவியலின் பிதாமகர் எனப் போற்றப்படும் மேற்குலக ஹெகலின் பங்களிப்பு மிக அற்பமானதாகவே தெரிய வரும். எவ்வாறு பிராய்டின் மேல்மன, அடிமன உளவியல் கண்டுபிடிப்புகள் பதஞ்சலி, கபிலர் போன்றவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் சம்பந்தப்பட்ட யோக ஆய்வுகளின் முன்னே குருட்டொளி காட்டுவனவாய் இருக்குமோ அவ்வாறே ஹெகலின் இயங்கியலும் காணப்படும்.

ஆனால் இங்கே ஒரு முக்கிய வித்தியாசம் ஒன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது கீழைத்துதேய ஞானிகளால் ஆத்ம விசார அகப்பண்பாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட தர்க்கவியல், விசாரமுறைமைகள் யாவும் மேற்குலகிற்குக் கைமாற்றப்படும்போது, அவை சமூக, அரசியல், பொருளாதார, வரலாறு சம்பந்தப்பட்ட புற உலக இயக்கங்கள் மேல் பிரயோகப்படுத்தப்பட்டன என்பதே அது. இது பல சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் காரணமாய் இருந்தன என்று சொல்லலாம். இடம் தவறிப்பாவிக்கப்படும் (Misplaced) தர்க்கங்கள், ஒன்றின் ஒழுங்குமுறை பேணப்படாத விவாதங்கள் போன்றவற்றால் ஏற்படுத்தப்படும் சிக்கல்களும் முரண்பாடுகளும் என்றே இவற்றை நாம் கூறவேண்டும். உலக அறிவே தன்னிலேயே முழுமையுறுவதாகவும் தன் பிறஷ்ஷிய நாட்டிலேயே அதன் புறவளர்ச்சி பூரணப்படுவதாகவும் ஹெல் கூறுவது போன்ற சில முன்வைப்புகள் இத்தகைய ஒழுங்குமுறை மீறலின் விளைவா? பின் நவீனத்துவம் இதற்கு இன்னொரு உதாரணம்.

## 2

யாந்திரீகப் பொதுவுடைமையிலிருந்து மார்க்சீயப் பொதுவுடையயை வித்தியாசப்படுத்துவது அதன் இயக்கவியல் பார்வையே. எனினும் இயக்கவியல் விஞ்ஞானப் பார்வையின் வழி நின்று வரலாற்று ஓட்டத்தை மார்க்ஸ் வரையறுத்து வைத்து சொன்ன எதிர்வு கூறல்கள் ஒன்றும் அவர் கூறியதற்கொப்ப நடைபெறவில்லை. அவர் புரட்சிக்குரிய தளங்களாகப் பார்த்த ஜேர்மனியிலோ இங்கிலாந்திலோ புரட்சிவெடிக்கவில்லை. மாறாக மிகப் பின் தங்கிய விவசாய நாடான ரஷ்ஷியாவிலும் பின்னர் அதை விடப் பின் தங்கிய நாடான சீனாவிலும் 'தொழிலாளர்' புரட்சி வெடித்தது. இது எல்லாருக்கும் தெரிந்த பழங்கதை. ஆனால் முக்கியமான புதுக்கதை என்னவெனில் இதுகாலவரை இருந்த தத்துவங்கள் எல்லாம் உலகத்தைப் பற்றிக் கூறினவே ஒழிய அதை மாற்றவில்லை என்றும் ஆனால் மார்க்சீயமோ உலகத்தையே மாற்றியமைக்கப் போகிறது என்றும் மார்க்ஸ் கூறிய எதிர்வு கூறலுக்கு நடந்த கதிதான். உண்மையில் மார்க்சியம் உலகத்தை மாற்றுவதற்குப் பதில் தன்னையே ஆயிரம் கூறுகளாக மாற்றித் சிதைத்தது தான் பெரிய முரண்நகையாகும். அதுமட்டுமல்ல உலகத்தை மாற்றியமைக்கப்போகும் கதாநாயகர்களாக மார்க்ஸால் கொண்டாடப்பட்ட தொழிலாள வர்க்கமே, முதலாளித்துவத்தின் உபபிரிவாக, அதற்குத் துணைபோகும் சக்தியாக பின்வந்த மார்க்சிய வாதிகளால் தூக்கியெறிப்பட்டதே மற்றொரு முரண்நகையாகும். 1968 பிரஞ்சுப் புரட்சி இதைத் தோலுரித்துக் காட்டிற்று. அப்புரட்சியின் போது முன்வைக்கப்பட்ட சுலோகங்களில் முக்கியமானது, "பொருளாதாரப் பண்டங்களே அபினி" என்பதே. இதன் அர்த்தம் புதிய பொருளாதார வசதிகளால், சொகுசு வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கிய தொழிலாள வர்க்கம் பூர்ஷுவா குணாம்சங்களைப் பெற புரட்சி கைவிடப்படுகிறது. முன்னர் மதம் அபினியாக இருந்த இடத்திற்கு பொருளாதாரப் பண்டங்கள் இடம் மாற்றப்பட்டு புரட்சிக்கு எதிராக நிற்கும் இன்னொரு முரண்நகை. இப்போது மாணவர்களும் நித்திய புரட்சிக்குணம் கொண்ட கெரில்லாக்களுமே புரட்சிக்குரிய வர்க்கமாக மாறுகின்றனர்.

> சேகுவேரா, அவரின் பிரச்சார கொள்கையாளர் றெஜிஸ் டாப்ரே, ஹேபேர்ட் மாக்குஸ், இன்னும் இவர்களுக்கு முன்னோடியான கிராம்சி போன்றோர் மார்க்சீயத்தை வைதீகப் போக்கிலிருந்து விடுவித்துப் போராட்டத்தைக் கூர்மைப் படுத்த பலவித வழிகளில் முயன்றுள்ளனர். இவர்களின் சிந்தனைகளின் ஊடாட்டாங்களால், மாணவர்கள், கிறிஸ்த மதப்பிரிவினர், முழுநேரப் போராட்ட கெரில்லாக்கள், புத்திஜீவிகள் என்று பல கோணங்களில் பல்வகைப் போராட்ட அணிகள் உலகெங்கும் திரண்டுள்ளன எனலாம்.

எல்லாவற்றையும் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்குட்படுத்துவதாகக் கூறும் மார்க்சீயத்திற்கு ஏன் இந்தப் பின்னடைவு ஏற்படுகிறது? இதற்குக் காரணம் மார்கஸின் சிந்தனைக்கு சில விஷயங்கள் எட்டாமல் போனமையே எனலாம். இதை இன்னொரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். 19ம் நூற்றாண்டின் பொருளியல் விற்பன்னராக இருந்த தோமஸ் மல்தஸ் என்ற பாதிரியார் அன்றைய உலக சனத்தொகை பற்றிக் கூறியபோது, "உலகின் சனத்தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. அதற்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம் உணவுற்பத்திக்குரிய நிலம் மாறப் போவதில்லை. இதனால் ஒரு காலகட்டத்தில் சனத்தொகை அதிகரிப்பினால் மக்கள் பட்டினியால் சாகவேண்டிவரும்" என்று கூறினார். இங்கே மல்தஸின் சிந்தனைக்கு எட்டாமல் போனது, எதிர்கால விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் என்பதை. இவ்வாறே மார்க்சின் சிந்தனைக்கு எட்டாமல் போனது, எதிர்கால விஞ்ஞான வளர்ச்சி, முதலாளித்துவத்தின் போக்குகளை மாற்றுவதோடு தொழிலாளரின் குணாம்சங்களை மாற்றி புரட்சிக்கான போராட்டக் கூர்மையையும் மழுங்கடித்துவிடும் என்பதை. மேலும் தேசிய இனப்பிரச்சினை சார்ந்த மொழி, இனம், மதம், கலாசாரம் சம்பந்தப்பட்டவை ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலை உணர்வோடு எவ்வாறு ஆழப்பிணைந்துள்ளன என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குரிய நல்ல உதாரணம் என்பதுகளின் இறுதியில் ஏற்பட்ட சோவியத் யூனியனின் உடைவு எனலாம்.

3

இன்றைய முதலாளித்துவம் பாரிய மாற்றங்களுக்குள்ளாகியிருக்கிறது. மார்க்சின் காலத்திலிருந்த காலனித்துவ – ஏகாதிபத்தியத்தால் கட்டியெழுப்பப்பட்ட முதலாளித்துவத்திலிருந்து இது பெரிதும் வேறு பட்டிருக்கிறது. எனினும் உழைப்பாளர்களைச் சுரண்டுகின்ற என்ற நோக்கில் இரண்டுக்கும் எந்தவித்தியாசமும் இல்லை. மார்க்சின் கால முதலாளித்துவம், நேரடியாகவே ஒவ்வொரு நாடுகளையும் கைப்பற்றி அதற்குள் தன்னைத் திணித்து தனது சுரண்டல் வேலையைச் செய்தது. இன்று அதற்குரிய உலக சூழல் அரிகிவிட்டதால் அப்பணியைத் தொடர்வதற்கு அது இன்று தன்னை நேரடியாகத் திணிக்க முடியாத நிலையில், மறைமுகமாக பல்வகை ஊடகங்களின் துணையோடு, பல் வகைநாமங்களில் சுரண்டல் வேலையைச் செய்கிறது. இன்றைய அதன் மாற்றத்திற்கு ஏற்ப அது பல்தேசிய முதலாளித்துவமாக பரிமணித்துள்ளது.

இவ்வாறு பரிணமித்துள்ள பல்தேசிய முதலாளித்துவத்திற்கு குற்றேவல் புரிவதற்காக உருவாக்கப்பட்ட தத்துவமாகவே இன்று பின் நவீனத்துவம் விமர்சிக்கப்படுகிறது. பின் நவீனத்துவம் முன்வைக்கும் கோட்பாட்டை பின் வருமாறு சுருக்கிக் கூறலாம்:

முழு உலகு தழுவிய கொள்கைகள் (கருத்தியல்கள்) மாணித்து விட்டதாகக் கூறும் பின் நவீனத்துவவாதிகள், தொட்டத் தொட்டமாகச் (Frasmantation) செயல்படும் ஒவ்வொரு அமைப்புக்கும் கொள்கைக்கும் ஆதாவளிப்பவர்களாக உள்ளனர். அவர்கள் கருத்துபடி ஒவ்வொரு இயக்கமும், அமைப்பும், ஸ்தாபனமும், கொள்கைகளும் தம் உள்ளியல்பு துலங்க இயங்குவதற்கு விடப் படவேண்டும். அவற்றில் தலையிடுதல் கூடாது. அப்படித் தலையிடுவதால் அதன் சுய இயல்பு, சுதந்திரம் மாசடைகிறது, கெட்டுப் போகிறது.

இவ்வாறு பின் நவீனத்துவவாதிகள் கூறுவதன் மூலம், இன்று பல்தேசியக் கம்பனிகள் என்ற பேரில் தமது நவீனப்படுத்தப்பட்ட சுரண்டலில் ஈடுபட்டிருக்கும் பல்வகை உருவங்களில் செயல்படும் முதலாளித்துவத்திற்கு பின் நவீனத்துவவாதிகள் முண்டுகொடுப்பதாக விமர்சிக்கப் படுகிறது. இதில் உண்மை உண்டென்றே கூற வேண்டும். ஆனால் இந்தப் பின் நவீனத்துவவாதிகள் எல்லாம் இத்தகைய கோட்பாடுகளை முன்வைக்க முனைந்தமை முதலாளித்துவத்தை தூக்கிப் பிடிக்கவா? அதன் கைக்கூலிகளாக இயங்கவா? என்னும் கேள்விகள் ஆய்வாளர்களுக்குரியவை. ஆனால் எமக்கு சுவாரஸ்யத்தை தரும் விஷயம் என்னவெனில், மேற்கூறிய பின்நவீனத்துவக் கொள்கைகளுக்குச் சமாந்திரமாகச் செல்லும் கொள்கைகளை பௌத்த மதத்தின் உபபிரிவான வைபாசிக தத்துவம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சொல்லியுள்ளது. ஆனால் அதன் நோக்கம் ஆத்மீக – அகப்பண்பாடு சம்பந்தப்பட்டது.

வைபாசிக தத்துவம் இரண்டு கோட்பாடுகளை முன்வைக்கிறது. ஒன்று சுபாவலக்ஸணம். அடுத்தது சாமான்ய லக்ஸணம். ஒவ்வொரு பொருளையும் அதன் இயல்பு நிலையில் இருக்கவிட வேண்டும். அதுதன் இயல்பில் முகிழ்க்க வேண்டும் என்று சுபாவ லக்ஸணம் கூறுகிறது. அதன் இயல்பில் தலையிடுவதை சாமான்ய லக்ஸணம் என்று அழைக்கிறது. அப்படி ஒன்றின் இயல்பில் தலையிட்டு அதன் இயல்பை, சுதந்திர சுபாவத்தைக் கெடுக்கக் கூடாது என்பதையே வைபாசிக பௌத்தம் கூறுகிறது. இது ஆத்மீகத்துக்குரிய, அகப்பண்பாட்டு வழியில் பார்க்கப்படும் போது மிக அவசியமானது. ஒவ்வொருவரும் தன் இயல்பில் பிற குறுக்கீடின்றி விடுதலையை அடைய வேண்டும்.

ஆனால் இக்கோட்பாடு இந்த முறையில் சமூக இயக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் போது பல விபரீத விளைவுகளை ஏற்படுத்தும். உதாரணமாக ஹிட்லர் போன்ற ஒரு அராஜகவாதி கட்டிபெழுப்பும் இயக்கத்தில் எவரும் குறுக்கிடாது, அதன் சுபாவத்தில் இயங்க விட்டுவிட வேண்டும் என்று சொன்னால் அது எங்கே போய் முடியும் என்பது எவருக்கும் தெரியும்.

இங்கு நாம், ஆரம்பத்தில் கூறியதுபோல் அழுத்தவிரும்புவது இன்று பெரிதாகப் பேசப்படும் பின் நவீனத்துவக் கொள்கைகளுக்கான அருட்டல்கள், கீழைத்தேய சிந்தனை மாபிலிருந்து பெறப்பட்டு, அது மேற்குலகுக்குக் கைமாற்றப்படும் போது அது அதற்கே உரிய சுபாவத்தில் சமூக, அரசியல் ஓட்டங்களில் இடந்தவறிப் பிரயோகிக்கப்படும் போது இத்தகைய அபத்தங்களுக்கு வழி வகுக்கிறதோ என்பதே. இவை எல்லாம் ஆய்வுக்குரியன.

இன்று முதலாளித்துவம் இவ்வாறு காலத்துக்கேற்ற கோலத்தில் தன்னை உருமாற்றி தன் சுரண்டல் நடவடிக்கைகளை தொடரும் நிலையில் அதற்கெதிராக மார்க்சீய இடதுசாரி அமைப்புக்கள் தமது வைதீக மார்க்சீய வரட்டுச் சுலோகங்களில் இருந்து விடுபட்டு புதியமுறையில் தம்போராட்ட முறைகளைக் கூர்மைப் படுத்தியுள்ளனவா என்பதே அடுத்த கேள்வி.

சேகுவேரா, அவரின் பிரச்சார கொள்கையாளர் றெஜிஸ் டாப்ரே, ஹேபேர்ட் மாக்குஸ், இன்னும் இவர்களுக்கு முன்னோடியான கிராம்சி போன்றோர் மார்க்சீயத்தை வைதீகப் போக்கிலிருந்து விடுவித்துப் போராட்டத்தைக் கூர்மைப் படுத்த பலவித வழிகளில் முயன்றுள்ளனர். இவர்களின் சிந்தனைகளின் ஊடாட்டாங்களால், மாணவர்கள், கிறிஸ்த மதப்பிரிவினர், முழுநேரப் போராட்ட கெரில்லாக்கள், புத்திஜீவிகள் என்று பல கோணங்களில் பல்வகைப் போராட்ட அணிகள் உலகெங்கும் திரண்டுள்ளன எனலாம். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரவிகள் திரும்புகின்றன



கடிவாளம் ஊசலிடத் திரும்புகின்றன.
குருதிப் பொருக்குலர்ந்த புரவிகள்.

புரவிகளின் நெடுங்கால
மொழியற்ற துயர் மொத்தமும்
குளம்பொலியில் வழிகிறது.
மிகுந்த பரிச்சயமுள்ள
நடைபேசும் அமானுஷ்ய பாசை
கசக்கிப் பிழிகிறது துடிக்கும் கையளவு திசுக்களை.

உயிர்த்த வருகைவேண்டித் தோத்திரங்கள் பாடும்
பூத்தவிழிகள் கோர்த்த வாசல்தோறும்
நறுக்கென்று எறித்தெறித்த முள்வலி.

புரவிகள் நடைதரிக்கும் முற்றமறியாச் சிறுபொழுதுள்
தாளாது திரள்கிறது
மயிர் விளிம்பில் துளி கண்ணீரின்
உடைந்து சிதறும் தவிப்பு.

2

பாஞ்சசன்னியப் பெருமுழக்கம்
உலுக்கிய திசைமுகங்களில்
தீமிதியின் உக்கிரம் கொப்புளிக்கிறது.
கடிவாளத்தின் அசுர உசுப்பலில்
இளங்குருதித் தினவு நுரைக்கிறது.
சடைசிலுப்பித் தாவி
நர்த்திக்கும் புரவிகளின் குளம்பொலிக்கிறது.

முறுக்கேறிய நரம்புகள்
விரல் தீண்ட
அதிர்ந்தெழுந்தது நாதம்

தொடுகையில்
சிலிர்த்தது ஆன்மா
உணர்வு கலங்க
நாதச்சுழல் விழுங்கியது

தேகம் தழுவி
உயிரில் உரச
மர்மப் பொறியில்
மூண்டது நெருப்பு

மாயத் தீயிடை
மனசு தகித்தது.
மதியினைப் பொடியாக்கி
மோனத்தில் புதைத்தது

இதயம் இருமடங்காய் துடிக்க
லயத்தில் இழைந்து
மெழுகாய் கனிந்து கனிந்து
மெலிதாய் உணர்ந்த புள்ளியில்
உறைந்தது நாதம்.

எஸ்.உமாஜிப்ரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமும் மனத்தின் பாடலும்

– முல்லைக்கமல் –

எழு வெளியீட்டகம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு,
ரூ.50.00



## சி. சிவசேகரம்

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் நீண்ட முன்னுரையுடன் வந்துள்ள கவிதைகள் பற்றி எழுது முன், கவிதை பற்றி முன்னுரையாளர் கொண்டுள்ள சில கருத்துக்கள் பற்றி எழுதுகிறேன்.

கவிதையில் கவிஞரின் தத்துவமும் கோட்பாடும் சார்ந்து சிந்தனை எவ்வளவு சிறப்புடன் வெளிப்படுகிறதோ அவ்வளவுக்கு அவரது கவித்துவம் உச்சம்பொறுகிறது என்ற கருத்துடன் மிகவும் உடன்படுகிறேன். மேலும், ஒரு பஞ்சுப்பொதியின் சுமையை ஒரு இரும்புத்துண்டு சமன்செய்வது போல கவிதை இரும்பாகக் கனக்கக் கூடியது எனவும் கூறுகிறார். கவிதையை இரும்பை விடக் கனமானதாக்கவும் பஞ்சை விட இலகுவானதாக்கி வானில் உயர்ந்து விரிந்து பறக்கவும் செய்வது எது? இறுக்கம் என்பதை மலச்சிக்கல் போல நாம் கருதக்கூடாது. அத்தகைய இறுக்கம் வார்த்தை வயிற்றோட்டத்துக்கு எதிர்மறையே ஒழிய நல்ல மாற்றில்லை. நல்ல கவிதையால் ஒரே நோத்தில் இறுக்கமாயும் நெகிழ்வாயும் அமைய முடியும். இறுக்கம் என்ற பேரில் வாசகன் மீது திணிக்கப்படும் இருண்மையான மொழியைச் சாடுகிற இடத்திலும் அவருடன் பொதுப்பட உடன்படுகிறேன். எனினும் கமலின் சில கவிதைகளின் இருண்மை தொடர்பாக ''உச்சநிலைக் கவிஞர்கள் முல்லைக் கமலின் இத்தகைய கவிதைகளை ஒரு புறம் தரமில்லை என்று சொல்லும் அதேநேரம், வேறு பக்கத்திலிருந்து புரியவில்லை என்ற கருத்து முன்வைக்கப்படுவது தவிர்க்க முடியாததே'' என்கிற போதே முன்னுரையாளர் புதிர்க்காரக் கவிஞர்களைக் கவிதைக் குன்றின் உச்சிக்கு ஏற்றிவிடுகிறார். மற்றப்படி, நம் இலக்கியவாதிகள் பலரும் கருத்திற் கொள்ளவும் ஏற்கவும் உகந்த பல கருத்துக்களை முன்னுரை தெளிவாக முன்வைத்துள்ளது.

முல்லைக் கமலின் கவிதைகள் போராடும் மண்ணின் குரல்களாகவே பதிவாகின்றன. இன்று ஈழத்துக் கவிதையில் ஒரு தேக்கம் தெரிகிறது. இரண்டு தசாப்தங்கள் முன்னம் உருவான பல கவிஞர்களின் கவிதை உலகம் சோர்ந்துள்ளது. இத்தகைய ஒரு சூழலில், போராடும் மண்ணில் விளைந்த இக்கவிதைகள் அம்மண்ணின் மனிதவாழ்வு பற்றிய பதிவுகளாகவும் கவிதைகளாகவும் நம்பிக்கையூட்டுகின்றன. இவை பொதுவாக, எதிர்வரவேண்டுகிற விடுதலை பற்றி நேர்மையான மன உறுதியுடன் மனித இன்னல்களை அடையாளங் காட்டுகின்றன. சக மனிதர் மீதான நம்பிக்கை கவிஞரின் ஒவ்வொரு சொல்லிலும் தெரிகிறது.

இக்கவிதைத் தொகுதியை நாம் கவிஞரின் அனுபவங்களினதும் வாழ்க்கைச் சூழலினதும் வரையறைகளை மனதிற்கொண்டே மதிப்பிட வேண்டும். அதே வேளை, அதில் உள்ள கவிதைகள் அவற்றின் சூழலின் நிர்ப்பந்தங்கள் சிலவற்றிலிருந்தும் விடுபட்டு நிற்கின்றன. எட்ட' இருந்து பாணிபாடுகிற கவிஞர்களின் சொற்சாலங்கள் அங்கே இல்லை. அவரிடம் உள்ள தமிழ்த் தேசிய உணர்வு இன விடுதலைக்காகக் குரல் எழுப்புகிறதேயொழிய இனத்துவேஷக் குரல் எழுப்பவில்லை. அனைத்திலும் முக்கியமாக மக்களுள் ஒருவராக நின்று அவர் கவிதை செய்கிறார். எனவே அவரது கவிதை உலகிற்குட் புகுவதில் எவருக்கும் சிரமம் இராது. முன்னுரையாளர் குறிப்பிடும் இருண்மையான கவிதைகளிற் கூட வாசகனை எட்ட நிற்கச் சொல்லும் தோரணை இல்லை. சில கவிதைகள் இரண்டு மூன்று தரமேனும் வாசிக்கும்படி நம்மை நெருக்கமாக்குகின்றன. அவ்வகையில் அவை அதிமேதாவித்தனமான கவிதைகளினின்றும் தெளிவாகவே வேறுபடுகின்றன. இனி ஒரு சில கவிதைகளை நோக்குவோம்.

''கள்ளி முளைக்காத பச்சை நிலத்தில்
சாக்குருவியின் துயரப்பாடலுக்கு
நிலம் வெளிறிப் பாலையடித்து
முள்ளுத் துளிர்த்த வேளையில்
என் மனிதர்கள் புதைக்கப்பட்டார்கள்.''

(பனையிலிருந்த உயிர்மூச்சு, ப – 06)

''புழுதி மணக்கும் வெளிகளில் – காற்று
உருவேறி, உருவேறி ஆடுகிறது
பொலித்தீன் பையொன்றன் மேலெழுகை.''

(பஞ்சமிகள் பற்றிய பயம், ப – 08)

''முகம் கறுத்த இருளுக்குள்
ஆட்காட்டிகளின் பார்வைக்குத் தப்பி
மேகத்தைத் தாங்கும் அதன் கால்கட்டு மேலாய்
புல் முளைத்த மேனியுடன்
மயிர்கூச்செறியாத நிலத்தில்
விடுதலை உயிரிகளின் நகர்வு.''

(சிலந்திகள் தொலைந்த தேசம், ப – 11)

''உனது பின்னல்களின் சொடுக்கில்
என் இதயம் இடியொலிக்கிறது
..................
கைகள் பிசைந்து
சுடு மூச்சுக்களில் தொற்றி ஏறி
பிணைந்திறுகி
கண்களைத் தொலைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்குள்ளாய் ஒருவர் இறங்கி நடந்து
படபடத்திடிக்கும் எமது
இதயத்தின் இடிப்பை எப்படி
இருவரும் கேட்டு நகைத்தோமோ
அப்படியே.''
(இலை சூடிய பனிநீர், ப – 14 –15)

''மலை வேம்பின் நிழலோரச் சிறுகுடிலில்
தேயாத ஒலியில் குழைந்தபடி
தெரு வரைக்கும் கேட்கும்
ஒரு குழந்தையின் வாசிப்பு.
................
வானைப் பிளந்தது கிபிர் ஓசை.
...........
வெளிறித் துடித்த படி வேதனையில் புரள்கிறது
எங்கள் சுதந்திர புரம்.''
(காலமொன்றன் அகாலம், ப – 27)

இவை முல்லைக் கமலினில் உள்ள கவிஞனின் ஒளிக் கீற்றுக்கள். எல்லாக் கவிதைகளிலும் அவரது கவிதை வீச்சை வெவ்வேறு வடிவங்களிலும் வேகங்களிலும் காணலாம். சில இடங்களில் சொற்பிரயோகம் கவிதையின் பாய்ச்சலை மறித்து நிற்பதும் உண்மை. எடுத்துக் காட்டாக,

''இரவு!.......
ஒரு பெரிய பாவி
சபிக்கப்பட்ட ஜென்மம்
உன்னைப் பற்றிய ஒரு செய்தியும்
அதன் மனதை வருடியிராது.''
(கடல்காற்ற வானத்தின் ஞாபகம், ப – 04)

''இரவு......'' என்று எழுதப்பட்டதை அடுத்து வந்த வரிகள் இரவு பற்றியன என்று விளங்கக் கொஞ்சம் நேரம் எடுத்தது.

வேறு சில இடங்களில் பேச்சு மொழியும் 'செம்மொழியும்' கலந்து வருவது வாசிப்புக்கு இடையூறாகியது. ஷ – ஸ குழப்பமும் தவிர்த்திருக்கத் தக்கது.

மொத்தத்தில், கவிதை பற்றி நம்பிக்கையூட்டும் விதமான ஒரு இளம் படைப்பாளியின் தோற்றத்தில் எளிமையான பொருளில் ஆழமான படிமங்களையுடைய கவிதைகள் இவை. வாசகனுடன் இலாவகமாக உறவாடி நட்புப் பூணும் சொல்லாற்றல் தெரிகிறது. ஒவ்வொரு கவிதையும் தனக்காகப் பேசுகிறது என்பதற்கு மேலாக நான் சொல்ல அவசியமில்லை. முதற் கவிதையிற் கவிஞர் கூறியுள்ளது போல,

''வன்னியின் சின்னக் கிராமத்திலின்று
எழுந்தும் விழுந்தும் மீண்டும் எழுந்தும்
மெல்ல உங்கள் கைகளில் வருகிறேன்
ஒரு கவிதையைப் போலவே''

அவர் நம்மிடை வருகிறார். கூன் முள்ளந்தண்டு நிமிர்த்திப் பாடுகிறார். நாம் அவரைத் தோழமையுடன் வரவேற்போம்.



## இரண்டாவது காலம்
## — முல்லைக் கோணேஸ் —

ரி.எஸ்.எஸ்.



திவ்வி வெளியீட்டகம்,
நாலாம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.
ரூ.50.00

2000 ஆண்டில் பிற்பகுதியில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளுள் குறிப்பிடக்கூடியனவாய் உள்ள இரண்டு தொகுதிகள் என் பார்வைக்குக் கிட்டின. ஒன்று திசோரா எழுதிய "கபாலபதி". அடுத்தது முல்லைக்கோணேஸ் எழுதிய "இரண்டாவது காலம்" இரண்டு தொகுதிகளிலும் முனைப்புறும் விஷயம் இன்று தமிழ்பேசும் இனத்தின் மண்ணில் இடம் பெறும் போரும் அதனால் அம்மக்கள் அனுபவிக்கும் அழிவுகளும் துன்பங்களுமாகும். முன்னது கிழக்கு மாகாணத்தையும் மலையகத்தையும் மையப்படுத்திய விஷயங்களை பேசுவதாய் இருக்க, பின்னது வடபகுதியின் நிகழ்வுகளை விபரிப்பதாய் உள்ளது. (இதேகாலப்பகுதியில் வன்னிப் பகுதியிலிருந்து சு.மகேந்திரனின் "காலவெளி" என்னும் சிறுகதைத் தொகுதியும் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது எனது பார்வைக்குக் கிட்டாததால் அது பற்றி கூறமுடியாதுள்ளது.)

முல்லைக்கோணேசின் கதைகளில் உள்ள முக்கிய அம்சம் அக்கதைகளில் காணப்படும் கதையின்மையே. அதாவது கதை ஒன்றை எழுதுவதற்கு 'கரு' ஒன்றை தேடியலையும் வியர்த்தம் இக்கதைகளில் அனேகமாக இல்லை என்றே கூறவேண்டும். வன்னி, யாழ்ப்பாண வெளிப் பிரதேசம் ஆகியவற்றின் நிலைமைகள் பற்றிய எளிமையானதும் கலைப்பாங்கானதுமான விபரிப்பு கதைகளின் 'கரு'வாக மாறுகின்றது எனலாம். முக்கியமாக இக்கதைகளை படிக்கும்போது ஏர்னஸ்ட் எமிங்வேயின் 'ஸ்ரோறிஸ் ந.ஃங் கிளிமஞ்சாரோ' கதைகளே எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. எமிங்வே எளிமையும் கலைத்துவமும் மிளிர இயற்கையோடிணைந்து கதையை விபரித்துச் சொல்லும் முறையும் அனேகமாக அவர்கதைகளில் காணப்படும் கதையின்மையும் என்னை மிகவும் கவர்வதுண்டு. அவ்வாறே முல்லைக் கோணேசின் கதைகளிலும் ஒருவகைக் கதையில்லாது கதைசொல்தலையும், அவர் அவ்வாறு சொல்லிச் சொல்கையில் பல கதைகள் நமது மனஓரங்களில், நாம் சந்தித்த நிகழ்வுகளோடு கலந்து இன்னும் பல கதைகளை கிளறி மேலெழச் செய்வதையும் நாம் காண்கிறோம்.

"நிலவெறிக்கும் பொழுதுகளில் வெண்மணற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பிலிருந்து நவீன கதை பற்றி நானும் முல்லைக்கோணேசும் உரையாடியிருக்கிறோம். இரவின் ஆழம்வரை எங்களின் பேச்சு நீண்டிருக்கும்" என்று எஸ்.கருணாகரன் இக்கதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையின் தொடக்க வாசகங்களே இத்தகைய ஓர் மனப்புதைவுகளை மீளவெளிக் கொணர வைப்பவைகளாகவே உள்ளன. "நிலாவெறிக்கும் வெண்மணற்பரப்புகள்" கபிலரின் "அற்றைத் திங்கள்" வரிகளை நினைவூட்டுவனவாய், ஒவ்வோர் வாசகனிடத்தும் புதையுற்றுபோயுள்ள அவனது கிராம வாழ்க்கை நினைவுகளை மீளக்கண்முன் நிறுத்துபவையாய் உள்ளன.

முல்லைக்கோணேசின் கதைகள் பல காலங்களை தலைப்பாகக் கொண்டுள்ளதைக் காண்கிறோம். 'இருள் விலகும் காலம்', 'பனிக்காலம்', 'இரண்டாவது காலம்', 'நிலாக்காலம்' என்று வரும் இக்கதைகளின் தலைப்பும் அவற்றில் சொல்லப்படும் விஷயங்களும் இத்தகைய கிராமசூழலின் விவரணையின் வார்ப்பாகவே உள்ளன. ஆனால் இவற்றில் வரும் "பனிக்காலம்", "கபாலபத"'க் கதைபோல், தமிழ்ப்பகுதிகளில் இன்று குடிகொண்டுள்ள ஓர் துன்பமான சூழலின் குறியீடாகவே காட்டப்படுகிறது. இதோ அவர் கூறுகிறார்.

"ஆனாலும் கால்களுக்கு கீழே இறங்கிய பனிப்பாளங்கள் திட்டுத்திட்டாய் உறைந்து போய்க் கிடந்தன. நடக்கும்போது கால்கள் குளிர்ந்தன. அதில் சிலர் முகம் பார்க்க முனைந்தனர். கரியதும் கொடூரமானதுமான பெரிய அசுரத்தனமான தோற்றங்களை அதில் அவர்கள் கண்டனர். பீதியால் உறைந்து துடித்தனர்."

இவ்வாறு வாய்பிளந்து நிற்கும் பனிப்பாளங்கள் எவற்றைச் சுட்டுகின்றன? நிச்சயமாக தமிழ்பேசும் பகுதிகளில் மக்களை விழுங்கி 'காணாமல் போக' வைக்கும் பேரினவாத ராணுவத்தையே என்று நாம் இனங்காணலாம்.

ஆனால் இத்தகைய பனிப்புதைவும், பனிப்பாளங்களும் நம்மூருக்கு பொருத்தமானவையா? இது மேற்குலகுக்கே அதிகமாகப் பொருந்தக் கூடியது. அவ்வாறிருந்தும் நமது சூழலை பிரதிபலிக்க இவற்றை எழுதலாமா என்று ஒருவர் கேட்கலாம். ஆனால் இங்கே முல்லைக்கோணேஸ் 'பனிக்காலம்' கதையை விபரிக்கும் முறையால் அதை நம் தேசத்திற்குரிய இயற்கையான ஒன்றாகவே விபரித்துச் சொல்கிறார். இவ்வாறான விபரணை அவருக்கு கைகொடுப்பதாலேயே அவரது கதைகள் நம் மனதில் தடம் பதித்துச் செல்கின்றன.

"கிராமக் கோட்டுச் சந்திக்குப் போகும் மெயின் ரோட்டில் இருந்து இருநூறு யார் தள்ளிக் கிடக்கும் வெட்டைவெளியில் வெய்யில் வெயிலாய் கிறிக்கற் ஆடியபடி சிறுவர்கள் குதூகலிப்பர். பனைகளின் கீழே விரிந்து போய்க்கிடக்கும் நிழலில் நாங்கள் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டே நீண்ட நேரமாய் உட்காந்திருப்போம்" என்று முல்லைக்கோணேஸ் 'மீட்பர்களின் வருகைக்காய்' கதையில் விபரிப்பது எம்முள்ளும் இத்தகைய நினைவுகளை கிளறவே செய்கின்றன.

இவ்வாறு அவரது ஒவ்வொரு கதைகளிலும் மீட்டப்படும் நினைவுகளே இவர்கதைகளின் முக்கிய அம்சமாகும். சில கதைகளில் சற்று பிரச்சாரம் தலைகாட்டவே செய்கிறது. இதற்கு உதாரணமாக, 'சரித்திரங்களிலிருந்து சொல்லப்பட வேண்டிய கதை' 'கஸ்தூரியம்மா' போன்றவற்றை காட்டலாம்.

இவை நீங்காக கோணேசின் கதைகள் இன்றைய தமிழ்பேசும் இனமக்களின் நிலைமைகள் பற்றிய நல்ல பதிவுகளாகவே உள்ளன. ■



## யாழ்ப்பாணம்

### சமூகம், பண்பாடு, கருத்துநிலை

– கா. சிவத்தம்பி –

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு.
ரூ.100.00 (இந்திய விலை)




**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

I

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது யாழ்ப்பாணம் – சமூகம் கருத்துநிலை என்ற நூலைப் படித்ததை ஒட்டி என்னுள் எழுந்த சிந்தனைகளை தருவதே இக் குறிப்பின் நோக்கமாகும். இந்நூல் பேராசிரியர் அவர்களால் கிட்டத்தட்ட 25 வருட கால இடைவெளியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நோக்கங்களுக்காகவும் தேவைகட்காகவும் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும். யாழ்ப்பாண சமூகம், அதன் பண்பாடு, கருத்துநிலை என்பன தொடர்பான பேராசிரியர் அவர்களது அவதானங்களையும், கருத்துக்களையும் கொண்ட கட்டுரைகள் பன்னிரண்டை இத்தொகுப்பில் தொகுப்பாளர்கள் சேர்த்துள்ளார்கள். கால ஒழுங்கின் அடிப்படையை விட விடய ஒழுங்கில் கட்டுரைகளை தொகுப்பதில் தொகுப்பாளர்கள் கவனம் செலுத்தியிருப்பதாக தெரிகின்ற போதும் அவற்றுள்ளும் கூட ஒரு கால ஒழுங்கை அவர்கள் கடைப்பிடித்திருந்தால் நூலின் வாசிப்பு ஓட்டத்துக்கு வசதியாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. தவிரவும் நூலாசிரியரின் அவதானங்களும் கருத்துக்களும் விரிந்தும் பரந்தும் ஆழமடைந்தும் செல்லும் தன்மையையும் வாசிப்புடன் கூடவே அவதானித்தும் செல்லும் வாய்ப்பு வாசகருக்கு உருவாகியிருக்கும் என்று நினைக்கிறேன். உதாரணமாக 1988 இல் தலங்காவில் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலரில் எழுதப்பட்ட கட்டுரையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாண இந்து மக்களிடையே சமூக மேநிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்" என்ற கட்டுரையில் வரும் அசைவியக்கம் தொடர்பான கருத்துக்கள் யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல் என்ற 1990ம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரையில் மேலும் விரிவுபடுத்தப்படுவதைக் காணலாம். தொகுப்பாளர்கள் கட்டுரைகளை தொகுக்கும் தமது நன்முயற்சி மேலும் சிறப்புற இவ்விடயங்களை கவனிப்பதும் முடியுமானவரை இவை பற்றிய வழிகாட்டல் குறிப்புகளை வாசகர்களுக்குத் தருவதும் அவர்களது பணி மேலும் பயன்சிறப்பு மிக்கதாக அமைய உதவும் என்று நினைக்கிறேன். தொகுப்புரை இந்தப் பணியை சரிவரச் செய்யவில்லை என்பதுடன் அது பேராசிரியர் அவர்களது முன்னுரையில் கூறப்பட்ட விடயங்களையும் பிறவற்றையும் மீளக் கூறும் செயலையும் செய்திருப்பது, இவ்வாறான ஒரு நூலைப் பதிப்பிக்க எடுத்த நன் முயற்சிக்கு சற்று ஊறு செய்வதாக உள்ளது போல் படுகிறது. எவ்வாறாயினும் தொகுப்பாளர்களது இந்த முயற்சி வரவேற்கப்பட வேண்டியதும் பாராட்டுக்குரியதும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## II

யாழ்ப்பாண சமூகம் அதன் பண்பாடு கருத்து நிலை என்பன தொடர்பான பேராசிரியரின் அவதானங்கள் கருத்துக்கள் தொடர்பாக எமது அவதானங்களைப் பதிவு செய்யும் முன்பாக இவ்விடயங்கள் தொடர்பான தனது பதிவுகளை பேராசிரியர் எவ்வாறு ஒழுங்கமைத்துக் கொள்கிறார் என்று சற்று கவனிப்பது முக்கியமாகும்.

யாழ்ப்பாண சமூகம் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட உற்பத்தி முறையையும், அதற்கேற்ற விதத்தில் அமைந்த தொழில்சார் சாதிய அமைப்பு முறையையும் கொண்ட ஒரு அமைப்பாக இருந்து வந்தது. இந்தச் சாதிய ஒழுங்குமுறையைக் கொண்ட நிலப்பிரபுத்துவ விவசாய உற்பத்தி முறையின் கீழ் ஒருவகை ஒழுங்கமைதி பேணப்பட்டு வந்தது. இந்த ஒழுங்கமைதியைப் பேணுவதற்கான கருத்துநிலையும், பண்பாட்டமைதியும் உருவாகி இருந்தன. அந்நிய ஆதிக்கங்களின் மாறி மாறி வந்த ஆட்சி முறைகள் சமூகத்தின் இந்த இயல்பு நிலையை மாற்றத்துக் குள்ளாக்குகின்றன. தேசவழமைச் சட்டம் இந்த இயல்பு நிலை, அவற்றின் மாற்றம் என்பவற்றை புரிந்து கொள்வதற்கான ஒரு ஆவணமாக பயன்படுத்தப் படுகிறது. ஆறுமுக நாவலரது வருகை, அவரது "சைவத்தமிழ்" கோட்பாடு சைவ சித்தாந்த நெறியின் ஆதிக்கம், அது சாதிய அதிகார ஒழுங்கமைப்பை பேணுவதற்கு மேற்கொண்ட பிரயத்தனம், இதன் அரசியல் பிரதிநிதியாக செயற்பட்ட சேர்.பொன். இராமநாதனின் கருத்துக்கள், இவற்றைப் பேணும் பண்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றை ஆதாரமாக கொண்டு யாழ் சமூகத்தை விளங்கிக் கொள்ளும் முறையியலை பேராசிரியர் அவர்கள் பின்பற்றுவதைக் காணலாம்.

ஒரு வகையில் ஈழத்தில் அரசியல் பொருளாதார ஆதிக்கம் பெற்ற வர்க்கப் பிரிவினரின் சிந்தனைகளும் கருத்து நிலைகளும் முழு சமூகத்தினதும் வர்க்கங்களதும் சிந்தனைகளிலும், கருத்துக்களிலும் ஆதிக்கம் செலுத்துவதே யதார்த்தம் என்ற போதிலும், சமூக அரசியல் மற்றும் பண்பாட்டின் வரலாறு என்பது முழுக்க முழுக்க அந்த ஆதிக்கப் போக்குகளின் வரலாறாக மட்டுப்படுத்தப்படுவது சரியானதல்ல என்று நான் நினைக்கிறேன். நான் இப்படிச் சொல்லும் போது பேராசிரியர் அவர்கள் மற்றைய விடயங்களை கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டிவிட்டதாக கொள்ளத் தேவையில்லை. யாழ் வாலிப காங்கிரசின் ,அரசியல் செயற்பாடு, செல்வச்சந்தி கோவிலின் வழிபாட்டுமுறைமை போன்ற இன்னோரன்ன விடயங்களை அவர் பதிவு செய்யத் தவறவில்லை. தவிரவும் ஒடுக்கப்பட்ட சாதிகள் மத்தியிலிருந்து எழுந்துவரும் வர்க்கங்கள், பொருளாதார, கல்வி மேம்பாட்டின் காரணமாக நேல்நோக்கிய அசைவியக்கம் நிகழ்தல் போன்றவற்றையும் அவர் பதிவு செய்யத் தவறவில்லை. ஆயினும் யாழ்ப்பாணத்தார் என்ற கருத்தின் பாற்பட்ட மக்கள் குடாநாட்டில் வாழ்ந்த எல்லா மக்களுமா? இச்சொற்பதம் இம்மக்கள் அனைவரது கருத்துநிலை பண்பாடு என்பவற்றை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா என்ற கேள்விக்கு உரிய பதிலைக் காணும் வாய்ப்பினைத் தருமளவுக்கு இவ்விடயங்கள் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். பேராசிரியர் அவர்கள் வதிரி தேவரையாளி சமூகம் தொடர்பாக எழுதியதாக கூறும் இத்தொகுப்பில் வெளிவராத கட்டுரை சேர்க்கப்பட்டிருந்தால் ஒருவேளை இது நிறைவு செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு.

எவ்வாறாயினும், பேராசிரியர் அவர்களது இந்தக் கட்டுரைகள் இப் "பேசாப் பொருளை" முதலில் பேசிய கட்டுரைகள் என்பதும், யாழ் சமூக வரலாறு என்பது வெறும் வெள்ளாள சைவத்தமிழ் வரலாறு மட்டுமல்ல அங்கு வேறு போக்குகள் இருந்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதும், இந்த "வெள்ளாள சைவத்தமிழ்" என்பது பிற போக்குகள் மீது தனது செல்வாக்கை திணித்திருந்தது என்பதை சுட்டிக் காட்டும் வரலாற்று ஆவணங்கள் இவை என்பதும் மிகவும் முக்கியமானவை. இவை அவரே சொன்னபடி மேலும் பரந்தும் விரிந்தும், ஆழமாயும் ஆராயப்பட வேண்டிய ஆய்வுகட்கு அடியெடுத்துக் கொடுக்கும் முக்கியத்துவம் மிக்கவை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

## III

யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் வாழ்ந்த சமூகம் முழுக்க முழுக்க ஒரு தனியான பண்பாட்டு இயல்புகளைக் கொண்ட சமூகமாக வாழ்ந்ததாக கொள்ள முடியாது என்று சொன்னேன். குடாநாட்டுக்குள்ளேயே வடமராட்சியார், தென்மராட்சியார், யாழ்ப்பாணத்தார். (நல்லூரை அண்டிய பகுதியினர்) வலிகாமத்தார் மற்றும் தீவார் என்ற பிரிவினைகள் நிலவியதையும் இப்பகுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களுள்ளேயே வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என திசை சார்ந்தும் பகுதி, குறிச்சி என்பன சார்ந்தும் வேறுபாடுகளும் "சம்பந்தம்", "சடங்கு", "செம்புத்தண்ணி எடுத்தல்" இல்லாதளவுக்கு தனித்துவப் போக்குகளும் நிலவி வந்துள்ளன. மிக அண்மைய காலம் வரை இந்தப் போக்கு நிலவி வந்ததுடன் இந்தப் பகுதியினரிடையே வெவ்வேறு விதமான பண்பாட்டு முறைமைகளும் இருந்து வந்திருக்கின்றன. வாசலில் கோலமிடல், பெண்கள் பூவும், குங்குமப் பொட்டும் அணிதல் போன்ற வழக்கம் வலிகாமம், அளவெட்டி, இணுவில் பகுதிகளில் அதிகமாகவும் வடமராட்சிப் பகுதியில் இல்லாமலும் அதிலும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அறவே இல்லாமலும் இருந்தமை இந்த வேறுபாட்டை விளக்கும் சிறு உதாரணம் எனலாம்.

வருடா வருடம் (கேட்பதற்கு ஆளில்லாவிடினும்) கந்தப்புராண படலம் தவறாது நடக்கும் வடமராட்சி கிழக்கு கோவிலொன்றில் "புராணப் படிப்பு" செய்வோரும் பயன்காரும் கூடியிருந்து அளவளாவிய ஒரு நோத்தில் நடந்து நான் கேட்ட ஒரு உரையாடல் மிகவும் சுவாரஸ்யமானது. பூவும் பொட்டும் பெண்களுக்கான அணிகலன் என்பது தொடர்பாக இந்த உரையாடல் நிகழ்ந்தது. சுமங்கலிப் பெண்கள் நெற்றியிலே குங்குமம் இடுவது தொடர்பாக உரையாடிய அவர்கள் "இதெல்லாம் இந்தச் சினிமாப் படத்தினால் வந்த கூத்து! நீறில்லா நெற்றி தான் பாழே அல்லாது குங்குமம் இல்லாத நெற்றி பாழ் என்று பாடவில்லையே?" என்று அந்த உரையாடல் நடைபெற்றது. தவிரவும் தாலி குறித்தான இந்துமத மரபுக் கருத்தக்கள் போல இப்பிரதேசங்களில் அது ஒன்றும் அத்துணை பவுத்திரமான விடயமாக கருதப்பட்டதில்லை.

கோவில் வழிபாட்டில் சமஸ்கிருதமயமாகிய போக்கின் காரணமாக, பிராமணர்கள் பூசிக்கும் தலங்களாக பல தலங்கள் மாறிய போதும் வைரவர், வீரபத்திரர், காளி, அம்மாள், முனி, பெரிய தம்பிரான் போன்ற தெய்வங்கள் தொடர்ந்தும் பிராமணர்களல்லாதவர்களால் பூசிகப் படுவதும் அதற்குப் பலரும் சாதி வேறுபாடுகளின்றிக் கலந்து கொள்வதும் சாதாரண நடைமுறையாக இருந்தது. பிள்ளையார் கோவிலில் வைரவரும் வீரபத்திரரும் நாகதம்பிரானும் இருப்பதும், வைரவர் காவல் வைரவராக கொள்ளப்படுவதும் மடைப் பண்டம் எடுத்தல்,வளந்துவைத்தல்,பொங்கல்,மடை, வழிவெட்டல், கழிப்புக் கழித்தல் போன்ற சடங்குகள் சமய சடங்குகளாக நடந்து வந்ததும் – சமஸ்கிருத மயமாக்கல் போக்கிற்கு சமாந்தரமாக மிகவும் சக்தியுடன் நடந்து வந்தது முக்கியமான கவனிப்புக்குரிய விடயங்களாகும்.

பில்லி, சூனியம், பேய், பிசாசு பிடித்தலுக்கு எதிராக கழிப்புக் களித்தல், பேயாட்டல் என்பன சமஸ்திருத மயமாகிவிட்ட கோவில்களால் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாக இருந்ததன் காரணமாக இந்த வழிபாட்டு முறைகள் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருந்து வந்தன.

சாதிய அதிகார அடுக்கு என்பது பொருளாதார ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாக தீண்டாமை வலுவுற்றிருந்த காலங்களிலும், பேயாட்டல், பில்லி, சூனியம் விரட்டல் போன்ற நடவடிக்கைகளில் பெரிதும் ஈடுபட்டோர் சாதிய அதிகாரப்படி ஒழுங்கில் கீழ்மட்டத்திலிருந்த "குடிமைச்" சாதிகளை சேர்ந்தவர்கள் என்ற போதும், சாதிய உயர்வு தாழ்வற்று இந்த நடைமுறைகளை ஏற்று சகல சாதியினரும் இச்சடங்குகளில் பங்கேற்பதை காணக் கூடியதாக இருக்கும். பொலிகண்டி கிராமத்தில் தீண்டாமை நடைமுறையில் இருந்த போதும், கந்தவளக்கடவை கோவிலில் அசல் சமஸ்கிருதமயமாக்கப்பட்ட வழிபாட்டு முறைகளில் பூசைகள் நடந்த போதும் அவ்வூரில் பெரியதம்பிரான் கோவில் பொங்கலுக்குப் பெருமளவில் மக்கள் திரண்டு போவதையும் – இக்கோவிலில் சாதி வேறுபாடுகளுக்கப்பாலான பக்தியுடன் கூடிய வழிபாடு நிலவுதலையும் – நாம் கவனிப்போமானால், சைவ சித்தாந்தத்துக்கு சமாந்தரமாக பலமான ஒரு சுதேசிய வழிபாட்டு முறை – பண்பாட்டு முறை – பலமாக நிலவியதை விளங்கிக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண சமூகம் என்பது போராசிரியர் சொல்வது போல அதிகார அடுக்குடைய சாதிகளை கொண்டதாக, சைவ சித்தாந்த மேலாண்மை கொண்ட சமூகமாக இருந்தது என்பதற்கு சமாந்தரமாக இயங்கிய சாதிய கருதுகோள்களைத்துறந்த சித்தர் பாரம்பரியம் இருந்தது விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். செல்வச் சந்நிதியில் இருந்து புறப்பட்டு வடமாராட்சி கிழக்குப் பகுதியினூடாக கதிர்காமம் நோக்கி கால் நடையாக யாத்திரை செல்லும் யாத்திரிகர் கூட்டம் வழி வழி தங்கிச் செல்லும் தலங்களும் அவர்களினூடு கடத்தப்பட்ட சமயக் கருத்துக்களும் சந்நிதிக்கு கிழக்காக ஏற்படுத்திய தாக்கமும் முக்கிய கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. இவர்களோடு கூட யாத்திரை செல்லும் சித்தர்கள் தங்கிச் செல்லும் இடங்களில் பல விடயங்களை அவதானிக்க கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. யோகாசனம், நிஸ்டை, யோகானந்தம் பற்றிய கலந்துரையாடல், (அவர்களிடம் "ஜீவப் பிரமைக்குரிய வேதாந்த ரகஸ்யம்" என்ற ஒரு லி:.கோ டிக்சன்றியை ஞாபகமூட்டும் தடிமனான புத்தகம் புழக்கத்திலிருந்தது எனக்கு ஞாபகம்) என்பவற்றுடன் கூடிய பாடல், ஆடல் மற்றும் கஞ்சா புகைத்தல் என்பன இவர்களிடையே பழக்கத்தில் இருந்தது. சித்தர்பாடல்கள் இவர்களது வழிகாட்டும் தத்துவமாக இருந்தது முக்கியம். பதினெண் சித்தர்களது பாடல்களை இவர்கள் பாடுவதை கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த விடயத்தை ஏன் சொல்கிறேன் என்றால், இவர்களது பாதையாக இருந்த பிரதேசங்களில் நிலவிய பண்பாடுகள் பெரிதும் சைவ சித்தாந்த சமஸ்கிருதமயமாக்கல் பீடிப்பில் இருந்து விடுபட்டவையாக இருந்திருக்கின்றன என்பதைக் குறிக்கவே.

உண்மையில் "யாழ்ப்பாணம்" என்று குறிப்பிடும் சமூகம் பல்வேறு தனித்துவமான கருத்துக்கள், வாழ்வு முறைகள், கலை கலாசார வடிவங்களை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு குழுக்களின் தொகுப்புச் சமூகமாகவே இருந்து வந்திருக்கிறது. உற்பத்தி முறை மாற்றம், மரபு முறை விவசாயத்தில் வீழ்ச்சி, இலவசக் கல்வி என்பன சாதிய, தீண்டாமை விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் சமூகக் குழுக்களின் மேல் நோக்கிய மற்றும் பரவலான அசைவியக்கத்தினை துரிதப்படுத்துபவையாக அமைந்தன. இவை பண்பாட்டு அமைப்புக்களில் பாரிய மாறுதல்களை ஏற்படுத்த தொடங்கின. நாம், நமக்கு, நம்மடை போன்ற சொற்கள் முன்னிலைச் சொற்களாகப் பயன்படுத்தப்பட்ட "குடிமை"களின் மொழி நீங்கள், உங்களுக்கு, உங்கட என்று மாறி வந்தமை இந்த மேல் நோக்கிய பெயர்வின் ஒரு வெளிப்பாடே. சாதிப் பெயர்கள் தொழில்சார் பெயர்களாக (வண்ணான் – சலவைத் தொழிலாளி, அம்பட்டன் – சவரத் தொழிலாளி, தச்சன் – தச்சுத் தொழிலாளி, கரையான் – கடற் தொழிலாளி என்று) மாற்றம் பெற்றதும், குடிமைகளை தொடர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார வலுவை வேளாள சமூகம் – விவசாய தொழிலின் வீழ்ச்சியால் – இழந்து வந்ததும் மேல் நோக்கிய அசைவியக்கத்தின் ஒரு அம்சம்தான். இவ் அசைவியக்கத்தில் சாதி ரீதியில் கீழ் மட்டத்தில் இருந்தவர்கள் பொருளாதார ரீதியில் மேல் நோக்கி நகர்ந்த அதேவேளை, உயர் மட்டத்தில் இருந்த வேளாளர் கீழ் நோக்கி வீழ்ந்ததும் உற்பத்தி முறை மாறியதால் ஏற்பட்ட உறவுமாற்றமும் பண்பாட்டு அம்சத்தில் இருந்த இறுக்கங்களை விட்டுக் கொடுக்க காரணமாக இருந்தன.

தீண்டாமை அதிக ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளாக கிராமங்கள் இருக்க நகர்ப்புறங்கள் மற்றும் (காங்கேசன்துறை போன்ற) தொழிற்சாலைகளை அண்டிய பகுதிகளில் அவை உடைந்து போனதும் இதனை புரிந்து கொள்ள உதவும் எனலாம்.

ஆக, யாழ்ப்பாணத்தான் என்ற சொல்லால் அர்த்தப்படுத்தப்பட்டவன், படித்த உத்தியோகத்தை நாடிச் சென்ற மத்தியதர வர்க்கமும், தெற்கு நோக்கி வியாபாரத்திற்காகச் சென்ற விவசாயிகளும் தமது அடையாளங்களை காட்டிக் கொள்ளவும், தனித்துவங்களைப் பேணவும் பயன்படுத்திய சைவத் தமிழ் பண்பாட்டு செயற்பாட்டின் வெளிப்பாடே என்று கொள்வதே பொருத்தமானது. இந்த யாழ்ப்பாணத்தார் என்ற கோட்பாடு ஒரு இறுகிப்போன முழுச் சமூகத்திற்குமான ஒரு பொதுப் போக்காக இருந்திருந்தாக கொள்ள முடியாது. யாழ்ப்பாண வழக்கில் இருந்த கூத்துக்கள், ஒப்பாரிகள், பில்லி சூனியக் கட்டுக்கதைகள், தாலாட்டுக்கள் என்பவை ஏற்படுத்திய சமூக ஒழுக்கவியல் பெறுமானங்கள் மிகவும் முக்கியமானவை. சூரன்போர், மானம்பூ போன்ற நிகழ்வுகளை முழுக்க முழுக்க சைவ சித்தாந்த மரபின் வெளிப்பாட்டு வடிவங்களாக கொள்ள முடியும் என்று என்னால் நம்பமுடியவில்லை. கந்தபுராணம் ஒரு படலமாக அமைந்த அதேநேரம் சூரன்போர், மானம்பூ நிகழ்வுகள் மக்களின் நினைவுகூரல் சடங்குகளில் ஒன்றாகவே அதிகம் நிலை நின்றதெனலாம். யுத்தமும் யுத்த தர்மங்களும், நியாயங்களும் இயல்பான வாழ்வின் அம்சங்களாகவும், பண்பாட்டின் அங்கங்களாகவும் பேணப்பட்டமையும், மக்களைக் காக்கும் கடவுளர் யுத்த சன்னத்தரிகளாக நடைமுறை மனிதர்களுக்கு நெருக்கமாக இருப்பவர்களாக இருந்த அற்புதங்களை விட அதிகம் விரும்பப்படும் ஒன்றாக இருந்தது எனலாம். ஆயுதங்களை (சூலமோ, வேலோ, பொல்லோ, வாளோ) வழிபடுகின்ற மரபின் தொடர்ச்சியாக இன்றைய யுத்தம், இயக்கங்களின் இயல்பு என்பவற்றை கவனித்தல் இன்னொரு சுவாரஸ்யமான ஆய்வுக்கு இடமளிக்கலாம் என்று நான் முன்பொருமுறை எழுதியிருக்கிறேன்)

சமஸ்கிருத மயமாக்கத்தினது இன்னொரு வெளிப்பாடாக அமைந்த தவில், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்கள் உயர் அந்தஸ்துப் பெற்று பறை கீழ் மட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற ஒரு அமங்கல வாத்தியமாக கொள்ப்படுகிற நிலை நிலவிய அதேவேளை வைரவர், வீரபத்திரர் போன்ற சமஸ்கிருத மயப்படாத கோவில் மடைகளில் ஆடல், பேயாட்டல், மற்றும் தெய்வ உருவாப்பெறல் போன்றவற்றில் பறையின் பங்கு முக்கியமானதாக இருந்தது. பறை மிகவும் நுணுக்கமான தாளக்கட்டு அமைப்புக்களையும் ஆழமான கலைச்சிறப்பும் கொண்டு அமைந்திருந்ததை இன்றைய வரலாறு மறந்துவிட்டது. வெடி, வாணம், பறை என்பனவற்றுடன் மடைப்பண்டம் எடுத்து சூலமேந்திய தெய்வத்தின் உருவேறியவாது காவல் வழிகாட்டலில் செல்லும் நிகழ்வு தமிழர் வாழ்வு முறையுடனும் விவசாய உற்பத்தி முறையுடனும் சம்பந்தப்பட்டதாயினும் பல்வேறு சாதிகளிடையேயும் (வெள்ளாளர் உட்பட) நிலவியது முக்கியமான ஒன்றாகும். மடைப்பண்டம் போகும் வழியெங்கும் குத்துவிளக்கேற்றி கிராமத்தவர் வீடுகள் முன்னால் நின்று வரவேற்று உருவாடுவோருக்கு அபிஷேகமும், தெய்வத்திற்கு காணிக்கையும் செலுத்துவதும் வெறும் சடங்கு மட்டுமல்ல அது வாழ்வின் ஒரு அம்சமான பண்பாடாக அமைந்திருந்தது. மடை, பொங்கல் என்பவற்றின் முடிவில் கண்ணூறு கழித்தல், வழிவெட்டல் என்பன விதிமுறைப்படி செய்யப்படுதல் ஒரு பண்பாட்டு அம்சமாக இருந்ததையும் இவ்விடயங்களில் படிக்கப்படும் "பத்ததி" படிப்புக்கள் முக்கியமான சமூக வாழ்விற்கான உண்மைகளை வெளிப்படுத்துவதைக் காணலாம். "கள்ளியிலே பாலில்லாக் காலமும், குருவிக் கிரை கிடையாக் காலமும், கொண்டும் கொடுத்தும், மடையிட்டும் பொங்கலிட்டும், மக்களை வாழ்விக்க வேணுமென்று" தெய்வத்தை வேண்டுகிற இந்த நடைமுறைகள் சமூக வாழ்வின் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துபவை என்பது சைவ சித்தாந்த மேலாதிக்கத்தினுள் அமிழ்ந்து போய்விட்ட தென்பது கவனிக்கப்பட வேண்டும்.

## IV

இனி பேராசிரியரின் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்ட ஒரு சில கருத்துக்களைப் பற்றிய எனது அபிப்பிராயங்களை தெரிவிப்பதுடன் இக்குறிப்பை முடிக்கலாம் என்று கருதுகிறேன். முதலாவதாக யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் இருந்ததாக குறிப்பிடப்பட்டும் ஓரிரு இடங்கள் கட்டுரைகளில் வருவது பற்றி குறிப்பிட வேண்டும். ஆறுமுக நாவலரது வரையறையின்படி இந்துமதம் சைவம், சாக்தலம், சமணம் ஆகிய மதங்களைத் தன் உட்பிரிவாக கொண்ட மதம் என்று குறிப்பிடப்படுகின்றது. ஆயினும், இலங்கையில் சிவ வழிபாடு, விஷ்ணு வழிபாடு, சக்தி வழிபாடு, (அம்பாள் வழிபாடு) நிலவி வந்த போதும் இந்துமதம் என்ற கோட்பாட்டால் இந்தியாவில் வழங்கும் இந்துமதம் என்ற அர்த்தத்தில் இருந்ததாக சொல்ல முடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. சைவ சித்தாந்தம், சைவ சமயம் என்பன பலம் பெற்று இருந்த அளவுக்கு இந்துமத கருத்துக்கள் இருந்தனவா என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும். இந்துமதம் என்பது வெறும் மதம் மட்டுமல்ல அது ஒரு பண்பாடும் பூகோள அரசியலாதிக்க தன்மையும் கொண்ட கருதுகோளுமாகும். இந்தக் கருதுகோளின் அடிப்படை வேதங்களிலிருந்தும் ஆகமங்கள், புராணங்கள் வழியாக மட்டுமன்றி பூகோள அரசியல் வாலாற்றினூடாகவும் கட்டியெழுப்பப்பட்டு வந்த ஒன்றாகும். இலங்கையில் சிவ வழிபாடு, சைவ சமயம், சமய திட்சை, சிவ தீட்சை என்பன இருந்த போதும் சமஸ்கிருத மயமாகும் போக்கு வளர்ந்து வந்தது. இந்துமத "இந்துத்துவ இயல்பு" வெற்றி பெற்ற அல்லது ஆதிக்கம் பெற்ற மதக் கோட்பாடாக வளர்ந்து வந்ததா என்ற கேள்வியுடன் இவ்விடயம் ஆய்வுக்குட்படுத்தப்படல் நன்று. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்திய இலக்கியங்களின் பாதிப்பும் சைவம் என்பது இந்து என ஆங்கில மொழியூடாகப் பேசப்பட்ட மொழி சாந்த குழப்பத்தின் பாதிப்பும் இவ்விடத்தில் இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது எனக் கருதுகிறேன்.

இன்னொரு விடயம் 1939இல் பரவத் தொடங்கிய மாக்சிய சிந்தனை தொடர்பாக பேராசிரியர் குறிப்பிடும் கருத்தாகும். மாக்சியம் ஒரு வன்மையான சமூக பொருளாதாரக் கோட்பாடாக கிளம்பாது புலமை நெறியாக வளரத் தொடங்குகிறது என்றும் அதற்குக் காரணம் அடிப்படை பொருளாதார உறவுகள் மாறாத ஒரு சூழல் இங்கு இருந்தமையே என்றும் ஒரு கருத்தை அவர் முன்வைக்கிறார். பேராசிரியர் புலமை நெறியாக வளர்கிறது என்று சொல்வதை புலமையாளர்களுக்கான அறிவியல் வழிகாட்டும் தத்துவமாக மாக்சியம் வளர்ந்து வந்ததையே குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். இலங்கையில் மாக்சியம் சமூக பொருளாதாரக் கோட்பாடாக வளராதது உண்மைதான் என்றாலும் அதற்குக் காரணமாக பொருளாதார உறவுகள் மாறாத சூழலை சொல்வது சரியானதல்ல என்று கருதுகிறேன். சமூக பொருளாதார உறவுகள் மாக்சியம் வரவேண்டும் என்பதற்காக தாமே மாறுவதில்லை. அவை அவைக்கே உரிய இயங்கியலை அடிப்படையாக கொண்டு மாறுபவை. மாக்சியம் அந்த உறவுகளை புரிந்து கொள்வதற்கான ஒரு கருவியாக, சிந்தனை முறையாக சரிவரப்பயன்படுத்தப்பட்டதா என்பதே கேள்வி. மாக்சியம் இங்கு ஒரு அரசியல் தத்துவார்த்தக் கோட்பாடாக அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் அதைக் கொண்டுவந்தவர்கள் அன்றைய ஜனநாயக தேவைகளுக்கான பேராட்டங்களை அரசியல் புரட்சிப் போராட்டத்துடன் போட்டுக் குழப்பும் சிந்தனையையே கொண்டிருந்தார்கள். இவர்களின் இந்தக் குறைபாடு ஒரு புரட்சிகர அரசியல் கட்சியை கட்டுவதிலோ ஜனநாயக உரிமைப் போராட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதிலோ பலமிக்க தலைமைத்துவ பண்புடன் இயங்க முடியாமல் செய்துவிட்டதென்பதே உண்மை. இதை குமாரி ஜயவர்தன இடதுசாரிக் கட்சிகளின் வரலாறு பற்றிய தனது எழுத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் கட்சியை ஜனநாயக போராட்ட அமைப்பு மட்டத்திற்கு கீழிறக்கியதுடன் ஜனநாயக போராட்டங்களை புரட்சிகர அரசியல் போராட்டமாக மயங்கும் நிலைக்கு இட்டுச் சென்றனர். மாக்சியம், மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், ரொட்ஸ்கி, மாவோ போன்ற தலைவர்களது எழுத்துக்களை "வேதாகமங்களைப் போல" அப்படியே ஒப்பிக்கும் ஒரு விடயமாகவே இங்கு வந்து சேர்ந்தது. அது ஒரு சிந்தனை முறை என்ற விடயத்தையும், எமது நாட்டின் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப அதன் உதவியுடன் எமது போராட்டத்தை நாம் வடிவமைக்க வேண்டுமெனவும் அவர்கள் ஒருபோதும் நினைத்ததில்லை. இலங்கையில் வளர்ந்து வந்த தேசிய இனப்பிரச்சினை தொடர்பான இடதுசாரி சிந்தனைகளின் தவறுக்கான அடிப்படை இங்கே தான் தொடங்குகிறது.

தவிரவும் புலமை மரபு என்பது இடதுசாரி சிந்தனைக்கும் சார்புக்கும் வழிவகுத்ததற்கு அப்பால் அது ஆழம் பெற முடியாமல் போனதற்கும் இதுவே காரணம் எனலாம். சமூக கருத்துப் போக்குகளை மிக இலகுவாக முற்போக்கு, பிற்போக்கு என்று எளிய வாய்ப்பாட்டு வடிவில் வகை பிரித்துவிடும் மேலோட்டமான தத்துவார்த்த அறிவையே இவை சமூகத்தில் தோன்றச் செய்தன.

உண்மையில் இவற்றின் சாதனை, சிந்தனையை பழைய ஆதிக்க வழிமுறையினூடு அல்லாமல் வேறு விதமாகவும் பார்க்கப்பட வேண்டும் என்ற உண்மையை இடித்துரைக்கும் திருப்பு முனைக்கு இட்டுச் சென்றதே என்று தான் நான் கருதுகிறேன்.

முடிவாக, பேராசிரியர் அவர்களது இந்நூல் மிகவும் முக்கியமான ஆவணம். எமது சமூகம் பற்றிய ஆய்வு ரீதியான அறிவும், அவற்றை அறிவதற்கான எழுத்துக்களும் இல்லாமையும்கூட எமது அரசியல் கட்சிகளினதும், இயக்கங்களினதும் திசை விலகல்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது என நினைக்கிறேன். இவ்வாறானதொரு நூல் 80களில் வந்திருந்தால் இதன் அரசியல் சமூக பண்பாட்டுப் பெறுமாணம் மிக அதிகமாக இருந்திருக்கும்.

பரந்துபட்ட பல விடயங்கள் தொடர்பாக பேராசிரியர் நிறைய விடயங்களை எமது சிந்தனைக்கு கொண்டுவந்து விட்டிருக்கிறார். விரிந்த பக்கம் கோடாத பார்வையுடன் சகலதையும் அறிய வேண்டுமென்கிற ஒரு ஆய்வாளருக்குரிய புலமை நெறி நின்று அவர் முன்வைத்துள்ள நிலை எமது சமூக வரலாற்றின் ஒரு பாரிய பங்களிப்பாகும். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் வானம் ஓர் அருவம்

நீண்ட யுகங்கள்
என்னுள் துயிலுற்று
திடீரென விழித்து
எனை உலுக்கும்
உவமானங்கள் அற்ற
உருவம் இது

அநேக நேரங்களில் நான்
விழி விரிந்தே
கனவுகள் காண்கிறேன்
ஓர் அருவமாய்
தேவதையாய்
இன்னும் எதுவெல்லாம்
தம் உரிமைகள் வென்று
சுதந்திரம் பற்றி
பறந்து திரிகின்றனவோ
அதுவெல்லாமாய்
எனைக் கண்டு
மெய் சிலிர்த்துப் போகிறேன்.

கருத்துக்களற்ற
கனவுகளேயாயினும்
இவற்றை நான் காண்கிறேன்
இல்லை காண்பதற்காய்
நான்
கனவுகளைத் தோற்றுவிக்கிறேன்.

என்னுடைய கனவுகளில்
மொழிகளற்ற அவர்கள்.
மொழியிலும்
ஆழங்களற்ற
அசைவுகளிலும் அமிழ்ந்து
நான் சுமைகளைத் துறந்து
மிதந்து கிடக்கிறேன்

என் புனிதமிக்க
இரவுகளில்
வானம் வெடித்துச் சிதறும்
மழையையும்
ஓய்ந்த பின்
சருகுகளில் வீழ்ந்து
நொருங்கித் தெறிக்கும்
துளிகளையும்
மிருகங்களின்
மரண ஓலம் கலந்த
ஒலிக் கலவையையும்
என் முதுகின் பின் எழும்
சில்லூறுகளின்
இரைச்சலையும்
திகில் கலந்த உணர்வுடன்
ரசித்து
நீண்ட கனவுகளுடன்
உறங்கிக் கொள்கிறேன்.

எல்லாக் கனவுகளின்
முடிவுகளின் பின்னும்
என்னுள் நான்
எனைத் தொலைத்து
வானத்தில் ஓர்
விடிவெள்ளியாய்
என் உரிமைகளை
வென்று கொள்கிறேன்
என்றும் ஓர்
கனவுகளில் நடப்பவளாய்.

பெண்ணியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான சிற்றிதழ் சஞ்சிகைச் சூழலில் மூன்றாவது மனிதன் தனித்துவமான அடையாளத்துடன் தொடர்ந்து வெளிவருவது மிகவும் நிறைவைத் தருகிறது. பொதுவாக புகலிடச் சூழலில் வெளிவரும் சிறு சஞ்சிகைகள் பல விடயங்களை உடைத்து, கட்டவிழ்த்து பேசினாலும் அதன் வக்கிரத்தனமான போக்குகள் தமிழ்ச் சூழலுக்கு அந்நியப்பட்டே நிற்கிறது.

மூன்றாவது மனிதன் 9வது இதழில் புகலிடச் சூழலில் உள்ள தமிழர்களின் வாழ்நிலையை பேராசிரியர் சிவத்தம்பியின் புலம்பெயர் தமிழ் வாழ்வு கட்டுரை வெளிப்படுத்தி நின்றது. அவர் புலம்பெயர் தமிழர் வாழ் நிலை பற்றி மேலும் எழுத வேண்டும். அப்போதுதான் இங்குள்ள தமிழ் மக்கள் பற்றிய புனைவுகள் உடைய வாய்ப் பளிக்கும்.

ஒரு சமூகத்தின், அல்லது இனத்தின் மேல் நிலையை பொருளாதாரம் மட்டும் தீர்மானிப் பதில்லை.. அவர்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்களின் வீழ்ச்சியில் நின்று பொருளாதார மேல்நிலை அவர்களை ஒருக்காலும் வெளியே எடுத்து விடமுடியாது!

பொதுவாக தமிழகத்தில் ஈழத்து புலம்பெயர் எழுத்தாளர்களை, புலம்பெயர்ந்தவர்களை வெறும் பண கொடுக்கல் வாங்கல்களுக்காகவும், சந்தை வாய்ப்புகளுக்காகவும் தூக்கிப் பிடிக்கும் மனோநிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஈழத்து அரசியல் இலக்கியத்துடன் எந்தவிதமான பரிச்சயமோ அல்லது குறைந்த பட்ச அக்கறையோ இல்லாது இருந்தவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டு தமிழகத்தில் "விடுப்பில" வந்து இலக்கிய அங்கீகாரம் தேடும் நம் புலம்பெயர் எழுத்தாளர்கள் இனியாவது உண்மை நிலைபற்றி சிந்திக்க வேண்டும்.

நீண்ட காலமாய் மூன்றாவது மனிதன் 3வது இதழிலிருந்து நான் வாசித்து வருகிறேன். இங்கு கனடாவில் உங்கள் பத்திரிகை கிடைப்பது மிகவும் சிரமமாகவிருக்கிறது. இருப்பினும் தேடி வாசித்து விடுவேன். தமிழ் தேசியம் பற்றியும், முஸ்லிம்களின் நிலை பற்றியும், ஈழத்து அரசியல் சூழல் பற்றியும் மேலும் விரிவான தடத்தில் மூன்றாவது மனிதன் காலூன்ற வேண்டும். எதிர்காலத்தில் என் எதிர்பார்ப்பு மெய்படும் என்று நம்புகிறேன்.

சு. மகாதேவன்.
கனடா.

---

ஒன்பதாவது இதழில் உமாவரதாராஜனின் நேர்காணல் படித்தேன்.




மூன்றாவது மனிதனில் வெளிவரும் நேர்காணல்கள் மிகவும் முக்கியமானவை என்றே கருதுகிறேன். எட்டாவது இதழில் சோலைக் கிளியின் நேர்காணலில் பல விடயங்கள் தவற விடப்பட்டுள்ளன. சோலைக் கிளியின் பன்முக ஆளுமை அந்நேர்காணலில் முற்றாக வெளிப்பட வில்லை. ஆனால் ஒன்பதாவது இதழில் உமாவரதாராஜனின் நேர்முகம் இயல்பாகவும் – நேர்மையாகவும் அமைந்திருந்தது.

உமாவரதாராஜன் நமக்குள் வாழ்ந்துவரும் மிகச் சிறந்த படைப்பாளி. கல்முனையில் அவர் ஒரு எழுத்தாளர் என்பதே பல பேருக்குத் தெரியாது. சிங்கர் கம்பனி முகாமையாளர் என்றே அவர் பிரபல்யம். அவரின் உள்மன யாத்திரை சிறுகதைத் தொகுதி வெளிவந்த பின்பே நானும் அவரைத் தெரிந்து கொண்டேன். அவரது படைப்பின் மூலமாகவே அவரைத் தெரிந்த எனக்கு அவரின் நேர்முகத்தின் ஊடாக அவரின் வாழ்க்கை, அவரின் இலக்கிய பார்வை பற்றி அறிய முடிந்தது.

கலை இலக்கியம், சினிமா பற்றிய அவரது பார்வை பலருக்கு ஏற்புடையதாக இல்லாது விட்டாலும் கூட ஒரு கலைஞனின் குரலாக உமாவரதாராஜன் பேசி இருப்பது அவரின் தேடலை வெளிப் படுத்துகிறது. வாழ்க்கைபற்றி, ஒளிவுமறைவின்றி அவர் பேசி இருப்பது நமது போராசியர்கள் தொடக்கம் எழுத்தாளர்கள் என்று பீற்றித் திரியும் பலருக்கு முகம் சுளிக்க வைக்கும் கஷாயமாகத் தான் இருக்கும். இவர்களின் அங்கீகாரத் திற்கு ஏங்காத ஒரு கலைஞனால் இப்படித்தான் பேசமுடியும். அதனை ஒன்பதாவது இதழில் உமாவரதாராஜன் வெளிப் படுத்தி இருக்கிறார்.

பஹீமா ஜஹான், சோலைக்கிளி, எஸ்.போஸின் கவிதைகள் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றன. மஜீதின் கவிதை அவர் ஏதோ ஒரு மிகப் பெரும் துன்பத்தில் வீழ்ந்து இறைவனிடம் தன்னை ஒப்புவிக்கிறார் போலத் தோன்றுகிறது. ஜெய்சங்கரின் கட்டுரை ஈழத்தமிழர் பற்றியும், அவர்களது மொழி மனோபாவம் பற்றிய உண்மைகளைத் தரும் மிகவும் முக்கியமான கட்டுரையாகும். விக்னேஸ்வரனின் சிறுகதை நீண்டு போய்விட்டாலும் அது மிகச் சிறந்த சிறுகதைதான்.

ஏ. உவைஸ்டீன்
மருதமுனை.

---

மூன்றாவது மனிதனின் ஒன்பதாவது இதழில் உங்கள் ஆசிரியர் தலையங்கம் மிகவும் நியாயமானதே. இருந்தும் வெளிப்படையாக நீங்கள் இப்படி ஆதங்கப் பட்டு எழுதியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மனிதனின் ஆயுளை முடித்து விடுமோ என்கிற அச்சம் எனக்குள்ளது. ஒன்பது இதழ்கள் வெளிவந்ததே பெரிய விடயம்.

போருக்குள் வாழ்ந்து பழகிவிட்டோம். மரணத்தினுள் வாழ்வதுதான் வாழ்க்கையாகிவிட்டது. நம்பிக்கைகள் அவநம்பிக்கையாய் மாறிப் போகும் நமது மண்ணில் இப்படியொரு மனவெளிப்பாடு ஆச்சரியப்படத்தக்கது இல்லைதான். வன்னி இருண்ட பிரதேசமாக இலங்கையிலிருந்து தனித்து நிற்கிறது. பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ, புத்தகங்களோ இங்கு கிடைப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

எப்போதாவது நல்ல சஞ்சிகைகள், புத்தகங்கள் கிடைத்தால் பட்டினி கிடந்தவனுக்கு உணவு கிடைத்த திருப்திதான். ஒரே மூச்சில் படித்து தீர்த்து விடுவதுதான் மிகவும் சந்தோசம் தருவதாய் உள்ளது. சமாதானம் வருமென்பதில் நம்பிக்கை மிகவும் குறைந்து கொண்டே செல்கிறது. யாரைக் குற்றம் சொல்வது?

வன்னியிலிருக்கும் எமது நண்பர்களுக்கும் எனக்கும் சரிநிகரும் மூன்றாவது மனிதனும் ஓரளவு வாசிப்பில் திருப்தியைத் தருகிறது. அந்த திருப்தியும் நமது சூழலால் சாகடிக்கப்படும் என்ற நியதி இருப்பின் நாம் என்ன செய்ய முடியும். நாங்கள் வெறும் கையாலாகாதவர்களாகவே இருந்து விட்டோம். இன்றும் இருக்கிறோம். தொடர்ந்தும் உங்கள் இதழை கொண்டு வாருங்கள் என்று மட்டுமே இப்போது எழுதமுடியும் எங்களால்.

எஸ்.கணேசன்+நண்பர்கள்
முல்லைத்தீவு

---

அதற்குக் காரணம் கேட்கப்பட்ட கேள்விகள். சம்பிரதாயங்களை மீறி அவரிடம் ஆரோக்கியமான கேள்விகள் கேட்கப்படவில்லை. அவர் சமூக பிரக்ஞை உள்ள படைப்பாளி என்பதை நிராகரிப்பது போன்றே கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. ஒரு கவிஞனை ஒரு கவிஞன் என அடையாளம் காண்பது சரியில்லை. அதனைத் தாண்டி அவனது சமூக அக்கறைகளை தெளிவுபடுத்தும் வகையிலும் அவனது சமகால் நிலைப்பாடுகள் குறித்து நிற்பதுமான கேள்விகளுமே கேட்கப்படவும் வேண்டும். செ.யோகநாதனின் பேட்டியில் அவருடைய தீர்க்கமான கருத்துக்களை உணாமுடிந்தாலும் அவர் தன்னை அறியாமலேயே தன்னுடைய தளம்பல்களையும் வெளிப்படுத்துகின்றார்.

சுந்தரராமசாமியின் சுயஅறிமுகம் உண்மையில் வரவேற்கத்தக்கது. அவர் தன்னுடைய சுய தளத்தின் உணர்வுகளை தெளிவாக பதிவு செய்திருக்கின்றார். எஸ். நஸீருதீனின் மறைத்தலின் அழகு சிறுகதை நேரிய மொழியில் இயல்பு நிலையை சிறப்பாக சொல்லியிருக்கிறது.

மூன்றாவது மனிதனின் கவிதைகள் உண்மையில் சிறப்பாகவே வந்துள்ளன. கந்தன் கருணை நாடகப்பிரதி இதழில் சேர்க்கப்பட்டது இதழின் காத்திரத்தை மேலும் மெருகூட்டியிருக்கிறது.

சித்தாந்தன்
புதுக்குடியிருப்பு

---

இதழ்களும் உண்மையில் இலக்கியப் பணி செய்கின்றனவா என்பது கேள்விக் குறியே. ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையேனும் ஒரு தனிமனிதனது உழைப்பினால் வெளிவருவது எம்மைப்போன்று சனசஞ்சாரமற்ற பிரதேசத்தில் வாழும் இலக்கிய வாசகர்களுக்கு பேருதவியாக இருக்கின்றது.

1985 அளவில் எமது இலக்கிய வட்டக் கூட்டமொன்றில் ஜேம்ஸ் ஜொய்ஸ்சை நான்கு முகமாகப் பார்க்கும் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியிருந்தோம். "ஒரு நவீனத்துவ வாதியின் உருவாக்கம்" என்ற கட்டுரை தமிழில் வந்துள்ளது ஆங்கிலம் அறியாதவருக்குப் பேருபகாரமாகும். தங்கள் பணி தொடர்க. தங்கள் பழைய இதழ்கள் அனைத்தைம் வாசித்துப் பயனடைய விரும்புகின்றோம்.

"அலை" சஞ்சிகை ஆசிரியர் அ.யேசுராசா உங்கள் ஆசிரியர் தலையங்கம் தொடர்பாக கூறியவை.

........"மன அவசத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறேன்." என்பதைச் சுட்டிக்காட்டி, பௌசரின் நிலையை நன்றாகப் புரிந்து கொள்கிறேன். தேக்கமடைந்துள்ள இலங்கை எழுத்துச் சூழலுக்கு ஒரு உத்வேகம் கொடுக்க எடுக்கும் உங்கள் முயற்சி பாராட்டற்குரியது. ஆனால் இன்றைய இலங்கை எழுத்தாளரில் பலபேர் சுயநலமும் புகழ் விருப்பும் உள்ளவராய் தங்கள் பயன் எதிர்பாரா முயற்சியைப் புரிந்து நன்றியுள்ளவர்களாய் இருப்பரோ? என தெரிவித்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆ.சபாரத்தினம்
நாரந்தனை.

---

மூன்றாவது மனிதன், 6,7,8 என கிரமமாகப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது மூன்று இதழ்களிலும் ஒரு படி முறையான வளர்ச்சியை உணாமுடிகிறது. இதழ் 8 பற்றி சொல்ல வேண்டும்.

சோலைக்கிளியின் கவிதைகள் ஏற்படுத்திய எதிர்பார்ப்புணர்வை பேட்டியில் காணமுடியாமல் போயிற்று.

தங்கள் ஒன்பதாவதிதழ் ஆசிரிய தலையங்கத்தை வாசித்தோம். ஆக்க இலக்கியம் படைக்க வேண்டும் என்ற துடிப்புள்ள ஒருவருக்கு சஞ்சிகை உற்பத்தியில் அலைந்து திரிவது உண்மையில் ஒரு பெரிய இழப்பே. கொழும்பு வார இதழ்களும், இலக்கிய சஞ்சிகை எனத் தம்மை வெளிக்காட்டிக் கொண்டு வெளிவரும்

ஒன்பதாவது இதழில் இரு சிறு கதைகளின் அச்சுப்பதிவும் ஆழமாகப் பதியாமல் வெளிறித் தெரிந்தன. கஷ்டப்பட்டே வாசித்தேன். ஆனாலும் விக்னேஸ்வரனின் கதை இப்படி கஷ்டப்பட்டு வாசித்தாலும் தகும் எனத் தோன்றியது.

உமா வரதராஜனின் பேட்டி, மனதில் பதிவதற்கு அது வெளிப்பூச்சுக் களற்று யதார்த்தமாக அமைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாயிருக்கலாம். 8ம் இதழில் வெளிவந்த யோகநாதனின் பேட்டிக்கும் இதற்கும் இதுவே பெரிய வேறுபாடு என்று தோன்றுகின்றது.

இ. சடாட்சரதேவி
தொண்டைமானாறு.

---

மூன்றாவது மனிதன் 9வது இதழ் படித்தேன். ஆசிரியர் உரை மனதில் தேங்கியிருந்து சொல்லொண்ணா மன அழுத்தத்தை தருகிறது. உண்மையில் ஈழத்து போர்ச்சூழலில் குடும்பம், சமூகப்பணி என்பன வற்றுக்கிடையில் ஒரு தனிமனித முயற்சியாக இவ்வாறான இலக்கிய சஞ்சிகையொன்றை தொடர்ந்து வெளியிட்டு வருவதென்பது சாமான்ய விடயமல்ல. அதற்கு மிகுந்த ஓர்மம் தேவை. இலக்கியமும், தீவிர எழுத்தும் விலை போய்க் கொண்டிருக்கும் இத்தருணத்தில் மூன்றாவது மனிதன் போன்ற சஞ்சிகைகளின் தொடர் வருகை சற்று ஆறுதல் தருகின்றது.

உமாவரதராஜனுடனான நேர்காணல் நல்ல பல விடயங்களை அறியக்கூடியதாகவும் இருந்தது. அவருக்கேயுரிய அங்கதச்சுவையுடன் பல்வேறு கருத்துக்களை மிகத் தைரியமாக முன் வைத்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. சில விமர்சகர்கள் புதியவர்களின் நல்ல நூல்களை தேடிப்படிக்காமல் கிளிப்பிள்ளை போல் குறிப்பிட்ட பெயர்களையே மனப்பாடமாக ஒப்புவித்துக் கொண்டிருப்பது வருந்தத்தக்க விடயமே.

மாற்றுக் கருத்துக்களையும் விமர்சனங்களையும் இன்னும் இன்னும் நமது இலக்கியச்சூழல் எதிர்கொள்ளவில்லை. இதில் மூன்றாவது மனிதன் விதிவிலக்காக உள்ளது. மாற்றுக் குரல்களையும், அவற்றின் எதிரொலிகளையும் மூன்றாவது மனிதன் பிரதிபலித்து வருவது மிகுந்த நம்பிக்கையூட்டுகிறது. கருத்தைக் கருத்தால் எதிர்கொண்டு மாற்றுக் கருத்துக்களை நாகரீகமாக உள்வாங்கும் ஒரு மனப்பக்குவத்தை படைப்பாளியிடத்திலும், வாசகரிடத்திலும் மூன்றாவது மனிதன் செவ்வனே விதைத்து வருகிறான். இப்பணி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

9வது இதழில் கவிதைகள் இயல்பாகவும், சிறப்பாகவும் உள்ளன. அவை ஊமை நெஞ்சின் காயங்களின் உரையாடல் எனின் மிகையல்ல. சிறுகதைகளை பொறுத்தவரை காலங்காலமாக செயற்பட்டு வரும் பாத்திரங்களுக்கு சற்று மெரு கேற்றியிருக்கின்றார்கள். மொழியும் நடையும் வாசிக்கும் போது சலிப்பின்றி தொடர உதவுகின்றது. மொத்தத்தில் உங்கள் கடின முயற்சியையும், தீவிர உழைப்பையும் தரிசிக்க முடிகிறது. இதுவே எம்மையும் மூன்றாவது மனிதனை ஆழ்ந்து படிக்கவும் கருத்துப் பரிமாறவும் சிந்திக்கவும் தூண்டுகிறது.

ஓட்டமாவடி அறபாத்

---

செப்டம்பர் தமிழ் இனியில் கலந்து கொண்ட போது மூன்றாவது மனிதன் 9வது இதழை பார்க்க நேரிட்டது. தங்கள் ஆசிரிய குறிப்பில் சொன்னது போல் மிகப்பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இது போன்றதொரு இலக்கிய சஞ்சிகையை விடய கனத்தோடும் சிறப்பாகவும் கொண்டு வருவதென்பது மிகவும் கஸ்டமான பணிதான். உங்கள் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

9வது இதழைப் பார்த்ததும் இதன் முந்திய இதழ்களையும் பார்க்க வேண்டுமென்ற தேடல் எழுந்துள்ளது. 9வது இதழில் கா. சிவத்தம்பியின் புலம்பெயர் தமிழர் வாழ்வு, உமாவரதராசனின் நேர்காணல் மிக முக்கியமானவை. விக்னேஸ்வரனின் மௌனிக்கின்ற சுமைகள் சிறுகதை முதிய தம்பதிகளின் சொல்ல முடியாத துயரங்களை சொல்லோட்டமாக்கியுள்ள விதம் என் மனதை வெகுவாகப் பாதித்து விட்டது. அற்புதமான கதை என்று சொல்வதுகூட தவறு. அனுபவம், நிதர்சனம் என்று சொல்லலாம். கவிதைகளும் சோடை போகவில்லை. மிகத்தரமான தேர்வு.

பிரேம் ஆனந்த்
தமிழ்நாடு.

சேகரம்

ஈழத்து தமிழ்ச் சூழலில் கலை, இலக்கிய வாசகர்களின் பார்வைக்கு கிட்டாத முக்கியத்துவமிக்க படைப்புகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகளின் தொகுப்பு.

மாத இதழ்
மார்ச் மாதத்திலிருந்து வெளிவருகிறது..

தொடர்புகளுக்கு :
மூன்றாவது மனிதன் பதிப்பகம்
**37/14, Vauxhall Lane, Colombo - 02, Sri Lanka.**
**T.P. : 01-302759, E-mail : 3man@sltnet.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - வரவு - வரவு - வரவு - வரவு



"பனிவயல் உழவு" - மிகவும் முக்கியமான தமிழின் பதிவு. மறந்து தொலைக்க முடியாத ஈழத்து நேற்றைய தமிழ் வாழ்வினதும் இன்றைய புலம்பெயர் வாழ்வினதும் தளங்களிலிருந்து எழும் ஒரு மனிதனின் வாக்கு மூலமே இத்தொகுதியிலுள்ள திருமாவளவனின் கவிதைகள். ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் நவீன படைப்பாளி வரிசையில் மிகவும் முக்கியமாக பேசப்பட்டிருக்க வேண்டியவர் திருமாவளவன். ஏனோ தெரியவில்லை அதிகம் அறியப்படாத கவிஞராகவே இவர் இருந்திருக்கிறார். இத்தொகுதி வெளிவந்துள்ளதன் பின்னாவது ஈழத்து நவீன தமிழ்க் கவிதைப் படைப்பாளிகளில் முக்கியமானவராக இவர் பேசப்படாது விட்டால் ஈழத்துத் தமிழ்ச் சூழலை 'சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்படும். ஒளிப்படம் போல் யதார்த்தமான வாழ்வை கவிப்படம் பிடித்திருக்கிறார்.

"போர் தவிர்த்து / நீள் பயணம் நடந்து / நெடுநாள் கழிந்தும் / காலடிக்கீழ் / பெருநிழலாய்த் தொடர்கிறது / போர்." என தன் வாழ்வை தன் கவிதையினூடாகச் சித்தரிக்கிறார் திருமாவளவன். எக்ஸில் வெளியீடாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

**திருமாவளவன்**
90, Eastdele Ave # 1401,
Toronto, ON, M4C5A2,
Canada.



**கி.பி.அரவிந்தன்**
France.

கி.பி. அரவிந்தனின் மூன்றாவது கவிதைத் தொகுதி இது. கி.பி. அரவிந்தன் ஈழத்திலும் தமிழகத்திலும், புலம்பெயர் சூழலிலும் நன்கு அறியப்பட்டவர். "இனி ஒரு வைகறை" "முகம் கொள்" என்பன இவரது மற்றிரு கவிதைத் தொகுதிகளாகும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி - இன்றும் புலம்பெயர் நிலையிலும் அதனை நேசிக்கும் ஒருவராகவே தன்னை தனது கவிதையினூடாக வெளிப்படுத்தி நிற்கிறார்.

"பெருங்காயம் வறுத்தசட்டியென/ மண் மணம் மாறாமல் அல்லாடி/ வேக்காட்டில் வறுபட்டபடியே/ ஒண்டிக் கொண்ட இடமெல்லாம் / தன் தேசமெனக் கொள்ளும் / எம்மவர் மூடத்தனம் பற்றியும் / அதனை அவர்கள் நிறுவிக் காட்டும் / வெட்கம்கெட்ட சாகசம் பற்றியும் / நினைத்து நினைத்து வதையுற நேரிடும் / இப்படி..." என்கிறது இத்தொகுதியிலுள்ள கவிதைகள்.

"இத்தொகுப்பிற்கு கனவின் மீதி எனத் தலைப்பிட்டது பல்வேறு வகைகளில் பொருத்தமானது என்றே கருதுகின்றேன். 70களின் பின்னான புலம் பெயர்வுகள் தனியே அரசியல் சார்ந்தது என்பது எங்களின் சிலரின் வசதிக்குரிய காரணமே தவிர அது அவ்வாறானதல்ல, உண்மை வேறானது என்பது எனது எண்ணம் அது வெளிநாடு என்று படித்த குழாத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட லண்டன் கனா ஒன்றினதும் தொடர்ச்சியேயாகும் என்கிறார் கி.பி. அரவிந்தன் தனது முன்னுரையில்..



அம்மா
S. Manoharan (ESC.13)
210, Ave. du 8 mai 1945
93150 Le Blanc Mesnil
France



ப்ரவாகம்
(ஒக்.-டிசம். 2000)
No 9, Matala Road,
Ukuwela.



எக்ஸில்
(இதழ் 10)
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது மனிதன் பதிப்பக வெளியீடுகள்



**ஈழத்துத் தமிழிலக்கியத் தடம்**
கா. சிவத்தம்பி
விலை 210/-



**பலஸ்தீனக் கவிதைகள்**
எம்.ஏ.நுஹ்மான்
விலை 200/-



**எல்லை கடத்தல்**
ஔவை
விலை 100/-



**இலங்கையில் இனக்குழும அரசியல்**
சி.அ.யோதிலிங்கம்
விலை 100/-



**கபாலபதி**
திசேரா
விலை 100/-

U.K Printerss : 344046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org